இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 52 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 13 – சனிக்கிழமை 30 செப்டம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 52: Thiruvalluvar Year - 2054 - Purattasi 13 - Saturday 30 September 2023 - Chennai 16 Pages ₹5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.9.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழியாக தலா 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.9.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் 500 கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை, அணிகலன்கள் வாங்கிட தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 5 கிராமியக் கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான காசோலைகளையும், நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 1000 கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3000/– நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 4 கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான ஆணைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் – வறிய நிலையில் உள்ள

# 10 கலைமாமணி விருதாளர்களுக்கு - தலா ரூ. 1 லட்சம் பொற்கிழி!

## 500 கலைஞர்களுக்கு ரூ.50 லட்சம் - மூத்த கலைஞர்கள் 1000 பேருக்கு மாதந்தோறும் ரூ.3000

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப். 30 -**

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு ரூ.1 இலட்சம் பொற்கிழி - தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 500 கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட ரூ.50 இலட்சம் நிதியுதவி - நலிந்த நிலையில் வாழும் 1000 மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000/ நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.9.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழியாக தலா 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளையும், 500 கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை, அணிகலன்கள் வாங்கிட தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 5 கிராமியக் கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான காசோலைகளையும், நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 1000 கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3000/ நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 4 கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான ஆணைகளையும் வழங்கினார்.

**முத்தமிழறிஞர் கலைஞரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது!**

தமிழ்நாடு அரசால் 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கமானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில், 1973ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கலை பண்பாட்டுத் துறையின் ஓர் அங்கமாகத் திகழும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் தொன்மையான கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், அழிந்து வரும் கலைவடிவங்களை ஆவணமாக்குதல், நாடகம், நாட்டிய நாடகங்களுக்கு புத்துயிர் அளித்தல், தமிழக பாரம்பரிய கிராமியக் கலைகளை வெளி மாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல், தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு அளிக்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

**வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு ரூ.1 இலட்சம் பொற்கிழி வழங்குதல்**

2021-22ஆம் ஆண்டிற்கான சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையில், கலைமாமணி விருது பெற்றவர்களில், வயோதிக நிலையில், பொருளாதாரத்தில் நலிந்து, இன்னலில் வாழ்கின்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக தற்போது வழங்கப்படும் பொற்கிழித் தொகை ரூ.50,000/லிருந்து ரூ.1 இலட்சம் ஆக உயர்த்தி 10 கலைஞர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன்படி வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2022-23ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களான கே.கல்யாணசுந்தரம், ச.சமுத்திரம், திருமதி என்.பார்வதி உதயம், கே. குமரவேல், பா.முத்துசந்திரன், திருமதி கோ.முத்துலட்சுமி, பி.ஆர்.துரை, ரா.கல்யாணசுந்தரம், எம்.எஸ்.முகமது மஸ்தான், திருமதி டி.என்.வரலட்சுமி ஆகியோருக்கு பொற்கிழித் தொகையாக தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## அ.தி.மு.க. ஆட்சியில் நாட்டையே உலுக்கிய வாச்சாத்தி பாலியல் வன்கொடுமை வழக்கு!

# 215 குற்றவாளிகளுக்கான தண்டனை உறுதி!

## சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு!

*சென்னை, செப். 30-*

*வாச்சாத்தி மலைக் கிராம மக்கள் மீதான வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்கில், 215 பேர் குற்றவாளிகள் என தருமபுரி மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது.*

*தருமபுரி வாச்சாத்தி வன்கொடுமை வழக்கில் 215 பேருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் தண்டனைக்கு எதிரான மேல் முறையீட்டு மனுக்கள் நேற்று (செப்.29) சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தன. மனுக்களை விசாரித்த நீதிபதி பி.வேல்முருகன், அவற்றை தள்ளுபடி செய்ததோடு தருமபுரி மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்வதாகக் கூறினார். மேலும் பாதிக்கப்பட்ட 18 பெண்களுக்கும் தலா ரூ.10 லட்சம் நிவாரண நிதி வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.*

*இது தொடர்பாக பாதிக்கப் பட்ட மக்கள் தரப்பு வழக்கறிஞர் இளங்கோ அளித்த ஊடகப் பேட்டியில், "கடந்த 1992ல் நடந்த வாச்சாத்தி வன்கொடுமை வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் மேல் முறையீட்டு மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்துள்ளார். தருமபுரி நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்துள்ளார். பாதிக்கப்பட்ட 18 பெண்களுக்கு ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்குமாறு அரசுக்கு உத்தரவிட்டுள்ளார். இதில் ரூ.5 லட்சம் அரசாங்கமும், ரூ 5.லட்சம் பாலியல் வன்கொடுமை செய்தவர்களிடமிருந்து வசூலித்தும் தர வேண்டும் உத்தரவிட்டுள்ளார். அப்போதைய தருமபுரி ஆட்சியர், எஸ்.பி., வன அதிகாரி மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவர்களின் குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என நீதிபதி வலியுறுத்தியுள்ளார். இவை மட்டுமல்லாது அப்பகுதியில் தேவைப்படும் மக்கள் நலப் பணிகளை செய்துதர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்" என்றார்.*

**வழக்கு பின்னணி:**

*தருமபுரி மாவட்டம் அரூர், பாப்பிரெட்டிப் பட்டி நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ள கல்வராயன் மலைத்தொடரின் அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது வாச்சாத்தி மலைக்கிராமம். பெ.தாதம் பட்டி ஊராட்சிக்குட் பட்ட இக்கிராமத்தில் 1992ம் ஆண்டு சுமார் 655 பேர் வசித்து வந்தனர். இவர்களில் 400க்கும் மேற்பட்டவர்கள் விவசாயம் மற்றும் வனத்தை சார்ந்து வாழும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள்.*

*வாச்சாத்தி கிராமப் பகுதிகளில் கடந்த 1992ம் ஆண்டு ஜுன் 20ம் தேதி சந்தனமரம் வெட்டிக் கடத்தல் மற்றும் விற்பனை செய்வதாகக் கூறி 155 வனத்துறையினர், 108 போலீஸார், 6 வருவாய் துறையினர் என 269 பேர் உள்ளடங்கிய கூட்டுக் குழுவினர் சோதனையிட்டனர். வீடு,வீடாக நடத்தப் பட்ட சோதனையில் அங்கிருந்த சில வீடுகள் மற்றும் ஏரிப்பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சந்தனக்கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக அங்கிருந்த 90 பெண்கள் உள்பட 133 பேர் கைது செய்யப் பட்டனர்.*

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையில்

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட "தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்" 01.10.2023 (ஞாயிற்றுக் கிழமை), காலை 10.30 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 30-09-2023

# இளையோர் நல அரசு

புதிய புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதன் மூலமாக இளையோர் நல அரசாக உயர்ந்து காட்சி அளிக்கிறது தி.மு.க. அரசு!

10 ஆயிரத்து 205 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "அடுத்த இரண்டு ஆண்டுகளில் 50 ஆயிரம் பேருக்கு அரசு வேலை" என்று அறிவித்திருப்பது, இளைஞர்களுக்கு புதிய உற்சாகத்தை அளித்து வருகிறது.

கடந்த 27 ஆம் தேதி அன்று முதலமைச்சர் கலந்து கொண்ட அரசு விழா என்பது நம்பிக்கை அளிக்கும் விழாவாக இளைஞர்களுக்கு அமைந்துள்ளது. அந்த விழாவில் பல்வேறு அரசுத் துறைகளுக்கான தட்டச்சர்களாக 3,339 பேருக்கும், இளநிலை உதவியாளர்கள் 5,278 பேருக்கும் என மொத்தம் 8,617 பேருக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. கிராம நிர்வாக அலுவலர்கள் 425 பேர், வரி விதிப்போர் 67, புல உதவியாளர் 19, சுருக்கெழுத்து தட்டச்சர் 1,07 பேர் - எனவும் பணி ஆணைகள் வழங்கினார் முதலமைச்சர் அவர்கள். ஒட்டுமொத்தமாக 10 ஆயிரத்து 205 பேர் பணி ஆணைகளைப் பெற்றுள்ளார்கள்.

"இந்த அரசு அமைந்த கடந்த இரண்டாண்டு காலத்தில் 12,576 பேருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 10,205 நபர்களுக்கும் அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், நடப்பாண்டில் மேலும் சுமார் 17,000 பேருக்கு பல்வேறு அரசுப் பணிகள் வழங்கப்பட உள்ளன. அடுத்து வருகின்ற இரண்டாண்டுகளில், பல்வேறு அரசுப் பணிகளுக்கு சுமார் 50,000 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்" என்று மாண்புமிகு முதலமைச்சர் செய்துள்ள அறிவிப்பு, இளைய சமுதாயத்துக்கு மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

**தமிழ்நாட்டு இளைஞர்களை, மாணவச் செல்வங்களை தகுதி, திறமை, அறிவு, ஆற்றல் படைத்தவர்களாக ஆக்குவதுதான் திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படை நோக்கம் ஆகும். அதற்காகத்தான் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கினார்கள்.**

**பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சியைத் தொடர்ச்சியாக வழங்கி வருகிறார்கள். நான்காம் தலைமுறை தொழில்வளர்ச்சிக்கு (Industry 4.0) ஏற்ப நமது தொழிலகங்களையும், தமிழ்நாட்டு இளைஞர்களையும் தயார்படுத்திட வேண்டும் என்பதில் முதலமைச்சர் அவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். கடந்த ஆண்டு 10 லட்சம் இளைஞர்களுக்கு இப்பயிற்சி அளிப்பதாகத் திட்டமிடப்பட்டது. 13 லட்சம் மாணவர்கள், இளைஞர்கள் இந்தப் பயிற்சியைப் பெற்றுள்ளார்கள்.**

தொழிலாளர் நலத்துறை சார்பில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கும் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் அது நடைபெற்று வருகிறது. சென்னையில் நடைபெற்ற விழாவில் ஒரு லட்சமாவது பணி ஆணையை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

பெரிய நகரங்கள், சிறிய நகரங்கள் என்று பிரித்து அதற்குத் தகுந்த அளவில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. கடந்த இரண்டரை ஆண்டுகளில் 1,402 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் இதுவரை 32 ஆயிரத்து 776 நிறுவனங்கள் பங்கெடுத்துள்ளன. இதுவரை நடந்த முகாம்களில் 1 லட்சத்து 66 ஆயிரத்து 63 பேர் பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளார்கள்.

கழக அரசு அமைந்த பிறகு புதிய தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன் வந்துள்ளன. அந்த நிறுவனங்களுடன் முதலமைச்சர் அவர்கள் ஒப்பந்தம் செய்துள்ளார்கள். கடந்த 2 ஆண்டுகளில், 240 முதலீட்டுக் கருத்துருக்கள் மூலம், 2,96,681 கோடி ரூபாய் முதலீடு ஈர்த்துள்ளது. 4,14,836 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வருகிற சனவரி மாதம் நடத்திட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்மூலமாக பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டுக்குள் வரும். இதன்மூலமாகவும் வேலைவாய்ப்புகள் நிறையக் கிடைக்கும்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கியப் பங்கு அளித்திடும் விதமாக, 2030ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார்கள். இந்த இலக்கினை அடைந்திட, 23 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்திட வேண்டும். 46 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிட முடியும். மாநிலத்தில் சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதிசெய்யும் விதமாக, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இந்தத் திட்டங்கள் பரவலாக அமைக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்துமே இளைஞர்களின் எதிர்காலத்தை மனதில் வைத்து தீட்டப்படும் திட்டங்கள் ஆகும்.

> "வேலை இல்லை என்ற நிலையும் இருக்கக்கூடாது; வேலைக்குத் திறமையான இளைஞர் இல்லை என்ற நிலையும் இருக்கக் கூடாது என்று நான் உத்தரவிட்டுள்ளேன். வேலை வாய்ப்புகளை உருவாக்குவது; வேலைக்குத் தகுதியான இளைஞர்களை உருவாக்குவது - என்ற சக்கரச் சுழற்சியுடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. வேலையின்மையும் இருக்கக் கூடாது; வேலை இழப்பும் இருக்கக் கூடாது என்றும் உத்தர விட்டுள்ளேன்" என்று முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலத்துறை நடத்திய வேலைவாய்ப்பு முகாமில் பேசும்போது கடந்த ஆண்டு குறிப்பிட்டார்கள்.

**அரசுத் துறையில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது; தனியார் துறையிலும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது; இரண்டு துறைகளுக்கும் தகுதியானவர்களாக இளைஞர்களை உருவாக்குவது - ஆகிய மூன்று இலக்குகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு, இளையோர் நல அரசாக நடத்திக் காட்டி வருகிறார்கள்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.09.2023) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 56 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 புதிய மீன் இறங்கு தளங்கள், 2 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நாகப்பட்டினம் மீன்வள பொறியியல் கல்லூரியில் 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி, தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் என்.பெலிக்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மீன்வளம் - மீனவர் நலத்துறை சார்பில் ரூ.71.60 கோடியில்

# மீன் இறங்கு தளங்கள் - மீன் விதைப் பண்ணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, செப். 30 - மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.71.60 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள், மீன் விதைப் பண்ணை மற்றும் மாணவர், மாணவியர் விடுதிக் கட்டடங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.09.2023) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 56 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 புதிய மீன் இறங்கு தளங்கள், 2 மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நாகப்பட்டினம் மீன்வள பொறியியல் கல்லூரியில் 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

மீன்வளத்தை பாதுகாத்தல், நிலைக்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு நிதி யுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல், புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட வும், சமூக பாதுகாப்பினை உறுதி செய்திட வும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள் மற்றும் மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தல்**

கன்னியாகுமரி மாவட்டம், குறும்பனையில் 30 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளம், தஞ்சாவூர் மாவட்டம், கீழத்தோட்டம் கிராமத்தில் 8 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்கு தளம் மற்றும் சேதுபாவாசத்திரம் மீனவ கிராமத்தில் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளம், கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூரில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்ட திலேப்பியா (Genetically Improved Farmed Tilapia) மீன் விதைப் பண்ணை, புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் கிராமத்தில் 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவிலும், புதுக்குடி கிராமத்தில் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்கு தளங்கள், என மொத்தம் 56 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நாகப்பட்டினம், மீன்வளப் பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தல்.**

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் நாகப்பட்டினம், மீன்வளப் பொறியியல் கல்லூரியில் தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கியின் நிதி உதவியுடன் 7 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 33 தங்கும் அறைகளுடன் சுமார் 110 மாணவர்கள் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம் மற்றும் 7 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 33 தங்கும் அறைகளுடன் சுமார் 110 மாணவிகள் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக் கட்டடம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்விடுதிகளில், பொழுது போக்கு அறை, ஓய்வறை, உடற்பயிற்சிகூடம், வாசகர் அறை, உணவுக்கூடம், விடுதி பாதுகாவலர் அறை மற்றும் நவீன கழிப்பறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி, தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் என். பெலிக்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வயது மூப்பினால் இயற்கை எய்திய வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் உடல் வைக்கப்பட்டுள்ள சென்னை, தரமணி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நேற்று (29.9.2023) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, எம்.எஸ் சுவாமிநாதன் அவர்களின் மகளும், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவருமான டாக்டர் சௌமியா சுவாமிநாதன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2023) தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள அமெரிக்க நாட்டுத் தூதரகத்தின் துணைத் தூதர் கிறிஸ்டோபர் ஹாட்ஜஸ் அவர்கள் (Mr. Christopher Hodges) சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் க.நந்தகுமார், சென்னையிலுள்ள அமெரிக்க நாட்டுத் தூதரகத்தின் அரசியல்/பொருளாதாரத் தலைவர் திருமதி விர்சா பெர்கின்ஸ் (Ms. Virsa Perkins), அரசியல்/பொருளாதார வல்லுநர் புன்னூஸ் மேத்யு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழி: முதல்வர் வழங்கினார்! முதல் பக்கத் தொடர்ச்சி

**தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 500 கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட நிதியுதவி வழங்குதல்**

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில், நபர் ஒருவருக்கு ரூ.10,000/ மதிப்பீட்டில், இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்க 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்படும் என்று 2021-22ஆம் ஆண்டிற்கான சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2022-23ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 500 கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை, அணிகலன்கள் வாங்கிட தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 50 இலட்சம் ரூபாய் நிதியுதவியாக வழங்கிடும் அடையாளமாக, முதலமைச்சர் அவர்கள் 5 கிராமியக் கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

**நலிந்த நிலையில் வாழும் 1000 மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000/ நிதியுதவி வழங்குதல்**

நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படுத்தி வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 15,063 கலைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக, 2020-21 மற்றும் 2021-22ஆம் ஆண்டுகளுக்கான தெரிவு செய்யப்பட்ட 1000 நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு 1.04.2023 முதல் மாதந்தோறும் ரூ.3,000/ வீதம் நிதயுதவி வழங்கிடும் வகையில், முதலமைச்சர் அவர்கள் 4 நலிவுற்ற மூத்த கலைஞர்களுக்கு மாதந்திர நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. பரிந்துரை! - பூந்தமல்லி நாகராஜனுக்கு

# இதய நோய் சிகிச்சைக்கு ரூ.50 ஆயிரம்!

## பிரதமர் நிவாரண நிதியில் ஒதுக்கீடு!

புதுடெல்லி, செப்.30 -

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் பரிந்துரையை ஏற்று இதய நோய் சிகிச்சைக்காக, பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000/ நிவாரணம் வழங்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லியைச் சேர்ந்த, நாகராஜன் என்பவரது இதய நோய் அறுவை சிகிச்சைக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து, உதவி அளிக்குமாறு, முறையே 29.7.2023 அன்று பிரதமர், நரேந்திர மோடி, அவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

**50,000 நிதியுதவி!**

டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையையும் வேண்டுகோளினையும் ஏற்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், நாகராஜன் அவர்களின் இதய நோய் அறுவை சிகிச்சைக்காக 50,000 ரூபாய் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர். பாலு எம்.பி. அவர்களுக்கு, 5.9.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, நாகராஜன் என்பவரின் இதய நோய் அறுவை சிகிச்சைக்காக வழங்கப்படும் 50,000 ரூபாயானது பயனாளி சிகிச்சை பெறும் சென்னை முகப்பேரில் உள்ள மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனைக்கும் வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை, பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், மேற்கண்ட உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அக்.29 வரை நடைபெறுகிறது!

# தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சி!

## புதுடெல்லியில் தொடங்கியது!

புதுடெல்லி, செப்.30-

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் சார்பில் பட்டு மற்றும் கைத்தறி கண்காட்சி டெல்லியில் நேற்று முதல் ஒரு மாதத்திற்கு நடைபெறுகிறது.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் என்னும் கோ-ஆப்டெக்ஸ் சுமார் 150 விற்பனையகங்கள் மூலம் நாடெங்கிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு கடந்த 88 ஆண்டுகளாக சேவை புரிந்து வருகிறது. நாடெங்கிலும் உள்ள முக்கிய நகரங்களில் பண்டிகை காலங்களில் கண்காட்சிகள் நடத்தி கைத்தறி ரக துணி ஆடைகளுக்கான, புதிய வாடிக்கையாளர்களையும் ஈர்த்து வருகிறது.

இந்த விழாக் கால சிறப்பு விற்பனைக்காக கைத்தறியில் வடிவமைக்கப்பட்ட உயர் ரக சிறந்த பட்டு மற்றும் பருத்தி துணிகளின் அழகு வண்ண ரகங்களை காட்சிப் படுத்தும் பொருட்டு, டெல்லியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு கண்காட்சி தொடங்கியுள்ளது.

டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் சாட்டர்ஜி ஐ.ஏ.எஸ்., விற்பனையை தொடங்கி வைத்தார். தமிழ்நாடு இல்லத்தின் தலைமை கணக்கு அலுவலர் சீனிவாசன், கோ ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் எஸ்.என்.இரமேஷ், கோ-ஆப்டெக்ஸ் புதுப்பாவு மேலாளர் முரளி, மற்றும் பாலா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலைய ஊழியர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

டெல்லி வைகை தமிழ்நாடு இல்லத்தில், கடந்தாண்டு 50 லட்ச ரூபாய்க்கு கைத்தறி துணிகள் விற்பனையான நிலையில், நடப்பாண்டு 60 லட்ச ரூபாயாக விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மண்டல மேலாளர் எஸ்.என். இரமேஷ் தெரிவித்துள்ளார்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் இந்த காட்சியானது அக்டோபர் மாதம் 29ம் தேதி வரை, நாள்தோறும் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் அனைத்து இரகங்களுக்கும் 30% வரை தள்ளுபடி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தாண்டுக்கான புதிய வரவாக தமிழ்நாட்டின் காஞ்சிபுரம், ஆரணி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய ஊர்களின் தலைசிறந்த கைத்தறி நெசவாளர்களின் கலைநயத்தில் உருவான பாரம்பரியமிக்க வண்ண அளவிலான பட்டு மற்றும் பருத்தி சேலைகள் மிக அதிக அளவில் விற்பனைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மதுரை மற்றும் தஞ்சாவூர் காட்டன் சேலைகள், டிசைனர் காட்டன் சேலைகள், டிசைன் போர்வைகள், சட்டைகளும் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. தற்போது வாடிக்கையாளர்கள் துணி ரகங்களை www.cooptex.gov.in என்ற இணையதளத்தில், ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்து வீட்டில் இருந்தபடி பெற்றுக் கொள்ளலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது என்று மண்டல மேலாளர் எஸ். என்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

### காவிரியில்

# 12,500 கன அடி தண்ணீர் திறக்க வலியுறுத்துவோம்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திட்டவட்டம்!

சென்னை,செப்.30–

“மேட்டூர் அணையில், கடந்தாண்டு இதே நாளில் 95.66 சதவீதம் தண்ணீர் இருந்தது. ஆனால், இன்றைய நிலவரப்படி அங்கு 11.78 சதவீத தண்ணீர் தான் உள்ளது. எனவே, இன்று நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை வாரிய அவசரக் கூட்டத்தில், தமிழகத்துக்கு, 12,500 கன அடி தண்ணீர் திறக்க வலியுறுத்துவோம்” என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.



தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சென்னையில் நேற்று (வெள்ளிக்கிழமை) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், இன்று நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை வாரியத்தின் அவசரக் கூட்டத்தில், தமிழக அரசு சார்பில் முன்வைக்கப்படவுள்ள கோரிக்கைகள் குறித்து கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், “எங்களுடைய வாதம் ஒன்றுதான். அது காவிரி மேலாண்மை வாரியமாக இருந்தாலும் சரி, காவிரி ஒழுங்காற்றுக் குழுவாக இருந்தாலும் சரி, நாங்கள் கேட்பது தமிழகத்துக்கு 12500 கன அடி தண்ணீர் தேவை.

ஆனால், காவிரி ஒழுங்காற்றுக் குழு 5000 கன அடி தண்ணீர் திறக்கத்தான் உத்தரவிட்டது. அந்த தண்ணீர் போதவில்லை. இதனால் பயிர்கள் காய்ந்து போகின்றன. எனவே, காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்திலும், நாங்கள் 12,500 கன அடி தண்ணீர் திறக்கவே கோரிக்கை வைப்போம். இதுவரையில் காவிரியில் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. ஆனால், இந்த தண்ணீர் திறப்பு குறுவைக்கு போதுமானது என்று சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பரவாயில்லை அவ்வளவுதான்.

கர்நாடகத்தில் தண்ணீர் இல்லாமல் இருக்கும்போது தமிழகம் அவர்களிடம் தண்ணீர் கேட்கவில்லை. தமிழகத்தில் தண்ணீர் இல்லை. கடந்தாண்டு இதே நாள் 29.02.2022 கே.ஆர்.எஸ் அணையில் 97.08 சதவீதம் தண்ணீர் இருந்துள்ளது. கடந்தாண்டு கபினியில் 95.74 சதவீதம் தண்ணீர் இருந்தது. இன்றைய நிலவரப்படி 68.55 சதவீத தண்ணீர் உள்ளது. ஏலங்கி அணையில் கடந்தாண்டு இதே நாளில் 90 டிஎம்சி தண்ணீர் இருந்தது, இன்றைய நிலவரப்படி 79 டிஎம்சி தண்ணீர் இருக்கிறது. ஹேமவதியில் கடந்தாண்டு இதே நாளில் 99 சதவீதம் தண்ணீர் இருந்தது, அங்கு இன்றைய நிலவரப்படி 49 சதவீதம் உள்ளது.

மேட்டூர் அணையில், கடந்தாண்டு இதே நாளில் 95.66 சதவீதம் தண்ணீர் இருந்தது. ஆனால், இன்றைய நிலவரப்படி அங்கு 11.78 சதவீத தண்ணீர் தான் உள்ளது. எனவே, கர்நாடகத்தில் உள்ள அணைகளில் தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவுக்கு போதிய தண்ணீர் உள்ளது. ஆனால் தண்ணீர் தரமாட்டேன் என்று சொல்வது நியாயம் அல்ல.

ஒரு ஆற்றின் போக்கில், கடைசிப் பகுதியை டெயில் எண்ட் என்று சொல்வார்கள், அவர்களுக்குத்தான் முன்னுரிமை வழங்க வேண்டும். அந்த இயற்கை நீதியையும் கர்நாடகா பின்பற்ற மறுக்கிறது. தமிழகத்தில் உள்ள பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்வதாக தமிழக முதல்வர் நேரடியாக அறிக்கை வெளியிடுகிறார். அதற்கும் அவர்கள் செவிசாய்க்க மாட்டேன் என்கிறார்கள்.

காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவையும் ஏற்க மறுத்து மறியல் போராட்டங்கள் செய்கின்றனர். இரு அண்டை மாநிலங்கள், ஒட்டியருக்கும் மாநிலங்கள் இங்குள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள் கர்நாடகா மாநிலத்தில் வாழ்கின்றனர். ஆயிரக்கணக்கான கன்னட மக்கள் தமிழகத்தில் வாழ்கின்றனர். தினந்தோறும் போக்குவரத்து உள்ளது. எனவே இரு மாநிலங்களும் நட்புடனும், பாசத்துடனும் இருந்தால் தான், மாநிலம் விட்டு மாநிலம் சென்று வாழ்பவர்கள் அச்சமின்றி அங்கு வாழ முடியும். அதைவிடுத்து, உச்ச நீதிமன்றத்தின் ஆணையையும் மதிக்காமல், காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்காற்றுக் குழு சொல்வதையும் மதிக்காமல், தமிழக முதல்வரின் வேண்டுகோளையும் கர்நாடகா ஏற்காமல் இருப்பது நியாயம் அல்ல.

நீண்டகால அனுபவம் பெற்றவர் கர்நாடக மாநிலத்தின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சிவக்குமார். அரசியலில் தேவகவுடா காலத்தில் இருந்து எல்லாவிதமான நடைமுறைகளையும் அறிந்தவர் அம்மாநில முதல்வர் சித்தராமையா இவர்கள் இருவர் மீதும், இன்றுவரையில் நான் தணியாத மதிப்பு கொண்டுள்ளேன்.

எனவே, எது எப்படி இருந்தாலும், உச்ச நீதிமன்றம், காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு தண்ணீர் விட்டுக் கொண்டுள்ளனர். அதற்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன்” என்று அவர் கூறினார்.

### இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால

# சட்டத் தீர்வுகள் அடங்கிய இடைக்கால அறிக்கை! முதல்வரிடம் சமர்ப்பிப்பு!

## அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் வழங்கினார்!

சென்னை, செப்.30-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.09.2023) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சரும், இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சந்தித்து, இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால சட்டத் தீர்வுகள் அடங்கிய இடைக்கால அறிக்கையினை சமர்ப்பித்தார்.

பல்வேறு காலகட்டங்களில் இலங்கையிலிருந்து புகலிடம் தேடி வந்த தமிழர்களுக்கு தாய் உள்ளத்தோடு தமிழ்நாடு அரசானது அவர்களை பாதுகாத்து பராமரித்து பல்வேறு நலத் திட்டங்களை சுமார் 40 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது தற்போது சுமார் 58,357 இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களிலும், 33,479 நபர்கள் காவல்துறை பதிவோடு முகாம்களுக்கு வெளியிலும் தங்கி உள்ளனர்.

இந்திய சட்டங்களின் அடிப்படையில் இவ்வாறு போரினால் தஞ்சம் புகுந்தவர்களை சட்ட ரீதியாக நடத்துவதற்கான முறைமை இல்லாத சூழலிலும், ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற தமிழர் வாழ்வியல் மரபின் அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலிலும், தாய் தமிழ்நாட்டை நாடி வந்த இலங்கை தமிழ் சொந்தங்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு உறுதியான செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு மேம்படுத்தப்பட்ட நலத்திட்ட உதவிகள், வீட்டு திட்டங்கள், வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான செயல்பாடுகள் ஆகியவை அறிவிக்கப்பட்டு, சிறப்புடன் செயலாக்கம் பெற்று மக்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டு இருக்கின்றன.

இவற்றில் முக்கியமானதாக இலங்கை தமிழர்களின் நலன் பேணவும், அவர்களின் நீண்ட கால தீர்வுகளை அடையாளம் காணவும் இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவை, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்.

இக்குழுவில் துணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர்

மரு. கலாநிதி வீராசாமி, உறுப்பினர்களாக சட்டமன்ற உறுப்பினர் திருமதி. தமிழரசி, பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள், ஐக்கிய நாடுகளின் அகதிகளின் அமைப்பின் பிரதிநிதி, தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மூத்த பத்திரிகையாளர், சட்ட வல்லுநர், கல்வியாளர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி, பல்வேறு ஆய்வுகளும், கலந்துரையாடல்களும், சட்ட பகுப்பாய்வுகளும் நடத்தப்பட்டன.

இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால தேவைகள் மற்றும் தீர்வுகள், அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களின் கல்வி, எதிர்கால நலன் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க அமைக்கப்பட்ட இந்த ஆலோசனைக் குழு, பல கட்டங்களில் வரலாறு மற்றும் சட்ட முறைமைகளை ஆராய்ந்து நீண்டகால தீர்வு, சுயசார்பு மற்றும் வாழ்வாதாரம் குறித்த இடைக்கால அறிக்கையை முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குழுவின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி எ. தமிழரசி, பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் மற்றும் உறுப்பினர்செயலர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், உள்துறை துணைச் செயலாளர் திருமதி சித்ரா, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையாளர் சச்சிதானந்தவளன், கல்வியாளர் இ.ரா. இளம்பரிதி, அரசமைப்புச் சட்ட வல்லுநர் திரு. மனுராஜ் சண்முகசுந்தரம், ஈழ எதிலியர் மறுவாழ்வு கழகத்தின் (OFERR) செயலாளர் செல்வி சூரியகுமாரி, அட்வெண்டிஸ்ட் வளர்ச்சி மற்றும் மறுவாழ்வு நிறுவனத்தின் (ADRA) திட்ட இயக்குநர் இக்னேசியஸ், இயேசு சபை புலம் பெயர்ந்தோர் பணி இயக்குநர் அருட்தந்தை பால்ராஜ் மற்றும் பேராசிரியர் கே.எம். பாரிவேலர் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.09.2023) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சரும், இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சந்தித்து, இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால சட்டத் தீர்வுகள் அடங்கிய இடைக்கால அறிக்கையினை சமர்ப்பித்தார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குழுவின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் மற்றும் உறுப்பினர் செயலர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், உள்துறை துணைச் செயலாளர் திருமதி சித்ரா, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையாளர் சச்சிதானந்தவளன், கல்வியாளர் இ.ரா.இளம்பரிதி, அரசமைப்புச் சட்ட வல்லுநர் மனுராஜ் சண்முகசுந்தரம், ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தின் செயலாளர் (OFERR) செல்வி சூரியகுமாரி, அட்வெண்டிஸ்ட் வளர்ச்சி மற்றும் மறுவாழ்வு நிறுவனத்தின் திட்ட இயக்குநர் (ADRA) இக்னேசியஸ், இயேசு சபை புலம்பெயர்ந்தோர் பணி இயக்குநர் அருட்தந்தை பால்ராஜ் மற்றும் பேராசிரியர் கே.எம். பாரிவேலர் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.09.2023) தலைமைச் செயலகத்தில், மீனவர் நல வாரியத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உப தலைவர் ஏ.தாஜுதீன், உறுப்பினர்கள் என்.ஜெ.போஸ், பி.அந்தோணி ஸ்டாலின், ஏ.ஜோஸ், எஸ்.கே. ஜி.ஏ.சேகர், வி.செல்வபாரதி, ஆர்.வி.கணேஷ், ஏ.பி.பன்னீர்செல்வம், எம்.முருகன், எக்ஸ்.லெனின், கோ.மனோகரன், எம்.ஜெபமாலை பர்னாந்து, பி.ஜேசுராஜா, பி.எஸ். ஜேசுராஜ் (எ) ராஜா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் .ந.கௌதமன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி, தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் என்.பெலிக்ஸ் ஆகியோர் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்டம் – திருப்புவனத்தில்

# “ஒடுக்கப்பட்டவர்களை அரவணைத்த கலைஞர்” - எனும் தலைப்பில் திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகள் பங்கு பெறும் மாபெரும் கருத்தரங்கம்!

## அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!



மானாமதுரை, செப். 30-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு ஏற்ப தி.மு.க. மாநில மகளிர் தொண்டரணி சார்பில் அக்டோபர் 1ல் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி திருப்புவனத்தில் ”ஒதுக்கப்பட்டவர்களை அரவணைத்த கலைஞர்” எனும் தலைப்பில் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகள் பங்கு பெறும் மாபெரும் கருத்தரங்கம் நடத்துகிறது என பொறுப்பு அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கழக சார்பு அணிகளின் சார்பில் இந்த ஆண்டு முழுவதும் கொண்டாட வேண்டும் என்ற தி.மு.கழக தலைவர் தளபதியார் அவர்களின் அரிய ஆலோசனைப்படி மகளிர் தொண்டர் அணி சார்பில் திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை நடத்திடவும், இதற்கு பொறுப்பு அமைச்சராக என்னையும் பணித்துள்ளார்கள்.

மண்டலங்களாக அதன்படி தமிழ்நாடு முழுவதும் 6 நிகழ்ச்சிகளை நடத்துவது எனவும், நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒத்துழைப்புடன் இந்நிகழ்ச்சிகளை நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி முதல் மண்டலமாக சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருப்புவனத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

பெயர் மாற்றத்தின் மூலம் மட்டுமல்லாது பல்வேறு சீர்மிகு திட்டங்களின் வாயிலாகவும் திருநங்கைகள் மாற்றுத் திறனாளிகளை முன்னேற்றம் அடையச் செய்தவர் கலைஞர் என்பதை ”ஒதுக்கப்பட்டவர்களை அரவணைத்த கலைஞர்” எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற இருக்கிறது.

இந்நிகழ்ச்சியானது 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு திருப்புவனம் பி.கே. மஹால் திருமண மண்டபத்தில் வைத்து மாநில மகளிர் தொண்டரணி இணைச் தொண்டரணி இணைச் செயலாளர் திருமதி. ஆ.தமிழரசி எம்.எல்.ஏ. தலைமையில், முன்னாள் அமைச்சர் கு.தென்னவன், மாநில மகளிரணிச் செயலாளர் திருமதி. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் திருமதி. நாமக்கல் ராணி, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் திருமதி. விஜிலாசத்தியானந்த், திருப்புவனம் பேரூராட்சி தலைவரும், மாவட்ட துணைச் செயலாளருமான சேங்கைமாறன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாநில தவழும் மாற்றுத்திறனாளிகள் சங்க பொதுச்செயலாளர், மதுரை சொக்கம்ராஜா வரவேற்புரை ஆற்றுகிறார்.

திருநங்கை மதுரை சோணு நன்றியுரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பனும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பி.கீதாஜீவனும் விழா பேருரை ஆற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருநங்கைகள் - மாற்றுத்திறனாளிகளுக்கு கலைஞரும், அவரை தொடர்ந்து தளபதியாரும் செய்த சாதனைகளை பட்டியலிடும் விதமாக தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர் திருநங்கை ப்ரியாபாபுவும் டிசம்பர் 3 இயக்க மாநில தலைவரும், இலயோலா கல்லூரி பேராசிரியரும், மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினருமான பேராசிரியர் டி.எம்.என். தீபக் அவர்களும், மாநில தவழும் மாற்றுத்திறனாளிகள் சங்கத் தலைவரும், மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினருமான கே.டி.ஜெ.புஷ்பராஜ் அவர்களும் உரையாற்ற இருக்கிறார்கள்.

மேலும் இந்நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதித்த திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகளை கௌரவித்து விருதுகள் வழங்கிடவும் இருக்கிறோம். அவர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவையை விண்ணப்பங்களாகப் பெற்று அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லவும், நிகழ்ச்சிகள் அனைத்தையும் அனைத்துத் தரப்பு மக்களிடமும் கொண்டு சென்றும் விதத்தில் சமூக வலைதளம் மற்றும் பத்திரிக்கை தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் திருநங்கைகள் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று நிகழ்ச்சியில் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன் என்று பி.கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.

# இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.52 லட்சம் கோடி!

## ரிசர்வ் வங்கி அறிவிப்பு!

புதுடெல்லி, செப். 30-

இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 52 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இது குறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2023 மார்ச் மாத இறுதியில் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 62 ஆயிரத்து 430 கோடி டாலராக, அதாவது இந்திய மதிப்பில் 51.81 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. இந்த நிலையில் 3 மாதங்களில் 470 கோடி டாலர் இந்திய மதிப்பில் 39 ஆயிரம் கோடி ரூபாய் அதிகரித்து ஜூன் இறுதியில் 62 ஆயிரத்து910 கோடி டாலரைத் தொட்டுள்ளது. இது, இந்திய மதிப்பில் 52.21 லட்சம் கோடி ரூபாயாகும்.

இந்தியாவின் வெளிநாட்டு கடன் அளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் மார்ச் இறுதியில் 18.8 சதவீதமாக இருந்தது. இந்த நிலையில் அது ஜூன் இறுதியில் 18.6 சதவீதமாககுறைந்துள்ளது.

நடப்பாண்டு ஜூன் இறுதி மதிப்பீட்டின்படி, அமெரிக்க டாலரில் வெளிநாடுகளுக்கு இந்தியா செலுத்த வேண்டிய கடன் என்பது 54.4 சதவீதம் என்ற அளவில் பெரும்பங்கை கொண்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாக இந்திய ரூபாய் 30.4 சதவீதமும், சர்வதேச நிதியத்தின் எஸ்டிஆர் வைப்பு 5.9 சதவீதமும், ஜப்பானின் யென் 5.7 சதவீதமும், யூரோ 3 சதவீதமும் பங்கு வகிக்கின்றன.

கடந்த ஜூன் மாத கணக்கீட்டின்படி இந்தியா செலுத்த வேண்டிய மொத்த வெளிநாட்டுக் கடனில் நீண்ட கால கடன் 50,550 கோடி டாலர் என்ற அளவில் உள்ளது. இது முந்தைய மார்ச் காலாண்டுடன் ஒப்பிடும்போது 960 கோடி டாலர் அதிகமாகும். அதேசமயம், ஒட்டுமொத்த கடனில் குறுகிய கால கடன்களின் பங்களிப்பு முந்தைய மார்ச் மாத அளவான 20.6 சதவீதத்திலிருந்து ஜூனில் 19.6 சதவீதமாக குறைந்து ள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

# வாச்சாத்தி வழக்கு: உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

### முதல் பக்கத் தொடர்ச்சி

சோதனை நடவடிக்கையின்போது கிராம மக்கள் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் 18 மலைவாழ் பெண்கள் பாலியல் ரீதியாக வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், வீடுகள் சூறையாடப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் அரூர்காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தும் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை என கூறப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து அப்போதைய தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்க பொதுச் செயலாளராக இருந்த சண்முகம் மற்றும் நிர்வாகிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அதற்கு பின்னரே வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இருப்பினும் உரிய விசாரணை ஏதும் நடைபெறவில்லை எனக்கோரி வழக்கை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்க வலியுறுத்தி பாதிக்கப்பட்ட பெண்கள் 1993ம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இதனையடுத்து நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த 1995ம்ஆண்டு பிப்ரவரி 24ம் தேதி சிபிஐக்கு வழக்கு மாற்றப்பட்டது.

சி.பி.ஐ. விசாரணையில், குற்றம்சாட்டப்பட்ட வனத்துறையைச் சேர்ந்த 155 பேர், போலீஸார் 108 பேர், வருவாய்துறையினர் 6 பேர் என மொத்தமாக 269 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் 1996ல் சி.பி.ஐ. கோவை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து கோவை மற்றும் கிருஷ்ணகிரி நீதிமன்றங்களில் வழக்கு நடத்தப்பட்டு, 2008ல் தருமபுரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

வழக்கை விசாரித்த தருமபுரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி குமரகுரு, கடந்த 2011ம் ஆண்டு செப்டம்பர் 29ம் தேதி தீர்ப்பு அளித்தார்.

அதில் குற்றம் சாட்டப்பட்ட 269 பேரில் தீர்ப்பு நாளன்று உயிருடன் இருந்த 215 பேரும் குற்றவாளிகள் எனதீர்ப்பளிக்கப்பட்டது. இதில் 12 பேருக்கு 10 ஆண்டு சிறை, 5 பேருக்கு 7 ஆண்டு சிறை, மற்றவர்களுக்கு 1 முதல் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டது. நாட்டிலேயே ஒரு வழக்கில் அதிக அளவிலான குற்றவாளி களுக்கு தண்டனை வழங்கப்பட்ட வழக்காக இது இருந்ததால் நாடு முழுவதும் பெரும் அதிர்வை இத்தீர்ப்பு ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் தண்டனையை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணை நீதிபதி பி.வேல்முருகன் முன்பாக நடந்தது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பி.வேல்முருகன், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார்.

தொடர்ந்து இவ்வழக்கு சம்பந்தமான இடங்கள் மற்றும் மக்களிடையே நேரில் விசாரணை செய்யவும் முடிவு செய்து அதன்படி கடந்த மார்ச் 4ம் தேதி வாச்சாத்தி கிராமத்துக்கு நீதிபதி பி.வேல்முருகன் வருகை தந்தார்.

சம்பவத்தில் தொடர்புடையப் பகுதிகளாக கருதப்படும் பழங்குடிகள் தொடக்கப்பள்ளி, ஏரிப்பகுதி, ஆலமரம், தண்ணீர் தொட்டி, மலைப்பகுதி ஆகியவற்றை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து பேசினார். இந்நிலையில் மேல் முறையீட்டு வழக்கின் மீது நேற்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# கடந்த இரண்டரை ஆண்டுகளில் ரூ.3.50 லட்சம் கோடி முதலீடுகள்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!



தஞ்சாவூர், செப். 30 -

கடந்த இரண்டரை ஆண்டுகளில் ரூ.3.50 லட்சம் கோடி முதலீடுகள் பெறப்பட்டுள்ளன என்றார் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் அவர் வியாழக்கிழமை மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமிழகத்தில்தான் முதலில் முதலீடு செய்ய நினைக்கின்றனர்.

மத்திய அரசின் அழுத்தம் காரணமாக சிலர் தமிழ்நாட்டை விட்டு வெளியேறி, வேறு மாநிலங் களுக்குச் செல்வதாகக் கூறுகின்றனர்.


இருப்பினும் கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஏறத்தாழ ரூ.3.50 லட்சம் கோடிக்கு தமிழகத்துக்கு முதலீடுகள் பெறப்பட்டுள்ளன.

தென் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு புதிய தொழில் வளர்ச்சியைக் கொண்டு வர உறுதுணையாக இருப்போம்.

தென்னை விவசாயிகளுக்கு உரிய விலையைக் கொடுக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். தென்னை சார்ந்த தொழிற்சாலை தொடர்பாக 4 நிறுவனங்களிடம் பேசியுள்ளோம். நிலம் தொடர்பான தேர்வில் சிக்கல் இருக்கிறது. இருப்பினும், சில இடங்களில் நிலங்களைத் தேர்வு செய்துள்ளோம். இன்னும் சில வாரங்களில் நிலத்தை அளவீடு செய்துவிட்டு, முதலீட்டாளர்களை அழைத்து வர உள்ளோம்.

தமிழ்நாட்டில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 முதல் ஒரு லட்சம் சதுர அடி அளவில் புதிய டைடல் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. ஆராய்ச்சி சார்ந்த விஷயங்களை நோக்கி தமிழ்நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தை அறிவு சார்ந்த தலைநகரமாக மாற்றவுள்ளோம்.

தமிழ்நாட்டில் மட்டும் தான் முதலீட்டாளர்களுக்கு சொல்கிற ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இதனால், தமிழ்நாட் டில் ஏற்கெனவே முதலீடு செய்தவர்கள் மீண்டும் முதலீடு செய்கின்றனர். இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.



தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய ஆய்வக தரச்சான்றிதழ் பெற்றமைக்கான விருதினை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று 29.09.2023 மாப்பிள்ளையூரணி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்கினர். அருகில் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை மரு.டி.எஸ்.செல்வநாயகம், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய்சீனிவாசன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை இயக்குனர் சுகாதார பணிகள் மரு.எஸ்.பொற்செல்வன் ஆகியோர் உள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிறுநல்லூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2020–21–ன் கீழ் ரூ.10.19 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி கட்டிடத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், உதவி ஆட்சியர் பயிற்சி ஆனந்த் குமார் சிங், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் இந்து பாலா, மாவட்டட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சற்குணா மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஊராட்சி தலைவர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க.வின் தோல்வி பயம் - குள்ள நரிகளின் கூட்டுச் சதி!

## ‘தமிழ்க் கேள்வி’ தி.செந்தில்வேல்



**‘தமிழ்க்கேள்வி’ இணையதள ஊடகத்தின் ஆசிரியர் தி.செந்தில்வேல், வலைதளங்களில் தீட்டியுள்ள சிறப்புக் கட்டுரையில், காவிரிப் பிரச்சினையின் தற்போதைய நிலையினை நடுநிலையோடு எடுத்துரைத்துள்ளார்.**

**அக்கட்டுரை வருமாறு:-**

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க பா.ஜ.க.வின் தோல்வி பயம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அந்த தோல்வி பயத்தில் இந்தியா கூட்டணியில் பிளவை ஏற்படுத்தவும், மாநிலங்களுக்குள் மோதலை ஏற்படுத்தவும் பா.ஜ.க. செய்து வரும் நரித்தனத்தையும், அந்த நரித்தனத்திற்கு துணைபோகும் சில குள்ளநரிகளின் முகத்திரையையும் கிழிப்பதே இக்கட்டுரையின் நோக்கம். கடந்த சில நாட்களாகவே, கர்நாடகா காவிரியில் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய தண்ணீரை தர மறுத்து வருவதைச் சுட்டிக் காட்டி ‘தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியில் நீடிக்கலாமா?’ என்றும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகி விட்டதைச் சுட்டிக் காட்டியும் சிலர் இங்கே குள்ள நரி வேலைகளைத் தொடங்கியுள்ளனர். தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றிவிடலாம் என்று அவர்கள் தப்புக் கணக்கு போடத்தொடங்கியுள்ளனர்.

காவிரி விவகாரத்தில் இன்றைக்கு தமிழ்நாடு சந்தித்து வரும் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் என்பதற்கான ஆதாரங்களையும், திட்டமிட்டே மோடி அரசு தமிழ்நாடு பெரும் வஞ்சகத்தைச் செய்தது என்பதையும், மோடி அரசின் அந்த தமிழின விரோத செயலைக் கண்டிக்கக் கூட துப்பில்லாமல் உட்கட்சிச் சண்டையில் தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள எடப்பாடி கள்ள மவுனம் காத்ததையும், மக்களுக்கு நினைவூட்டுவது நம் கடமை.

காவிரி ஆற்று நீர்ச் சிக்கல் இன்று, நேற்று தொடங்கியது அல்ல. பல்லாண்டுகால நீண்ட நெடும் பிரச்சினை. இந்த விவகாரத்தில் நிரந்தரத் தீர்வைக் கொண்டு வருவதற்கான ஒரே வாய்ப்பாக நமக்கு அமைந்தது உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு. அந்தத் தீர்ப்பை அப்படியே செயல்படுத்தியிருந்தால் காவிரிச் சிக்கலுக்கு தீர்வு எட்டப்பட்டிருக்கும். தமிழ்நாடு தண்ணீருக்காக கர்நாடகத்திடம் கையேந்தும் நிலையும் வந்திருக்காது. அந்த இடத்தில்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு மாபெரும் துரோகத்தை இழைத்தது.

கலைஞரால் அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அப்படியே அமல்படுத்தச் சொன்னது உச்ச நீதி மன்றத்தின் இறுதித் தீர்ப்பு. பெங்களூர் நகரின் குடிநீர் தேவைக்காக நடுவர் மன்றம் தமிழ்நாட்டிற்கு திறக்கச் சொன்ன தண்ணீரின் அளவை மட்டும் கொஞ்சம் குறைத்தது. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பதே உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின் மிக முக்கிய அம்சம்.

ஒன்றிய அரசு இதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்றது உச்ச நீதிமன்றம். அந்த காவிரி மேலாண்மை வாரியத்தில் ஒன்றிய அரசின் பிரதிநிதிகள், காவிரி ஆற்று நீர்ச் சிக்கலில் தொடர்புடைய நான்கு மாநிலங்களின் பிரதிநிதிகள், ஒரு தலைவர் உள்ளிட்டோர் இடம் பெற வேண்டும். அது மத்திய நீர்வளத் துறையின் கீழ் செயல்பட வேண்டும். மிக மிக முக்கியமாக அந்த வாரியம் Cavuery Water Managment Board வெறும் தொழில்நுட்ப அமைப்பாக இல்லாமல், நிர்வாக அமைப்பாகவும் இருக்க வேண்டும்.

அதாவது, கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட்டால் அந்த தண்ணீரின் அளவை அளந்து குறித்துக் கொள்ளும் அமைப்பாக மட்டும் இன்றி, தண்ணீரை உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் திறக்கும் அதிகாரம் கொண்ட அமைப்பாகவும் இருக்க வேண்டும். இதற்கு உதாரணமாக பக்ரா - பியாஸ் மேலாண்மை வாரியத்தையும் சுட்டிக்காட்டி மிகத் தெளிவான தீர்ப்பைத் தந்தது உச்ச நீதிமன்றம். அதன்படி காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்



பட்டிருந்தால் காவிரி ஆற்று நீர்ச் சிக்கல் முடிவுக்கு வந்திருக்கும்.

காரணம், கர்நாடகத்தில், யார் ஆட்சியில் இருந்தாலும், தண்ணீர் திறக்கும் அதிகாரத்தோடு கூடிய ஒரு அமைப்பாக அந்த வாரியம் இருந்திருக்கும்.

இந்த இடத்தில்தான் ஒன்றிய பாஜக அரசு, தமிழ்நாட்டிற்கு எதிரான மாபெரும் சதியைச் செய்தது. உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாக வாரியம் அமைக்கச் சொன்ன பிறகும் அதைச் செய்யாமல் தங்களுக்கு அந்தத் தீர்ப்பு புரியவில்லை என்று மீண்டும் உச்ச நீதிமன்றத்தை நாடியது.



**தி.செந்தில்வேல்**
ஆசிரியர்
‘தமிழ்க் கேள்வி’
இணையதள ஊடகம்

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு மிகத் தெளிவாக இருப்பதைச் சுட்டிக்காட்டிய நிலையில், பாஜக அரசு மிகத் தந்திரமாக வாரியம் அமைப்பதற்கு பதிலாக, காவிரி மேலாண்மை ஆணையம் அமைத்தது. உச்ச நீதிமன்றம் அதிகாரம் மிக்க வாரியத்தை அமைக்கச் சொன்னது Cavuery Water Management Board. ஆனால் பா.ஜ.க. அரசோ காவிரி மேலாண்மை ஆணையம் Cauvery Water Management Authority அமைத்தது. இதுதான் அத்துனணச் சிக்கலுக்கும் காரணம். கர்நாடகத்தில் யார் ஆட்சியில் இருக்கிறார்களோ அவர்களிடமே தண்ணீர் திறக்கும் அதிகாரம் தொடரும் சூழல் உருவானது.

இத்தனையும் செய்த பா.ஜ.க., கர்நாடகத் தேர்தலில் தோல்வி அடைந்த உடன், காவிரியில் தண்ணீர் திறக்க கடும் எதிர்ப்பு தெரிவித்து, கர்நாடகத்தில் போராட்டங்களைத் தூண்டத் தொடங்கியுள்ளது. தமிழர்களுக்கு எதிரான சதிச் செயல்களை அரங்கேற்றக் காத்திருக்கிறது. இதன் மூலம், இரு மாநில மக்களையும் மோத விட்டு அதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலில் குளிர் காய நினைக்கிறது பா.ஜ.க.

தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியைச் சுட்டிக் காட்டி கர்நாடகத்தில் காங்கிரசுக்கு எதிரான சதி வேலைகளையும், அதேபோல், அதையே சுட்டிக்காட்டி தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணிக்கு எதிரான வேலைகளையும் செய்யத் தொடங்கி விட்டது பா.ஜ.க. இந்த நரித்தனத்திற்கு சில குள்ள நரிகளும் தமிழ்நாட்டில் உடந்தை.

அந்த குள்ளநரிக்கூட்டத்தினர் பா.ஜ.க. ட்டணியில் இருந்து வெளியேறியதைச் சுட்டிக் காட்டி அதேபோல் இந்தியா கூட்டணியில் இருந்து தி.மு.க. வெளியேற வேண்டும் என்ற விஷமப் பரப்புரையைத் தொடங்கியுள்ளனர். ஏதோ, எடப்பாடி பழனிசாமி பாஜகவின் கொள்கைகளோடு முரண்பட்டு, கூட்டணியை விட்டு வெளியேறியது போல இந்தக் கூட்டம் சித்தரிப்பது நகைச்சுவையின் உச்சம்

தி.மு.க. வாஜ்பாயோடு கூட்டணி வைத்திருந்த போதும் சரி, ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகித்த போதும் சரி, ஒரு குறைந்த பட்ச செயல்திட்டத்தை உருவாக்கி அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கூட்டணி அமைத்தது. வாஜ்பாயோடு கூட்டணியில் இருந்த காலகட்டத்தில் கூட, ‘பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தக் கூடாது; காஷ்மீருக்கான சிறப்புத் தகுதியை நீக்கக் கூடாது’ இந்தித் திணிப்பு கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்து, அதை வாஜ்பாய் அரசாங்கத்தைப் பின்பற்ற வைத்தது.

ஆனால், பா.ஜ.க. உடன் கூட்டணியில் இருந்த எடப்பாடி அ.தி.மு.க.வோ, பா.ஜ.க.வின் மக்கள் விரோதச் சட்டங்களான சி.ஏ.ஏ., வேளாண் சட்டத் திருத்த மசோதா, உள்ளிட்ட அனைத்தையும் ஆதரித்து



நாடாளுமன்றத்தில் வாக்களித்தது. முத்தலாக் தடைச் சட்டத்தை ஆதரித்து மக்களவையில் அதிமுக உறுப்பினர் ரவீந்திரநாத் பேசியது பா.ஜ.க. உறுப்பினர்களை விட மோசமாக இருந்தது.

தி.மு.க. ஆட்சிக் காலம் வரை, ஏன் ஜெயலலிதா உயிரோடு இருக்கும் வரையிலும் கூட தமிழ்நாட்டிற்குள் வந்திடாத நீட் தேர்வை தங்களின் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தமிழ்நாட்டிற்குள் அனுமதித்தது வரை பா.ஜ.க.வின் அனைத்து மக்கள் விரோத செயல்களுக்கும் துணை போன எடப்பாடி, அ.தி.மு.க. தேர்தல் நெருங்கும் நேரத்தில், பா.ஜ.க.வோடு கூட்டணி இல்லை என்று போடும் நாடகத்தை வைத்துக் கொண்டு தி.மு.க.வை நோக்கி கேள்வி எழுப்புவது அரசியல் அறியாமை. இது பா.ஜ.க.விற்கு துணைபோகும் குள்ள நரித்தனம்.

கூட்டணி இல்லை என்ற அறிவிப்பைக் கூட எடப்பாடியால் சொல்லத் துணிவின்றி கட்சியில் சகாக்களை வைத்துச் சொல்லும் நிலையில் உள்ளது அ.தி.மு.க. பா.ஜ.க.வை உளப்பூர்வமாக எதிர்க்கும் முடிவோடுதான் கூட்டணியை விட்டு அ.தி.மு.க. விலகியது எனில், சிஏஜி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட மோடி அரசின் 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடுகளைப் பற்றியும், ஊழலைப் பற்றியும் அதிமுகவோ எடப்பாடியோ வாய் திறந்து கண்டிப்பார்களா? மணிப்பூர் கலவரம் முதல், நீட் மரணங்கள் வரை பா.ஜ.க. அரசால் பறிபோகும்



உயிர்களுக்காக குறைந்தபட்ச கண்டனக் குரல்களைத் தருவார்களா ? ஒருபோதும் இவை நடக்காது.

இரண்டே ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1000, மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூபாய் 1000, மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, சென்னையில் மிகப்பெரிய பன்னோக்கு மருத்துவமனை, மதுரையில் மிகப் பிரமாண்ட நூலகம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள், நான் முதல்வன் திட்டம், என்று ஏராளமான சாதனைகளை நிகழ்த்திக் காட்டிவிட்டார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

மக்கள் கொண்டாடத் தொடங்கி விட்டனர். மக்களவைத் தேர்தலில் 40 க்கு நாற்பதும் தி.மு.க. கூட்டணி வெல்லும் சூழல். இவை மட்டுமின்றி, இந்தியா முழுவதும் உள்ள எதிர்க் கட்சிகளை ஒருங்கிணைத்து, பா.ஜ.க. விற்கு எதிரான மிக வலுவான கூட்டணி என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அரசியல் பாய்ச்சலை எதிர்கொள்ள முடியாத பா.ஜ.க. கடைசியாக வழக்கம் போல் கையில் எடுக்கக் காத்திருக்கும் ஆயுதம்தான் கலவரம்.

தமிழ்நாட்டில் மதக்கலவரத்தைத் தூண்ட முடியாது, மக்கள் மிகுந்த ஒற்றுமை உணர்வோடு உள்ளனர் என்பதைப் புரிந்து கொண்ட பா.ஜ.க. கன்னடர்கள் - தமிழர்கள் இடையே இன மோதலை உருவாக்க முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. பா.ஜ.க. வின் இந்த அரசியல் சதிக்கு துணைபோக சில குள்ள நரிகளும் தயார் நிலையில் உள்ளன. வட மாநிலங்களில் மதக்கலவரங்களைத் தூண்டிவிட்டு அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தது போல் தமிழ்நாட்டில் ஒருபோதும் நடக்காது.

தமிழ்நாடு பண்பட்ட மண். பகுத்தறிவுப் பார்வை கொண்ட மண். பா.ஜ.க.வின் சதித்திட்டத்திற்கும் சரி, பா.ஜ.க.வின் பி - டீம்களின் சதித்திட்டத்திற்கும் சரி, தமிழ்நாட்டு மக்கள் நாம் ஒரு போதும் பலியாகிவிட மாட்டோம் என்பதை உரக்கச் சொல்வோம். தமிழ்நாட்டைக் காப்போம்.



மதுரை வடக்கு மாவட்டம் –விரகனூர் மஸ்தான்பட்டியில் –கடந்த 20ஆம் தேதி அன்று – முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையை கழக இளைஞரணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் – வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



தமிழ்நாடு அரசின் சார்பில், முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 132வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (29.09.2023) சென்னை தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அமைச்சர் கீதா ஜீவன் முன்னிலை!

# உலக இருதய தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபயண பேரணி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

தூத்துக்குடி, செப்.30

உலக இருதய தினத்தை முன்னிட்டு மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கம் தூத்துக்குடி சார்பில் பெல் ஹோட்டல் அருகில் மருத்துவக்கல்லூரி மாணவர்கள், மாணவியர்கள், செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்ட விழிப்புணர்வு நடைபயண பேரணியை சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் முன்னிலையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.09.2023) கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவித்ததாவது:

உலக இருதய தினம் என்பது செப்டம்பர் 29-ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 2000-ஆம் ஆண்டு வேர்ல்டு ஹெல்த் பெடரேஷன் அமைப்பின் சார்பில் அதன் தலைவரான அண்டனி பாய் கிருனா அவர்களால் உலக இருதய தினம் உருவாக்கப்பட்டு உலகம் முழுவதும் தொடர்ச்சியாக 23 ஆண்டுகள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இருதய பாதுகாப்பு அவசியமான ஒன்று என்பது மருத்துவ மாணவர்கள், பேராசிரியர்களுக்கு நன்றாக தெரியும். கொரோனா தொற்றுக்கு பிறகு பெரிய அளவில் இருதய பாதிப்பு ஏற்பட்டு வருவதை உலகம் உணர்ந்திருக்கிறது. முன்பு மாரடைப்பு 40, 50, 60 வயதை கடந்தவர்களுக்குதான் வரும் என்று சொல்வார்கள். ஆனால் இன்று 40, 50, 60 வயதுக்குள்ளேயே மாரடைப்பு வருகிறது.

உலக சுகாதார நிறுவனம் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம் போன்றவை இருதய நோய்க்கான காரணங்களை தொடர்ச்சியாக ஆராய்ச்சி செய்து வருகிறது. இருதய நோயில் இருந்து நம்மை எப்படி பாதுகாத்துக்கொள்வது, நமது வாழ்க்கை முறையை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் இந்த உலக இருதய தின நிகழ்ச்சியின் நோக்கமாகும். இத்தினத்திற்கான இந்த ஆண்டு கருப்பொருள் இதயத்தை பயன்படுத்தி இதயத்தை அறிந்துகொள் என்பதாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் ஜப்பான் சென்றிருந்தபோது டோக்கியோவில் 8 கி.மீ. தூரத்திற்கு அமைக்கப்பட்டிருந்த ஹெல்த் வாக் சாலையை பார்த்தேன். இந்த சாலையை பற்றி கேட்கும் போது, ஹெல்த் வாக் சாலையை பார்ப்பவர்கள் இந்த சாலையில் மட்டுமல்ல நமது வீட்டின் அருகிலும் 8 கி.மீ. தூரத்திற்கு நடக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை தரும் என்று சொன்னார்கள்.

உடனடியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் ஹெல்த் வாக் நடைபாதையை தேர்வு செய்திருக்கிறோம். சாலையின் இருபுறமும் மரங்கள் நடுதல், ஒவ்வொரு கி.மீ. தூரத்திற்கும் நேரம் அறிவிப்பு வைப்பது, நடப்பதன் பயன்கள் பற்றி பதாகைகள் வைப்பது,ஒவ்வொரு 2 கி.மீ. தூரத்திலும் அமர்வதற்கு இருக்கைகள் அமைப்பது போன்ற பணிகள் முடிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் அக்டோபர் மாதத்தில் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் ஹெல்த் வாக் சாலை திறக்கப்படவுள்ளது.

நாம் நடப்பதை ஊக்கப்படுத்த வேண்டும். நடைப்பயிற்சி உடலுக்கு மிகவும் தேவையான ஒன்று. அவசியமான ஒன்று. அந்த வகையில் தான் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடப்பதற்கு சாலைகளை அமைக்கிறார்.

தமிழகம் முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் இதயம் காப்போம் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையம்ää துணை சுகாதார நிலையங்களள் என 10,999 மருத்துவமனைகளிலும் இருதய பிரச்சினைக்கு ஆஸ்பிரின் - 2, க்ளோபிடோக்ரல் - 4, அட்ரோவாஸ்டாட்டின் - 8 என மொத்தம் 14 மாத்திரைகள் வழங்கப்படுகிறது. எனவே இருதய பிரச்சனை தொடர்பாக ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு சென்று இதயம் காப்போம் திட்டத்தில் பயன்பெறலாம் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் தெரிவித்ததாவது:

இருதய பிரச்சனை தொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். தனியார் மருத்துவமனை போன்று அரசு மருத்துவமனைகளிலும் மாரடைப்பை தடுப்பதற்கு மருந்துகள் இருக்கிறது. அளவான உணவு, சத்தான உணவு, அளவான உடற்பயிற்சி என்று நமது உடலுக்கும், இருதயத்திற்கும் குறைவான வேலை கொடுத்தால் நீண்ட நாள் வாழ முடியும்.

புரோட்டாவும், பர்கரும் சாப்பிடக்கூடாது. அதனால் உடலுக்கு கேடுதான் விளையும். இதற்கு என்றைக்காவது சாப்பிடலாம். தினமும் சாப்பிடக்கூடாது. துரித உணவுகள் எடுத்துக்கொள்ளக்கூடாது. நாம் விழிப்புணர்வை பெறுவோம். உடல்நலனை பாதுகாத்துக்கொள்வோம் என சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி. கீதாஜீவன் தெரிவித்தார்.



பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று பழைய பல்லாவரம் குளத்துமேடு பகுதியில் மண்டலத் தலைவர் பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி. ஆர். பாலு கழக வர்த்தக அணி மாநில துணைச் செயலாளர் அரசு கொறடா முனைவர் கோ.வி. செழியன் ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள். அப்பொழுது மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன் மாவட்ட கழக பிரதிநிதிகள் அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தஞ்சை மாவட்ட 'சத்யம்' தொலைக்காட்சி

# செய்தியாளர் அலெக்ஸாண்டர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 30 -

தஞ்சை மாவட்ட சத்யம் டி.வி. செய்தியாளர் அலெக்ஸாண்டர் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

சத்யம் டிவி தஞ்சாவூர் மாவட்ட செய்தியாளராக 12 ஆண்டுகளாக பணியாற்றியும், ஊடகத் துறையில் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவருமான அலெக்ஸாண்டர் அவர்கள் (வயது 46), நேற்று (28.09.2023) உடல்நலக்குறைவால் உயிரிழந்தார் என்பதை அறிந்து மிகவும் வேதனை அடைந்தேன்.

அலெக்ஸாண்டர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ஊடகத் துறை நண்பர்களுக்கும் இத்துயர்மிகு நேரத்தில் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை - இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும்

# மீனவர்களின் குடும்பங்களுக்கு நிதி வழங்கிட ரூ.1 கோடி ஒதுக்கீடு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, செப்.30

எதிர்பாராமல் கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை சீற்றங்களின் காரணமாக விபத்தில் சிக்கி 2016 முதல் 2021-ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள 25 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கிட ரூ.50.00 இலட்சம் மற்றும் இனிவரும் காலங்களில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூ. 50.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 1.00 கோடி கொண்டு சுழல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி வெளியீடு வருமாறு:-

எதிர்பாராமல் கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை சீற்றங்களின் காரணமாக விபத்தில் சிக்கி காணாமல் போன மீனவர்களின் குடும்பங்கள் எந்த வருமானமும் இன்றி வறுமைக்கோட்டிற்கு கீழ் செல்லும் நிலையில் உள்ளதால், மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, அம்மீனவர்களின் துயர் துடைக்க சுழல் நிதியினை உருவாக்கி அதிலிருந்து காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) வழங்கும் பட்சத்தில் வாழ்வாதாரம், பொருளாதார ரீதியாக மேம்படுத்திக் கொள்ள பேருதவியாக அமையும் என்பதால், 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள 25 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2.00 இலட்சம் வீதம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிவாரணம் வழங்கிட ரூ.50.00 இலட்சமும் இனிவரும் காலங்களில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்குவதற்காக ரூ.50.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1.00 கோடி கொண்டு சுழல் நிதி உருவாக்கி அரசாணை (நிலை) எண். 112, கால்நடை பராமரிப்பு. பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்(மீன்6)துறை, நாள் 25.09.2023ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# மாபெரும் பொதுக்கூட்டம்! கி.வீரமணி - கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. சிறப்புரை!

## டி.லோகேஷ் தலைமை! மேயர் பிரியா - கலாநிதி வீராசாமி எம்.பி. - ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, செப். 30-

கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் "உடன் பிறப்பின் உயிர்த் துடிப்பு கலைஞர்" எனும் தலைப்பில் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (30.9.2023 - சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் நம்மாழ்வார் பேட்டை சின்னபாபு தெருவில் (ஐந்து விளக்கு அருகில்) நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி. லோகேஷ் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, செ. தமிழ்வேந்தன், சரிதா மகேஷ்குமார், இசட். ஆசாத், ரமணிலோகேஷ், நா.துலுக்காணம், பி.சுகுமார், வனஜாசண்முகம், இரா.வீரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ. பாலமுருகன், பா. ஜெகதீஷ், க.வினோத், எஸ். தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர். டி.சங்கர்நானா, பா.பி.தாஸ், சே.மணிமாறன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் திராவிடர் கழகத்தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் ஆர். பிரியாராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., புனிதவதி எத்திராசன், தமிழ்ச்செல்வி சசிகுமார், மு.சரவணன், ப. ரங்கநாதன், கே.எஸ். இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி எம்.சி., சங்கரிநாராயணன், எஸ். மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக்அப்துல்ல, வே.உமாகாந்த், பரிதி இளம்சுருதி, ஆர்.வரதன்

கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி., கூ.பீ.ஜெயின் எம்.சி., ஸ்ரீராமலு எம்.சி., சொ.வேலு எம்.சி., டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., ஐ.சி. எப்.வ.முரளிதரன், ஏ.நாகராசன் எம்.சி., வே.வாசு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர். நாகராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர். 75வது வட்ட கழக செயலாளர் வி.க. வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.

பூவிருந்தவல்லி தொகுதி

# விளாப்பாக்கம் ஊராட்சியில் 2 பேருந்து நிழற்குடை புதுப்பிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ திறந்து வைத்தார்!

திருவள்ளூர், செப்.30:

திருவள்ளூர் அருகே பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட விளாப்பாக்கம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டி முடிக்கப்பட்ட பேருந்து நிழற்குடை மற்றும் திருவள்ளூர் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட ஒரு பேருந்து நிழற்குடை, புதுப்பிக்கப்பட்ட தொடக்கப்பள்ளி கட்டிடம், அரசினர் உயர்நிலைப் பள்ளியில் கட்டி முடிக்கப்பட்ட சமையல் கூட கட்டிடம் உள்ளிட்டவைகளை திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளுக்கு திருவள்ளூர் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் புஜ்ஜிராமகிருஷ்ணன், திருவள்ளூர் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் பர்கத்துல்லாகான், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு 2 பேருந்து நிழற்குடைகள் மற்றும் ரூ.4லட்சத்து 9 ஆயிரம் செலவில் புதுப்பிக்கப்பட்ட தொடக்கப்பள்ளி கட்டிடம், ரூ.5லட்சத்து 86 ஆயிரம் செலவில் சமையல் கூட கட்டிடம் உள்ளிட்டவைகளை திறந்து வைத்து பேசினார்.

அப்போது, தமிழ்நாடு அரசு பொதுமக்களுக்கு செய்து வரும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடம் எடுத்துக்கூறினார். மேலும் தனியார் பள்ளிக்கு நிகராக தற்போது அரசு பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. இனி தனியார் பள்ளியை விட சிறந்த பள்ளியாக அரசு பள்ளி விளங்கும் என்றும், அதற்கு தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கும் என்றும் அரசு பள்ளிக் கூடங்கள் வறுமையின் அடையாளமாக இல்லாமல் பெருமையின் அடையாளமாக விளங்கும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது, ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறப்பாக பேசி அனைவரையும் பரவசப்படுத்திய தொடக்கப்பள்ளி மாணவிக்கு ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., ஊக்கத் தொகையை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் குணசேகரன், வட்டார கல்வி அலுவலர் வீரராகவன், ஊராட்சி மன்ற தலைவர் பொன்மணிஆனந்தன் , ஒன்றிய கவுன்சிலர் டிஎம்எஸ். வேலு, ஊராட்சி மன்ற துணைத்தலைவர் சுகந்திநசீர் , தலைமை ஆசிரியர் ஞானசௌந்தரி, உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் என். தண்டபாணி உதவி ஆசிரியர்கள் எஸ்தர், அஜிதாரெஜி , வார்டு உறுப்பினர்கள் சுரேஷ்,ராஜேஷ், கழக நிர்வாகிகள் எம்.மனோகரன், ரூபன், யுவராணி, ஆர்.நாகராஜன், ஏ.ஆர்.முருகேசன்,கமல், மெக்கானிக் புருஷோத்தமன், மணிகண்டன், பெருமாள், ஜி.விஜயன், சங்கர், சுப்பிரமணி, வி.கே.கண்ணன், பள்ளி தலைமை ஆசிரியர் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர், கிளை கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள்,அரசு துறை அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மேயர் க.வசந்தகுமாரி வ.க.ரவி முன்னிலையில்

# தாம்பரம் கிழக்கு பகுதியில் பூத் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் அறிக்கை!

காஞ்சிபுரம், செப்.30

தாம்பரம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மாடம்பாக்கம் லயன் ஆ.நடராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் கிழக்கு பகுதியில் பூத் வாரியாக கழகச் செயல் வீரர்கள் கூட்டங்கள் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைக்கிணங்க, மாவட்டக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்டப் பிரதிநிதி தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, பெருங்களத்தூர் தெற்கு பகுதி துணைச் செயலாளர் வ.க.ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

கீழ்கண்டவாறு பூத் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

30.9.2023 சனிக்கிழமை, 145, 249, 250, 380, 146, 267, 268, 381 ஆகிய பூத்துகளிலும், 1.10.2023 ஞாயிற்றுக்கிழமை, 157, 251, 252, 382, 158, 261, 383 ஆகிய பூத்துகளிலும், 7.10.2023 சனிக்கிழமை, 159, 166, 263, 396, 167, 265, 264, 401 ஆகிய பூத்துகளிலும், 8.10.2023 ஞாயிற்றுக்கிழமை, 168, 169, 266, 411, 409, 410 ஆகிய பூத்துகளில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி முன்னிலையிலும்,

30.9.2023 சனிக்கிழமை, 406, 385, 389, 374, 407, 390, 391, 375 ஆகிய பூத்துகளிலும், 1.10.2023 ஞாயிற்றுக்கிழமை, 165, 392, 393, 376, 397, 377, 379 ஆகிய பூத்துகளிலும், 7.10.2023 சனிக்கிழமை, 378, 398, 399, 394, 402, 386 ஆகிய பூத்துகளிலும், 8.10.2023 ஞாயிற்றுக்கிழமை, 394, 161, 403, 387, 162, 400, 404, 384 ஆகிய பூத்துகளிலும், 14.10.2023 சனிக்கிழமை, 163, 164, 388, 405, 408 ஆகிய பூத்துகளில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி துணைச் செயலாளர் வ.க.ரவி முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே தாம்பரம் கிழக்கு பகுதியில் உள்ள அனைத்து வாக்குச் சாவடியிலும் கீழ்க்கண்ட விவரம்படி பூத் வாரியாக அந்தந்த தேதி நேரங்களில் கழக செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அந்தந்த வட்டக் கழகச் செயலாளர்கள் முன்னின்று செய்து சம்பந்தப்பட்ட பூத்தில் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரின் பெயரும் இடம் பெறும் வகையில் பூத் செயல் வீரர்கள் பூட்ட அழைப்பிதழ்படி முறையாக அச்சிட்டு அந்த அழைப்பிதழை வாக்கு சாவடியில் உள்ள அனைவருக்கும் தந்து வாக்குச் சாவடி நிலை முகவர்கள், வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் அனைவரையும் கூட்டத்தில் பங்கேற்பு மாவட்ட கழகத்திற்கு பெருமை சேர்த்திடும் வகையில் மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்திடும்படி ஒன்றிய கழகச் செயலாளர் மாடம்பாக்கம் லயன் ஆ.நடராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில்

# 124 'அ' வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, செப். 30-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்படி மயிலை கிழக்கு பகுதி 124 அ வட்ட கழக ஆலோசனைக் கூட்டம் பகுதி கழகச் செயலாளர் எஸ். முரளி முன்னிலையில், வட்ட அவைத் தலைவர் கு.வீரபத்திரன் தலைமையில், விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., என்.அன்பழகன், மு.உதயசூரியன், மு.சரவணன், வெ.சரண்ராஜ், எஸ். நதியா, பிரஸ் கே.ரவி, எம்.அல்ராஜ், பி.ஆர்.அருண், லோகேஸ்வரன், டி.ரூப்நாத் ஆகியோர் வரவேற்பில் இன்று (30.09.2023) சனிக்கிழமை, காலை:11 மணி அளவில் மயிலை கிழக்கு பகுதி அலுவலகம், சிருங்கேரி மடம் சாலையில் உள்ள அலுவலகத்தில் கூட்டம் நடைபெறுகிறது.

எனவே, இக்கூட்டத்தில் 124.அ வட்டத்தை சார்ந்த மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர் நிகழ்ச்சிகள் புதிய கழக இரு வண்ணக் கொடிகள் அமைத்திட, கழக ஆக்கபணிகள்,

இவ்வாறு 124 அ வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா. அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாங்காடு நகர தி.மு.க. சார்பில்

# பாகம் வாரியாக (பூத்) செயல்வீரர்கள் கூட்டம்!

## நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப். 30-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசனின் ஆணைக்கிணங்க, மாங்காடு நகர தி.மு.க. சார்பில் பாகம் வாரியாக (பூத்) கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது என நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தெரிவித்துள்ளார்.

கூட்டம் நடைபெறும் நாள், பாகம், தலைமை விவரம் வருமாறு:-

30.9.2023 - சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் 141வது பாகம் ஏ.தம்பிதுரை, காலை 10.30 மணி 151வது பாகம் - இ.தினேஷ், காலை 11.30 மணி 152வது பாகம் - வி.சுரேஷ், மாலை 4 மணி 142வது பாகம் வி.சத்யா, மாலை 5 மணி 159வது பாகம் - பா.கௌதம் ஆகியோர் தலைமையிலும்,

1.10.2023 ஞாயிறு காலை 9 மணி 157வது பாகம் - இ.மனோகரன், காலை 10.30 மணி 158வது பாகம் - எம்.எம்.கணபதி, காலை 11 மணி -153வது பாகம் - பி.திருநாவுக்கரசு, மாலை 3 மணி 154வது பாகம் - சு.துரை, மாலை 4 மணி - 155வது பாகம் - ஆ.குமரேசன், மாலை 4.30 மணி156வது பாகம் - ஆ. குமரேசன், மாலை 4.30 மணி 156வது பாகம் - மு. சம்பத் ஆகியோர் தலைமையிலும் நடைபெறுகிறது என நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தெரிவித்துள்ளார்.



எங்கள் தலைவர்; எங்கள் கட்சி; எங்கள் கொடி; எங்கள் கொள்கை என்ற தலைப்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திருத்தணி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன் ஏற்பாட்டில் கழக நிர்வாகிகள் இல்லந்தோறும் கழக கொடியேற்றும் விழா நடைபெற்றது இதில். திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. திருத்தணி மேற்கு ஒன்றியத்தில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்திற்கு நேரில் சென்று இரு வண்ணக் கொடியினை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரன், நிர்வாகிகள் மாணிக்கம் , முரசொலி மூர்த்தி, கன்னியப்பன் , வெங்கடேசன், டில்லிபாபு, நரசிம்மராஜா, கோதண்டம், நிலா கோவிந்தசாமி, வளர்மதி குமார், பி.டி. விநாயகம், பிள்ளையார், குமாரவேல், என்.பூபாலன், எம்.ஆர்.குப்புசாமி, கே.ஏ.சீனிவாசன், பி.என்.ஜி.சீனிவாசன், ஹரிபாபு, கோவாந்தான், அன்பு, கிளைக் கழக செயலாளர் பிரதிநிதிகள் அணிகளின் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றியம், கோவளம் ஊராட்சியில் நடைபெற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனைகள் விளக்கத் தெருமுனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, திருப்போரூர் ஒன்றியப் பெருந்தலைவர், திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் கோவளம் ஊராட்சி மன்ற தலைவர் சோபனா தங்கம்சுந்தர், எ.அப்சாலி, தே.பெருமாள், ஜெ.கே.சம்பத், என்.ராஜா, ஆதிலட்சுமி பெருமாள் ஆகியோர் வரவேற்புரையில் ஒன்றிய துணை செயலாளர்கள் எல்.ஜெயபால், ஏ.ரமேஷ், எம். ராஜாராம், மாவட்டப் பிரிதிநிதிகள் மு.மயில்வாகனன், என்.ஜி.கெஜராஜன் முன்னிலையில் தலைமை கழக பேச்சாளர், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஈரோடு இறைவன் சிறப்புரை ஆற்றினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன் அவர்கள், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஆர்.கோவிந்து, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் சி.கோபிநாத் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இறுதியில் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் நா.கோபு நன்றி கூறினார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் வெளியிட்டவுடன்

# புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.30-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில், அக்டோபர் 27-ஆம் தேதி வாக்காளர் பட்டியல் வெளியிட்ட உடன், தமிழ்நாடு முதல் அமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, புதிய வாக்காளர்களை சேர்க்கும் முக்கிய பணியில் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினருடன் இணைந்து, அவரவர் பாகங்களில் புதிய வாக்காளர்களை சேர்க்கும் இன்றியமையா பணியில் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்று மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

இந்திய தேர்தல் ஆணையம் 1.1.2024ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்காக வரைவு வாக்காளர் பட்டியல் வருகிற அக்டோபர் 27 ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது. வரைவு வாக்காளர் பட்டியில் வெளியிட்ட அன்றைய தினமே வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகளும் தொடங்கும்.

அக்டோபர் 27ஆம் தேதி முதல் டிசம்பர் 12ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் இடம் மாறிய வாக்காளர்கள் பெயர்களை சேர்த்தல், இறந்த இடம் மாறிய வாக்காளர்கள் பெயரை நீக்கம் செய்தல், பெயர் முகவரி மாற்றம் செய்யும் பணிகள் போன்ற திருத்தம் செய்யும் பணிகளை படிவம் 6, 6பி, 7, 8 ஆகிய படிவத்தில் பூர்த்தி செய்து, அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் தந்திட வேண்டும்.

முதல் அமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி அன்று, 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாதவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள வாக்காளர்



பட்டியலிலிருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம் நவம்பர் 4, 5, சனி, ஞாயிறு மற்றும் நவம்பர் 18, 19, சனி, ஞாயிறு ஆகிய 4 நாட்கள் காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாவட்டம் முழுவதும், அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற உள்ளது.

மாவட்டம் முழுவதும், சாதாரண நாட்களில் வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் 4 நாட்களில் வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இணைந்து இரு கரம் கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி மிகவும் முக்கியமானது என்பதை கவனத்தில் கொண்டு கழகத்தினர் அனைவரும் இணைந்து இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் இச்சிறப்பு பணியில் மாநகரபகுதிஒன்றியநகரபேரூர் கழக செயலாளர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் நேரில் சென்று, கழகத்தினர், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்கு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் இணைந்து இப்பணியை சிறப்பாக செய்கிறார்களா என்பதை கண்காணிப்பு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் என்று மேலும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டில் ஒரு கோடி பனை விதைகள் விதைக்க அரசு ஏற்பாடு!

## பணிகள் வரும் 1-ஆம் தேதி தொடக்கம்!

சென்னை, செப். 30 -

பனை மரத்தொழிலாளர்கள் நல வாரியம், கிரீன் நீடா சுற்றுச் சூழல் அமைப்பு மற்றும் நாட்டு நலப்பணி திட்டம் ஆகிய அமைப்புகளோடு தன்னார்வலர்களும் இணைந்து தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலுடன் பனை விதைகளை விதைக்கும் பணி நடைபெற உள்ளது.

திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி கடற்கரை வரையிலான ஆயிரத்து 76 கிலோ மீட்டர் தொலைவு நெடுகிலும் ஒரு கோடி பனை விதைகள் சேகரித்தல் மற்றும் சேகரித்த பனை விதைகளை அக்டோபர் 1ல் நடவு செய்தல் போன்ற பணிகள் தொடங்கப்படவுள்ளன. இதில் அனைத்து கல்லூரி மாணவர்களும் பங்கு பெறும் வகையில், ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் 10 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் வீதம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர் பாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரிகளின் முதல்வர் களுக்கு சுற்றறிக்கை அனுப்பவும் அறிவுறுத்தபட்டுள்ளது.



தமிழ்நாடு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் சார்பில் கொளத்தூர், திரு.வி.க. நகர், எழும்பூர், பெரம்பூர், துறைமுகம் ஆகிய 5 தொகுதிகளில் வசிக்கும் 370 கர்ப்பிணிப் பெண்களுக்கு கொளத்தூரில் உள்ள காமராஜர் திருமண மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று நடத்தி வைத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இதில் தாயகம் கவி எம்எல்ஏ, மண்டலக்குழு தலைவர் சரிதா மகேஷ்குமார், பகுதி செயலாளர் ஐசிஎப் முரளி, நிலைக்குழு உறுப்பினர் சர்ப ஜெயாதாஸ், தலைமை கழக வழக்கறிஞர் சந்துரு, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் அருணா, உமாமகேஸ்வரி, இந்திரா. வனிதாதேவி, உஷா. லாவண்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை, ஓட்டேரி, செல்லப்பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சொந்தமான

# ரூ.1.5 கோடி மதிப்பீட்டிலான சொத்து மீட்பு!

சென்னை, செப்.30

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று (29.9.2023) சென்னை, ஓட்டேரி, செல்லப்பிள்ளையார் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.1.5 கோடி மதிப்பீட்டிலான சொத்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

சென்னை, ஓட்டேரி, செல்லப்பிள்ளையார் திருக்கோயிலுக்கு சொந்தமாக ஓட்டேரி செல்லப்பெருமாள் கோயில் தெருவில் அமைந்துள்ள 1,440 சதுரடி பரப்பளவிலான கட்டிடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. சென்னை மண்டலம் இணை ஆணையர் நீதி மன்ற உத்தரவின்படி சட்டப்பிரிவு 78 மற்றும் 79-ன் கீழ் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை தலைமையில், உதவி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திருமதி சி. நித்யா முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.1.5 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது திருக்கோயில் செயல் அலுவலர் சண்முகம், சிறப்பு பணி அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.







திராவிட முன்னேற்றக் கழக தகவல் தொழில்நுட்ப அணியின்

**ட்விட்டர் ஸ்பேசஸ் -X**

இன்று | இரவு 8 மணிக்கு | @DMKITwing ஹேண்டிலில்

# கழகத் தலைவர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## சிறப்புரையாற்றுகிறார்!

கலைஞர் 100
1924 - 2023

**நாள் 01** — மாண்புமிகு அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி — தலைப்பு: கலைஞரின் வழியில்

**நாள் 02** — வழக்கறிஞர் அருள்மொழி — தலைப்பு: கலைஞர் எனும் மாணவர்

**நாள் 03** — மாண்புமிகு ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ — தலைப்பு: சமத்துவக் கலைஞர்

**நாள் 04** — மாண்புமிகு ஆ.இராசா எம்.பி — தலைப்பு: கலைஞரும் இந்தியாவும்

**நாள் 05** — திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் — தலைப்பு: கலைஞர் கண்ட களங்கள்

**நாள் 06** — பேராசிரியர் சுப வீரபாண்டியன் — தலைப்பு: தலைவர் கலைஞரும் திராவிடப் பள்ளியும்

**நாள் 07** — மாண்புமிகு இ.பரந்தாமன் எம்.எல்.ஏ — தலைப்பு: கலைஞரின் உடன்பிறப்பு

**நாள் 08** — எழுத்தாளர் திரு.வி.எம்.எஸ்.சுபகுணராஜன் — தலைப்பு: கலைஞரின் சமநீதியும் சமூகநீதியும்

**நாள் 09** — ஆசிரியர் கி.வீரமணி — தலைப்பு: ஈரோட்டுப் பாதையில் கலைஞர்

**நாள் 10** — மாண்புமிகு எம்.எம்.அப்துல்லா எம்.பி — தலைப்பு: கலைஞர் The Economist

**நாள் 11** — மாண்புமிகு தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி — தலைப்பு: கலைஞரின் கழகக் குடும்பம்

**நாள் 12** — மாண்புமிகு எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ — தலைப்பு: திராவிட தாத்தா கலைஞர்

**நாள் 13** — மாண்புமிகு அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் — தலைப்பு: கலைஞரின் சமூகநீதி

**நாள் 14** — திரு.திண்டுக்கல் ஐ.லியோனி — தலைப்பு: திராவிட ஆசான் கலைஞர்

**நாள் 15** — திரு.ஆர்.எஸ்.பாரதி, கழக அமைப்புச் செயலாளர் — தலைப்பு: அண்ணாவின் தம்பி கலைஞர்

**நாள் 16** — வழக்கறிஞர் திரு.தமிழன் பிரசன்னா — தலைப்பு: கலைஞரின் மாணவன்

**நாள் 17** — மாண்புமிகு திரு.மு.சண்முகம் எம்.பி — தலைப்பு: கலைஞர் வழங்கிய தொழிலாளர் உரிமை

**நாள் 18** — வழக்கறிஞர் சரவணன் அண்ணாதுரை — தலைப்பு: Kalaignar The Warrior of Social Justice

**நாள் 19** — மாண்புமிகு செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ — தலைப்பு: கலைஞரின் தோழமை

**நாள் 20** — பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் — தலைப்பு: கலைஞரின் நவீனத்துவம்

**நாள் 21** — மாண்புமிகு சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ — தலைப்பு: கலைஞரின் மாணவர் மன்றம்

**நாள் 22** — மருத்துவர் யாழினி ப.மீ — தலைப்பு: டாக்டர் கலைஞர் உருவாக்கிய டாக்டர்கள்

**நாள் 23** — மாண்புமிகு அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் — தலைப்பு: கலைஞரின் தமிழ்நாடு

**நாள் 24** — வழக்கறிஞர் ச.மனுராஜ் — தலைப்பு: கலைஞரின் தமிழ்நாடு

**நாள் 25** — முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் — தலைப்பு: கலைஞரும் சமூக மாற்றமும்

**நாள் 26** — மாண்புமிகு அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் — தலைப்பு: கலைஞரும் தமிழ்நாட்டின் தொழிநுட்ப வளர்ச்சியும்

**நாள் 27** — மாண்புமிகு திருச்சி சிவா எம்.பி — தலைப்பு: புரட்சியாளர் கலைஞர்

**நாள் 28** — திரு. பீட்டர் அல்போன்ஸ் — தலைப்பு: கலைஞரின் அரசியல் மாண்பு

**நாள் 29** — மாண்புமிகு அமைச்சர் முனைவர். க. பொன்முடி, கழக துணைப் பொதுச் செயலாளர் — தலைப்பு: கலைஞரின் கல்விப் புரட்சி



இந்த திராவிட மாதம் ஆடியோ தொடர் உரைகள்

Spotify amazon music

உள்ளிட்ட பல்வேறு தளங்களில்

**இலட்சக்கணக்கான**

நபர்களால் கேட்கப்பட்டு வருகிறது..

DMK IT WING

திராவிட முன்னேற்றக் கழக தகவல் தொழில்நுட்ப அணி செப்டம்பர் மாதத்தை

**திராவிட மாதம்**

என கொண்டாடுகிறது.


நாள் : 30.09.2023, சனிக்கிழமை
இடம் : காமராஜ் நகர், 44வது வார்டு, பெரம்பூர்.
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களின் வழிகாட்டுதலின்படி
புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்புற ஆரம்ப
சுகாதார நிலைய கட்டிடத்தை திறக்க வருகை தரும்
மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு அவர்களையும்
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு. பி.கே.சேகர்பாபு அவர்களையும்
திரு. தா.இளையஅருணா
சென்னை வடக்கு மாவட்ட செயலாளர்
திருமதி பிரியா ராஜன்
மாண்புமிகு சென்னை மேயர்
திரு. மு.மகேஷ்குமார்
மாண்புமிகு சென்னை துணை மேயர்
திரு. கலாநிதி வீராசாமி
வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. ஆர்.டி.சேகர்
பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர்
திரு. நேதாஜி யு.கணேசன்
4வது மண்டலக்குழு தலைவர்
அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்
இரா.நரேந்திரன் B.E.,M.S.,
மாநில பொறியாளர் அணி து.செயலாளர்
திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன் M.A., B.Ed., MC.
வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் – பெருநகர சென்னை மாநகராட்சி
ARASU ARTS


நாள் : 30.09.2023 சனிக்கிழமை காலை 10.00 மணி – 4.00 மணி
இடம் : அரசு சட்டக்கல்லூரி, செங்கல்பட்டு
DMK LEGAL WING
முத்தமிழறிஞர் கலைஞர்
நூற்றாண்டு விழாவையொட்டி
தி.மு. கழக வழக்கறிஞர் அணி சார்பில்
கலைஞர் 100 1924 - 2023
செங்கல்பட்டு - சென்னை
மண்டலத்தில் உள்ள
மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி
பேச்சுப்போட்டியை துவக்கி வைக்க வருகை தரும்
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு. எஸ்.ரகுபதி அவர்களே
மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு. தா.மோ.அன்பரசன் அவர்களே
கழக சட்டத்துறை செயலாளர் – மூத்த வழக்கறிஞர்
திரு. என்.ஆர்.இளங்கோ அவர்களே
உங்கள் அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்
என்.கனகராஜ்
மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி
9444129952


நாள் : 30 - 9 - 2023, சனிக்கிழமை, காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை
இடம் : G.S.T.ரோடு, வள்ளுவர் குருகுலம் மேல்நிலைப்பள்ளி, மேற்கு தாம்பரம்
தமிழ்நாடு அரசு
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில்
கலைஞர்
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இருபால் இளைஞர்களுக்கான
மாபெரும்
வேலைவாய்ப்பு முகாம்
இளைஞர் திறன் திருவிழா
விழாவில் கலந்துகொண்டு பணி நியமன ஆணையை வழங்கிட வருகை தரும்
திருமிகு டி.ஆர்.பாலு B.Sc., M.P.
கழகப் பொருளாளர் / கழக நாடாளுமன்ற குழுத்தலைவர்
மாண்புமிகு குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
தா.மோ.அன்பரசன்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
சி.வெ.கணேசன்
மற்றும் சீர்மிகு பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கும்...
அன்புடன் வரவேற்கும்... S.R.ராஜா M.L.A.
மாநகரக் கழகச் செயலாளர் - தாம்பரம் சட்டமன்றத் தொகுதி
தாம்பரம் மாநகர தி.மு.க.


பெரம்பூர் காமராஜ் நகரில்
ரூ. 2.90 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள
நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் திறப்பு விழா
நாள் : 30.09.2023 காலை 10 மணி – இடம் : காமராஜ் நகர், பெரம்பூர்.
தலைமை
திருமதி. ஆர்.பிரியா மாண்புமிகு மேயர்
திறப்பாளர்
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
கே.என்.நேரு
முன்னிலை
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
பி.கே.சேகர்பாபு
பங்கேற்போர்
டாக்டர் கலாநிதி வீராசாமி
வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
ஆர்.டி.சேகர்
பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர்
மு.மகேஷ்குமார்
துணை மேயர்
தா.இளையஅருணா
நிலைக்குழுத் தலைவர் (நகரமைப்பு)
சர்பஜெயா தாஸ் நரேந்திரன்
நிலைக்குழுத் தலைவர் (வரி விதிப்பு (ம) நிதி)
நேதாஜி யு.கணேசன்
தண்டையார்பேட்டை மண்டலக்குழுத் தலைவர்
க.ஜெயராமன் தெ.ப.செ., அ.முருகன் வ.ப.செ.,
ஆர்.எஸ்.மனோகரன் 44வது அ.வ.செ.
த.ஆறுமுகம் 44வது வ.செ.
அன்புடன் வரவேற்கும் : பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி



தலைமைச் செயலகத்தில், நேற்று (29.09.2023) தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தலைமையில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகளின் உயர் அலுவலர்களுடன் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளின் நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், முதன்மைச்செயலாளர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மேலாண்மை இயக்குநர் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், இணை மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் (பணிகள்), கூடுதல் மாநகர காவல் ஆணையர் (போக்குவரத்து) மற்றும் வட்டார துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு பணி நியமன ஆணைகளை வழங்குகிறார்!

# தாம்பரத்தில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்!

### அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - சி.வெ.கணேசன் - மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தாம்பரம், செப்.30

மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் கலைஞர் நூற்றாண்டு முன்னிட்டு மேற்கு தாம்பரம் வள்ளுவர் குருகுலம் மேல்நிலைப்பள்ளியில் 200 தனியார் பொது நிறுவனங்கள் 20,000 காலி பணியிடங்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் இளைஞர் திறன் திருவிழா நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் பணி நியமன ஆணைகளை கழகப் பொருளாளர் நாடாளு மன்ற கழக குழு தலைவர் டி.ஆர் பாலு வழங்குகிறார். குரு சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் , தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் மற்றும் அரசு துறை அதிகாரிகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

இந்த மாபெரும் வேலை வாய்ப்பு முகாமினை படித்த இருபால் இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்துகொண்டு நிகழ்ச்சி சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுராந்தகம் தொகுதி - அச்சிறுப்பாக்கம் - மதுராந்தகம் ஒன்றியங்களில்

# ரூ.20.21 கோடியில் கட்டப்பட உள்ள பாலங்கள் - அங்கன்வாடி மையங்களுக்கு அடிக்கல் - திறப்பு விழா!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்!

மதுராந்தகம், செப்.30

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் மற்றும் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் ரூ.20.21 கோடியில் கட்டப்பட உள்ள புதிய அங்கன்வாடி கட்டிடங்கள் திறப்பு மற்றும் புதிய பாலம் அடிக்கல் நாட்டு விழாவினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்.

மதுராந்தகம் மற்றும் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டிடங்கள் திறப்பு விழா மற்றும் புதிய பாலம் அடிக்கல் நாட்டு விழாவினை காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், தலைமையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார்.

முதலாவதாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரையப்பாக்கம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2022-23-ன்கீழ் ரூ.11.97 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டிடத்தையும், முன்னூத்தி குப்பம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.22.65 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகத்தையும், கினார் ஊராட்சியில் பிரதான் மந்திரி கிராம சாலைகள் திட்டம் 2022-2023ன் கீழ் தாத்தான்குப்பம் முதல் கே.கே.புதூர் வரை 10/600 கிலோமீட்டர் தூரம் வரை கிளியாற்றின் குறுக்கே ரூ.16.67 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முன்னூத்தி குப்பம் ஊராட்சியில் நபார்டு-27 திட்டம் 2021-22-ன்கீழ் முள்ளி முதல் தேவாதூர் - தச்சூர் சாலை வரை ரூ.175 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட சிறு பாலத்தை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

மேலும் முன்னூத்தி குப்பம் ஊராட்சியில் பிரதான் மந்திரி கிராம சாலைகள் திட்டம் 2022-2023ன் கீழ் தாத்தான்குப்பம் முதல் கே.கே.புதூர் வரை 5/300 கிலோமீட்டர் தூரம் வரை (கல்குளம் ஓடையில்) ரூ.199 லட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிறுநல்லூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2020-21-ன்கீழ் ரூ.10.19 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தையும், அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மொறப்பாக்கம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2021-22-ன் கீழ் ரூ.11.97 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தையும், களத்தூர்-1, களத்தூர்-2 ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2021-22-ன் கீழ் தலா ரூ.11.97 லட்சம் மதிப்பீட்டில் 2 புதிய அங்கன்வாடி மைய கட்டிடங்களையும் திறந்து வைத்து அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு இனிப்புகளையும், பரிசுப் பொருட்களையும் வழங்கினார்.

மேலும், அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மின்னல், கீழ் மின்னல் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.7.90 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் சமையல் கூடத்தை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் பயிற்சி ஆனந்த் குமார் சிங், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் இந்து பாலா, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சற்குணா, அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் கண்ணன், மதுராந்தகம் ஒன்றிய குழு தலைவர் தமிழ்ச்செல்வி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஊராட்சி தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ரூ.50 லட்சம் மதிப்பில் - ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம் -

# சிந்தலப்பட்டி ஊராட்சியில் சமுதாயக் கூடம்!

### உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்!

திண்டுக்கல், செப். 30 - திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம், சிந்தலப்பட்டி ஊராட்சியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தினை உணவு மற்றும் உணவுப்பொருள்வழங்கல்துறை அமைச்சரும், திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளருமான அர.சக்கரபாணி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் விளாப்பாக்கம் ஊராட்சியில் 2 பேருந்து நிழற்குடை மற்றும் ரூ.4லட்சத்து 9 ஆயிரம் செலவில் புதுப்பிக்கப்பட்ட தொடக்கப் பள்ளி கட்டிடம், ரூ.5லட்சத்து 86 ஆயிரம் செலவில் சமையல் கூட கட்டிடம் உள்ளிட்டவைகளை பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி திறந்து வைத்தார். அருகில் ஒன்றிய செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், ஒன்றிய குழு துணை தலைவர் எம்.பார்த்துல்லாகான், ருவள்ளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் குணசேகரன், வட்டார கல்வி அலுவலர் வீரராகவன், ஊராட்சி மன்ற தலைவர் பொன்மணி ஆனந்தன் மற்றும் ஒன்றிய கவுன்சிலர் டி.எம்.எஸ்.வேலு, ஒன்றிய துணைச் செயலாளர் மனோகரன், தலைமை ஆசிரியர் ஞானசௌந்தரி, உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் என். தண்டபாணி உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஓடைப்பட்டி, குத்திலிப்பை, எல்லப்பட்டி, மார்க்கம்பட்டி, சின்னக்காம்பட்டி, இடையகோட்டை, வலையபட்டி, ஜோகிபட்டி, புளியமரத்துக்கோட்டை, புலியூர் நத்தம், கேதையுறம்பு, வெரியப்பூர், ஐவ்வாதுபட்டி ஆகிய ஊராட்சிகளில் ரூ.962.14 இலட்சம் மதிப்பீட்டிலான சமுதாயக்கூடம், புதியசாலை, பயணியர் நிழற்குடை, அங்கன் வாடி மையக்கட்டிடம் போன்ற பணிகளுக்கு அடிக்கல் நாட்டிவைத்தும், சமுதாயக் கூடம், நியாயவிலைக்கடைகளைத் திறந்து வைத்தும் சிறப்புரையாற்றினார்.

### பாசனத்திற்கான மோட்டார் பம்பு செட்டுக்கு

# அரசின் ரூ.15 ஆயிரம் மானியத் திட்டத்தில் விவசாயிகள் இணைந்து பயன் பெறுவீர்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

சென்னை, செப்.30-

வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தமிழ்நாடு அரசு அறிமுகப் படுத்தியுள்ள பாசனத்திற்கான மின்மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.15,000/ மானியமாக வழங்கும் திட்டத்தில் விவசாயிகள் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்.



#### திட்டத்தின் நோக்கம்

விவசாயத்திற்கு பழைய, திறன்குறைந்த மின் மோட்டார் பம்புசெட்டுகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதால், மின்சாரப் பயன்பாடு அதிகமாவதோடு, பாசன நேரமும் அதிகரிக்கிறது. சாகுபடிக்கான செலவு அதிகரித்துவரும் வேளையில், சிறு, குறு விவசாயிகள் இத்தகைய பழைய திறன் குறைந்த பம்பு செட்டுகளை மாற்றுவதற்குத் தயங்குகிறார்கள். இத்தகைய விவசாயிகளின் நலனுக்காக, மின்சார பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் அதிகமான பாசன நீரினை குறைந்த செலவில் இறைத்தல் ஆகிய நோக்கத்திற்காக, புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகளை விவசாயிகள் வாங்குவதற்கான மானியம் தமிழ்நாடு அரசின் வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

#### திட்ட விபரம்

பழைய பம்புசெட்டை மாற்றி, புதிய மின் மோட்டார் பம்புசெட் நிறுவுவதற்கும், புதிதாக அமைக்கப் பட்டுள்ள கிணற்றுக்கு புதிய மின் மோட்டார் பம்புசெட் வாங்குவதற்கும் 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

#### மானியம் எவ்வளவு?

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மானியம் பெறுவதற்கு விவசாயிகள் தங்களின் விபரம் தெரிவித்து புதிய மின் மோட்டார் பம்புசெட் வாங்கும் பொழுது அதன் மொத்த தொகையில் 50% அல்லது ரூ.15,000/ இவற்றில் எது குறைவோ அத்தொகை பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

#### மானியம் பெறுவதற்கான தகுதி

ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகள், தங்களது திறன்குறைந்த பழைய மின்மோட்டார் பம்புசெட்டுகளை மாற்ற விரும்பி னாலும், புதிதாக கிணறு அமைத்து, சொந்தமாக மின் இணைப்பு பெற்ற விவசாயிகளும், இத்திட்டத்தில் பயன் பெறலாம். இத்திட்டத்தில் 5,000 சிறு குறு விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்காக 1000 எண்கள் பம்பு செட்டுகள் இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அங்கீகாரம் பெற்ற நிறுவன மாடல்களிலிருந்து, தங்களுக்கு விருப்பமான நான்கு ஸ்டார் தரத்திற்குக் குறையாமல் உள்ள மின்மோட்டாரை விவசாயிகள் தேர்வு செய்து கொள்ளலாம். மேலும், ஏற்கனவே தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் நுண்ணீர்ப் பாசன அமைப்பு நிறுவியுள்ள விவசாயிகள் மற்றும் நுண்ணீர்ப் பாசன அமைப்பு நிறுவிட விருப்பமுள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுடையவர் ஆவார்.

#### எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

இத்திட்டத்தில் பயன் பெற விரும்பும் விவசாயிகள் உழவன் செயலி மூலமாகவோ, அல்லது நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பு (MIMIS) என்ற இணையதளம்மூலமாகவோ விண்ணப்பித்து, தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். கூடுதல் விபரங்களுக்கு வருவாய் கோட்ட அளவிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

#### மானியம் பெறுவதற்கு தேவைப்படும் ஆவணங்கள்:

இதுவரை நுண்ணீர்ப் பாசன அமைப்பினை நிறுவிடாத விவசாயிகள் ஆதார் அட்டை, சிறு, குறு விவசாயிக்கான சான்றிதழ், புகைப் படம், வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம், ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவராயிருப்பின் சாதிச் சான்றிதழ், சிட்டா, கிணறு விபரத்துடன் கூடிய அடங்கல், மின் இணைப்பு (Service Connection) சான்றிதழ், புதிய மின்மோட்டார் வாங்குவதற்கான உத்தேச விலைப் பட்டியல்/ விலைப்புள்ளி போன்ற ஆவணங்களுடன் உழவன் செயலி மூலமாகவோ அல்லது நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பு (MIMIS) இணையதளம்மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

ஏற்கனவே தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் மானியத்தில் நுண்ணீர்ப் பாசனம் நிறுவியுள்ள விவசாயிகள் மின் இணைப்பு சான்றிதழ் மற்றும் புதிய மின்மோட்டார் வாங்குவதற்கான உத்தேச விலைப்பட்டியல்/ விலைப்புள்ளியுடன் வருவாய் கோட்ட அளவிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பில் (MIMIS) பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்கலாம்.

அதிக நீர் இறைக்கும் திறன் கொண்ட 4 ஸ்டார் தரத்திற்கு குறைவில்லாத 19 மின்மோட்டார் தயாரிப்பு நிறுவனங்களின் 196 மாடல் மின் மோட்டார் பம்புசெட்டுகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் மாடல்களின் விபரங்களை https://aed.tn.gov.in/media/filer_public/ae/6d/ae6d6917a61b4594a7c840a03354541b/chabbimetadata.pdf அல்லது https://tnhorticulture.tn.gov.in:8080/dXrUJSnG2k/Electric%20motor%20pumpsetpamphlet.pdf என்ற இணைய தள முகவரியினைச் சொடுக்கி அறியலாம். இவற்றிலிருந்து விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான நிறுவனங்களின் மாடல்களை தேர்வு செய்து கொள்ளலாம். மேலும் பம்ப்செட் மெக்கானிக்குகள், தங்களிடம் பழுதுநீக்க வரும் விவசாயிகளை புதிதாக பம்ப்செட் வாங்குவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருந்தால், அவர்களை வருவாய் கோட்ட அளவில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தினை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பாசன வசதியை மேம்படுத்திடவும், சிறு, குறு விவசாயிகளின் நிதிச்சுமையினை வெகுவாகக் குறைக்கும் நோக்கத்திலும், தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள மின்மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.15,000/ மானியமாக வழங்கும் இத்திட்டத்தில் இணைந்து பயன்பெறுமாறு, வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

### 21-ஆவது பன்னாட்டுக் கருத்தரங்கம்!

# மும்பையில் கலைஞர் நூற்றாண்டு விழா - கலைஞர் தமிழ் ஆய்வு மாநாடு!

### அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், ச.சி.சிவசங்கர் சிறப்புரை! அலி ஷேக் மீரான் தலைமை!

மும்பை, செப்.30

மும்பையின் நவிமும்பை தமிழ்ச் சங்கத்தில் வைத்து நாளை (01-10-2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி முதல் மாலை வரையான பல்வேறு வகையான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம், மும்பை தமிழ் இலெமூரியா அறக்கட்டளை, ஔவைக்கோட்டம் திருவையாறு ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தவுள்ள நிகழ்வில் தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்த் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

புத்தகக் கண்காட்சி மகளிர் அரங்கம், இசையரங்கம், நாட்டியரங்கம் கருத்தரங்கம் கவியரங்கம் விருது வழங்கும் நிகழ்வு, பட்டிமன்றம் எனப் பல்வேறு நிகழ்வுகள் அடங்கிய பிரமாண்ட மான இலக்கிய மாநாடாக மும்பையில் நிகழவுள்ள கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலைஞரின் புகழுக்கு காரணமாக விஞ்சி நிற்பது இன மீட்சியே ... மொழி மாட்சியே... என்ற தலைப்பில் நடைபெறவுள்ள பட்டிமன்றத்தினை தமிழ்நாடு அரசு இ.எஸ்..ஐ. மருத்துவமனைகளின் இயக்குநர் நற்றமிழ் நாயகர் மருத்துவர் ஜெய. ராஜமூர்த்தி நடுவராக இருந்து நடத்திக் கொடுக்கவுள்ளார்.

புரவலர் அலிசேக் மீரான் நிகழ்வுத்தலைமை ஏற்கிறார். மாநாட்டு இயக்குநர் முனைவர் மு.கலைவேந்தன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

தமிழ் இலெமூரியா அறக்கட்டளைத் தலைவர் சு.குமணராசன் கலைஞர் ஒரு கருத்துச் சுரங்கம் என்ற தலைப்பிலான கருத்தரங்கத்திற்கு தலைமையும், மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவர் பாவரசு வதிலை பிரதாபன் கலைஞரின் திரைக்காவியம் என்ற தலைப்பிலான கவியரங்கத்திற்கு தலைமையும் ஏற்று நடத்தவுள்ளார்கள்.

முன்னதாக புத்தகக் கண்காட்சியை மும்பை புறநகர் தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்த குமார் தலைமையேற்று நடத்துகிறார். மற்றும் இயக்கம் சார்ந்த இலக்கியம் சார்ந்த அமைப்புகளைச் சார்ந்த பல நிர்வாகி கள் நிகழ்வில் முன்னிலை வகிக்கிறார்கள்.

மகளிர் பங்கேற்கும் சுழலும் சொல்லரங்கம் நிகழ்ச்சியை முனைவர் இளமதி சானகிராமன் தொடங்கி வைக்கிறார்.

'கலைஞரின் சாதனைகளுள் மணிமகுடமாய் திகழ்வது' என்ற தலைப்பில் நடைபெறும் சொல்லரங்கத்தின் நடுவராக தமிழ்ப் பேராசிரியர் முனைவர் ம. மணிமேகலை பங்கேற்கிறார்.

மும்பை சௌந்தர்ய நாட்டியக் கலாலயா பரதக் கலைச்சுடர் பத்மினி இராதாகிருஷ்ணன் மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சி மற்றும் இராணி சித்ரா வழங்கும் திரைத்தமி ழிசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இதனை தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா நடைபெறுகிறது. தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ் மஸ்தான், கலைஞர் ஒரு தமிழ்ச் சங்கம் ஆய்வுக் கோவை நூல் வெளியிட, அதனை மாநாட்டுப் புரவலர் ஜேம்ஸ் தேவதாசன் பெற்றுக் கொள்கிறார்.

ஆகச்சிறந்த தமிழ் அறிஞர்களுக்கு தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் விருதுகளை வழங்கி பாராட்டுரை வழங்குகிறார். முனைவர் அரங்க. பாரி ஏற்புரையாற்றுகிறார்.

கலைஞர் ஒரு தமிழ்ச்சுரங்கம்' என்ற நூலில் கலைஞரின் தமிழ்ச்சுரங்கம், கவிதைச்சுரங்கம், கதைச்சுரங்கம், கலைச்சுரங்கம், பகுத்தறிவுச்சுரங்கம். பண்பாட்டுச் சுரங்கம், ஆளுமைச்சுரங்கம் பற்றிய தொகுப்புகள் இடம் பெற்றுள்ளன. எனவே அனைத்துத் தமிழன்பர்களும் நிகழ்வில் கலந்து மகிழும்படி மாநாட்டு நிர்வாகி கள் கேட்டுக்கொள்கிறார் கள்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவில் மும்பையைச் சேர்ந்த பல்வேறு தமிழமைப்பைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். காலையில் இருந்து மாலை வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வின் இடையில் உணவு மற்றும் சிற்றுண்டியும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி பஸ் ஸ்டாண்ட் எதிரில் அண்மையில்பேரறிஞர் அண்ணா சிலை சேதமடைந்த நிலையில் மீண்டும் புதுப்பித்து பேரறிஞர் அண்ணா சிலை அமைப்பதற்கான பணிகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாநகரக் கழக பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழக செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், பேபிசேகர், பொன்.விஜயன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



YUGA GRAPHICS 63851 21653



## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

# செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க

# வட்ட வாரியாக பாக முகவர்கள் கூட்டம்

நாள் : 30-9-2023 சனிக்கிழமை முதல்
19-11-2023 ஞாயிற்றுக்கிழமை வரை வாரம்தோறும்

### வார்டு எண் : 22

| நாள்/நேரம் | வ. எண் | பூத் எண் | BLA2 பெயர் | மொத்த வாக்குகள் | தேர்தல் பணிக்குழு | 100 பேருக்கு ஒருவர் |
|---|---|---|---|---|---|---|
| சனிக்கிழமை 30.09.2023 | | | | | | |
| காலை10 மணி | 1 | 238 | S.சுவாதி மதன்குமார் | 1390 | 31 | 14 |
| காலை 11 மணி | 2 | 239 | M.சுந்தரமூர்த்தி | 1201 | 31 | 12 |
| காலை 12 மணி | 3 | 240 | D.பூபதி | 1395 | 31 | 14 |
| மாலை 6 மணி | 1 | 243 | S.கோசல்ராமன் | 728 | 31 | 7 |
| மாலை 7 மணி | 2 | 244 | N.அரவிந்தன் | 875 | 31 | 9 |
| மாலை 8 மணி | 3 | 245 | K.ராஜி | 1282 | 31 | 13 |
| ஞாயிற்று கிழமை 01.10.23 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 180 | N.விஜய் | 1139 | 31 | 11 |
| காலை 11 மணி | 2 | 181 | V.ராஜேஷ் | 816 | 31 | 8 |
| காலை 12 மணி | 3 | 258 | V.முருகானந்தம் | 1049 | 31 | 10 |
| மாலை 6 மணி | 1 | 259 | V.சதீஷ் | 1089 | 31 | 11 |
| மாலை 7 மணி | 2 | 262 | V.தினகரன் | 1283 | 31 | 13 |
| மாலை 8 மணி | 3 | 263 | N.ஐயப்பன் | 1368 | 31 | 14 |
| மொத்த பூத் | 12 | | | 13615 | 372 | 136 |

### வார்டு எண் : 25

| நாள்/நேரம் | வ. எண் | பூத் எண் | BLA2 பெயர் | மொத்த வாக்குகள் | தேர்தல் பணிக்குழு | 100 பேருக்கு ஒருவர் |
|---|---|---|---|---|---|---|
| சனிக்கிழமை 07.10.2023 | | | | | | |
| காலை10 மணி | 1 | 188 | S.ஜெகநாதன் | 1269 | 31 | 13 |
| காலை 11 மணி | 2 | 252 | J.காரத்திகேயன் | 993 | 31 | 10 |
| மாலை 6 மணி | 3 | 255 | G.ஹரிஹரன் | 905 | 31 | 9 |
| மாலை 7 மணி | 4 | 256 | D.ஜெகதீஷ் | 728 | 31 | 7 |
| ஞாயிற்று கிழமை 08.10.23 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 257 | S.நாகராஜன் | 1339 | 31 | 13 |
| காலை 11 மணி | 2 | 260 | K.கருணாநிதி | 638 | 31 | 6 |
| மாலை 6 மணி | 3 | 261 | K.சின்னதுரை | 1083 | 31 | 11 |
| மாலை 7 மணி | 4 | 264 | R.வீரராகவன் | 1198 | 31 | 12 |
| மொத்த பூத் | 8 | | | 8153 | 248 | 81 |

### வார்டு எண் : 36

| நாள்/நேரம் | வ. எண் | பூத் எண் | BLA2 பெயர் | மொத்த வாக்குகள் | தேர்தல் பணிக்குழு | 100 பேருக்கு ஒருவர் |
|---|---|---|---|---|---|---|
| சனிக்கிழமை 04.11.2023 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 214 | L.தினேஷ்குமார் | 663 | 31 | 7 |
| மாலை 6 மணி | 1 | 215 | R.அஸ்வின் | 1311 | 31 | 13 |
| ஞாயிற்று கிழமை 05.11.23 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 218 | C.கன்னியப்பன் | 1316 | 31 | 13 |
| காலை 11 மணி | 2 | 219 | P.பாஸ்கரன் | 1373 | 31 | 14 |
| மாலை 6 மணி | 1 | 249 | K.குணசேகரன் | 1405 | 31 | 14 |
| மாலை 6 மணி | 2 | 251 | P.கோபிநாத் | 800 | 31 | 8 |
| மொத்த பூத் | 6 | | | 6869 | 186 | 69 |

### வார்டு எண் : 38

| நாள்/நேரம் | வ. எண் | பூத் எண் | BLA2 பெயர் | மொத்த வாக்குகள் | தேர்தல் பணிக்குழு | 100 பேருக்கு ஒருவர் |
|---|---|---|---|---|---|---|
| சனிக்கிழமை 14.10.2023 | | | | | | |
| காலை10 மணி | 1 | 226 | J.கல்யாணகுமார் | 593 | 31 | 6 |
| காலை 11 மணி | 2 | 227 | A.தங்கராஜ் | 935 | 31 | 9 |
| காலை 12 மணி | 3 | 229 | R.கிருஷ்ணன் | 1177 | 31 | 12 |
| மாலை 6 மணி | 1 | 231 | N.தேவராஜன் | 1218 | 31 | 12 |
| மாலை 7 மணி | 2 | 241 | L.டில்லிபாபு | 1170 | 31 | 12 |
| மாலை 8 மணி | 3 | 242 | S.சேகர் | 1377 | 31 | 14 |
| ஞாயிற்று கிழமை 15.10.23 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 246 | N.K.ராமதாஸ் | 1091 | 31 | 11 |
| காலை 11 மணி | 2 | 247 | G.சதீஷ்குமார் | 935 | 31 | 9 |
| காலை 12 மணி | 3 | 248 | N.ஜெயச்சந்திரன் | 1275 | 31 | 13 |
| மாலை 6 மணி | 1 | 250 | S.சுப்பிரமணியன் | 914 | 31 | 9 |
| மாலை 7 மணி | 2 | 253 | G.குமரன் | 1127 | 31 | 11 |
| மாலை 8 மணி | 3 | 254 | M.அன்பழகன் | 797 | 31 | 8 |
| மொத்த பூத் | 12 | | | 12609 | 372 | 126 |

### வார்டு எண் : 23

| நாள்/நேரம் | வ. எண் | பூத் எண் | BLA2 பெயர் | மொத்த வாக்குகள் | தேர்தல் பணிக்குழு | 100 பேருக்கு ஒருவர் |
|---|---|---|---|---|---|---|
| சனிக்கிழமை 21.10.2023 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 176 | I.ஜேக்கப்பிரான்சிஸ் | 1310 | 31 | 13 |
| காலை 11 மணி | 2 | 177 | K.ரமேஷ் | 1406 | 31 | 14 |
| மாலை 6 மணி | 1 | 182 | R.சண்முகம் | 790 | 31 | 8 |
| மாலை 7 மணி | 2 | 183 | V.சங்கர் | 899 | 31 | 9 |
| ஞாயிற்று கிழமை 22.10.23 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 184 | M.ஜானகிராமன் | 1362 | 31 | 14 |
| காலை 11 மணி | 2 | 185 | K.பூபதி | 1277 | 31 | 13 |
| மாலை 6 மணி | 1 | 186 | P.இளங்கோவன் | 1248 | 31 | 12 |
| மாலை 7 மணி | 2 | 187 | T.சிகாமணி | 1223 | 31 | 12 |
| மொத்த பூத் | 8 | | | 9515 | 248 | 95 |

### வார்டு எண் : 35

| நாள்/நேரம் | வ. எண் | பூத் எண் | BLA2 பெயர் | மொத்த வாக்குகள் | தேர்தல் பணிக்குழு | 100 பேருக்கு ஒருவர் |
|---|---|---|---|---|---|---|
| சனிக்கிழமை 28.10.2023 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 209 | S.பாபுநந்திவர்மன் | 752 | 31 | 8 |
| காலை 11 மணி | 2 | 210 | M.நடேசன் | 665 | 31 | 7 |
| காலை 12 மணி | 3 | 211 | M.தர்மலிங்கம் | 876 | 31 | 9 |
| மாலை 6 மணி | 1 | 212 | D.மோகன் | 856 | 31 | 9 |
| மாலை 7 மணி | 2 | 213 | D.வெங்கடேசன் | 800 | 31 | 8 |
| ஞாயிற்று கிழமை 29.10.23 | | | | | | |
| காலை 10மணி | 1 | 220 | S.கிருஷ்ணமூர்த்தி | 965 | 31 | 10 |
| காலை 11 மணி | 2 | 221 | B.சந்திரமௌலி | 1055 | 31 | 11 |
| மாலை 6 மணி | 1 | 216 | B.வீரப்பன் | 705 | 31 | 7 |
| மாலை 7 மணி | 2 | 217 | E.சுரேஷ் | 809 | 31 | 8 |
| மொத்த பூத் | 9 | | | 7483 | 248 | 77 |

### வார்டு எண் : 37

| நாள்/நேரம் | வ. எண் | பூத் எண் | BLA2 பெயர் | மொத்த வாக்குகள் | தேர்தல் பணிக்குழு | 100 பேருக்கு ஒருவர் |
|---|---|---|---|---|---|---|
| சனிக்கிழமை 18.11.2023 | | | | | | |
| காலை10 மணி | 1 | 222 | P.ரவிச்சந்திரன் | 887 | 31 | 9 |
| காலை 11 மணி | 2 | 223 | S.செந்தில்குமார் | 958 | 31 | 10 |
| காலை 12 மணி | 3 | 224 | E.மகாலட்சுமி | 1114 | 31 | 11 |
| மாலை 6 மணி | 1 | 225 | V.ராஜேந்திரன் | 1238 | 31 | 12 |
| மாலை 7 மணி | 2 | 228 | K.ராஜசேகர் | 1282 | 31 | 13 |
| மாலை 8 மணி | 3 | 230 | K.கண்ணன் | 615 | 31 | 6 |
| ஞாயிற்று கிழமை 19.11.23 | | | | | | |
| காலை 10 மணி | 1 | 232 | B.சசிக்குமார் | 1220 | 31 | 12 |
| காலை 11 மணி | 2 | 233 | V.ராஜாமணி | 1174 | 31 | 12 |
| காலை 12 மணி | 3 | 234 | A.சீனிவாசன் | 1049 | 31 | 10 |
| மாலை 6 மணி | 1 | 235 | G.விக்னேஷ்வரன் | 824 | 31 | 8 |
| மாலை 7 மணி | 2 | 236 | R.சேகர் | 856 | 31 | 9 |
| மாலை 8 மணி | 3 | 237 | V.பழனி | 810 | 31 | 8 |
| மொத்த பூத் | 12 | | | 12027 | 372 | 120 |

மாண்புமிகு. **தா.மோ.அன்பரசன்** அவர்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

*மாவட்ட கழகத்தின் பொறுப்பாளர்கள்*

திரு.**P.K.A.சத்தியபிரபு** — தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர்

திரு.**துரை.இளங்கோவன்** — பம்மல் தெற்கு பகுதி துணை செயலாளர்

திரு.**V.தாமோதரன்** — மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி து.அமைப்பாளர்

*பகுதி கழகத்தின் பொறுப்பாளர்கள்*

**K.ரமேஷ்** — மாவட்ட பிரதிநிதி

**A.வீரபத்திரன்** — பகுதி கழக அவைத்தலைவர்

**K.பூபதி** — பகுதி கழக து.செயலாளர்

**H.பாஸ்கரன்** — பகுதி கழக து.செயலாளர்

**D.கார்த்திக்** — பகுதி கழக பொருளாளர்

**C.R.மதுரைவீரன்** — மாநகர பிரதிநிதி

**ம.பற்குணன்** — மாநகர பிரதிநிதி

**ஓ.தண்டபாணி** — மாநகர பிரதிநிதி

**G.ஜெகநாதன்** — மாநகர பிரதிநிதி

**பி.பாலச்சந்தர்** — மாநகர பிரதிநிதி

அன்புடன் **ஏ.கே.கருணாகரன்**

செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர்

## ஒரு தத்துவத் தலைவராக விளங்கியவர் கலைஞர்!

# ஊழல் - மதவாத பா.ஜ.க. ஆட்சியைத் தூக்கி எறிய சபதம் ஏற்போம்!

## புதுச்சேரியில் தமிழினத் தலைவர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்து ஆ.ராசா எம்.பி. பேச்சு!



புதுச்சேரி, செப். 30-

**“ஊழல் மதவாத பா.ஜ.க. ஆட்சியை தூக்கி எறிய சபதம் ஏற்போம்” என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., புதுச்சேரியில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் சிலையைத் திறந்து வைத்தபோது கூறினார்.**

புதுச்சேரி அரியாங்குப்பத்தில் 5.9.2023 அன்று நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. அவர்கள் பேசியதாவது:-

புதுவை மாநிலத்தில் முதன்முதலாக அமைக்கப்படும் முத்தமிழறிஞர் கலைஞரின் சிலையை திறந்து வைக்கும் வாய்ப்பினை வழங்கிய மாநில தி.மு.க. அமைப்பாளர் அருமை சகோதரர் சிவா அவர்களுக்கும் அவரோடு துணை நின்று பணியாற்றுகின்ற அருமை சகோதரர் சிவக்குமார் மற்றும் சக்திவேல் உள்ளிட்ட அனைத்து நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியை வணக்கத்தை நான் மீண்டும் புலப்படுத்திக் கொள்கிறேன்.

நான் சிறப்பாக புலப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன் என்று சொல்வதற்கு காரணம், நான் என்னுடைய எட்டாம் வகுப்பு படிக்கும்போது மேடை ஏறி பரிசு பெற்றவன். அதற்குப் பிறகு கல்லூரியில் தமிழ்ப் பேரவைச் செயலாளராக பணியாற்றி நான் பரிசு பெற்றது மட்டுமல்ல அன்றைக்கு தமிழகத்தில் இருக்கும் பல்வேறு தமிழ் அறிஞர்களை, திராவிட இயக்க சித்தாந்த கொள்கையாளர்களை கல்லூரியில் அழைத்து பேசவைத்து மகிழ்ந்தவன். அவர்களோடு மேடை ஏறி பல நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டவன்.

### 35 வயதில் ஒன்றிய இணையமைச்சரானேன்!

அதற்குப் பிறகு 32 வயதில் நாடாளுமன்றத்தில் ஒரு இளைஞனாக சென்று அங்கே உரையாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றவன். 34, 35 வயதில் இந்தியாவின் இணை அமைச்சராக பொறுப்பேற்று அப்போதும் நாடாளுமன்றத்தில் பதில் சொல்லும் அந்த வலிமையைப் பெற்று 20க்கும் மேற்பட்ட பல்வேறு நாடுகளுக்குச் சென்று அந்நாட்டு அமைச்சர்களோடும், பிரதமர்களோடும் பேசுகின்ற வாய்ப்பை பெற்றவன்.

அதேப்போல இன்னும் ஒரு படி மேலே சென்று சொன்னால் இந்தியாவின் வனத்துறை அமைச்சராக நான் இருந்தபோது 140 நாடுகள் கலந்து கொண்ட உலக சுற்றுச் சூழல் மாநாட்டில் ஒரு நாள் நடந்த ஆறு அமர்வில் குலுக்கல் முறையில் எந்த நாடு தலைமை தாங்குவது என்று பார்த்தபோது, அதில் ஒரு அமர்வில் இந்தியாவின் சார்பில் 38 வயதில் தலைவராக இருந்து அந்த அமர்வை நடத்தியவன்.

தலைவர் கலைஞர் அவர்களுக்கு முன்னால் மாநாடுகளில் உரையாற்றி இருக்கிறேன். பட்டிமன்றங்களில் பேசி இருக்கிறேன். கருத்தரங்குகளில்பேசியிருக்கிறேன். எனவே தமிழ்நாட்டில், இந்தியாவில், உலகளவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று பேசியிருக்கிறேன்.

### கலைஞர் சிலையை திறப்பது பெரும் பேறு!

ஆனால் அப்போதெல்லாம் எனக்கு வராத பெருமிதம், பெருமை இன்றைக்கு இந்த புதுவை நகரில் நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்து ஆற்றுகின்ற அந்த வாய்ப்பினை என் வாழ்நாளில் பெற்ற பெரும்பேறாக நான் கருதுகிறேன். ஏனென்றால் அவையெல்லாம் எனக்காக, இயக்கத்திற்காக, கலைஞருக்காக நான் பேசியது. ஆனால் கலைஞர் ஒரு தத்துவமாக இருக்கிறார் என்பதை உலகத்திற்கு சொல்லும் ஒரு வாய்ப்பை நம்முடைய சிவா அவர்களும், சிவக்குமார் அவர்களும் சக்திவேல் அவர்களும், மாநிலக் கழகத்தின் நிர்வாகிகளும், இங்கிருக்கின்ற நீங்களும் எனக்கு வழங்கி இருக்கிறீர்கள். இது என் வாழ்நாளில் கிடைத்த மிகப்பெரும் பெருமை என்று கருதி உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தத்துவத் தலைவர் கலைஞர்!

சிலையை திறந்து வைத்திருக்கிறோம். கலைஞர் என்கின்ற தனி மனிதனுக்காக அல்ல. 50 ஆண்டு காலம் ஒரு இயக்கத்தின் தலைவராக இருந்தார் என்பதற்காக கூட அல்ல. 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்திருக்கிறார் என்பதற்காக கூட அல்ல. ஆனால் அவருடைய ஆளுமை, நான் அருகில் இருந்து பார்த்தவன் மட்டுமல்ல, அவருடைய இலக்கியங்களை படித்தது மட்டுமல்ல, அவருடைய ஆட்சித்திறனை கண்டு வியந்தவன் என்பதற்காக மட்டுமல்ல, அவருடைய அரசியல் உயரத்தை பக்கத்தில் இருந்து பார்த்தவன் என்பதற்காக மட்டுமல்ல, அதை எல்லாம் தாண்டி திராவிட தத்துவத்திற்கு ஒரு மிகப் பெரிய வழிகாட்டியாக, இந்த திராவிட தத்துவம் இன்னும் 100 ஆண்டுகளுக்கு செல்வதற்கு ஒரு அடித்தளத்தை தந்த ஒரு தத்துவ தலைவனாக இன்றைக்கு அவர் உயர்ந்திருக்கிறார். அதனால் அவருக்கு நூற்றாண்டு விழாவை இன்று கொண்டாடுகிறோம். அதனால் அவருக்கு சிலை வைத்திருக்கிறோம்.

எனவே இந்த சிலை ஒரு தனி மனிதனுக்கான சிலையல்ல, ஒரு சித்தாந்தத்தை வலியுறுத்துகின்ற தத்துவத்திற்கான சிலை. தனிமனிதர்கள் இறந்து போவார்கள். இந்த மண்ணில் எத்தனையோ பேர் வந்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பெருமை இருக்கும். அந்த மனிதன் மரணிக்கின்றபோது அந்த பெருமை அவர்களோடு முடிந்துவிடும். ஆனால் அந்த மனிதன் மரணத்திற்கு பிறகும் அந்த சித்தாந்தம், அவருடைய கொள்கை, கோட்பாடு கோடிக்கணக்கான மக்களால் கொண்டாடப்படுகிறது என்பதுதான் அந்த தத்துவத்திற்கான சிறந்த தனி அடையாளம். அவ்வாறு திராவிட தத்துவத்தின் அடையாளமாக இன்னும் 500 ஆண்டுகளுக்கு தேவைப்படும் ஒரு தலைவனின் சிலையை இன்றைக்கு நாம் திறந்திருக்கிறோம்.

பல பேர் கருதி கொண்டிருப்பீர்கள், சிலையாக இருக்கும் கலைஞரை பார்த்துக்கொண்டிருந்தேன். மீண்டும் மீண்டும் இந்த சிலையை உற்றுப் பார்த்தேன். இங்கே ஒரு அரை மணி நேரம் மற்றவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். மீண்டும் அந்த சிலையை நான் பார்த்தேன். எதிர்காலத்தில் இருக்கும் சமூகம் இப்படி ஒரு மனிதன் இந்த மண்ணில் எப்படி வாழ்ந்தார் என்று நம்பாது. நம்ப முடியாது. என்ன காரணம்?

இந்திய சமூக அமைப்பு சாதியால் பிளவுபட்டிருக்கிறது. ஒரு மனிதனை அறிவுப்பூர்வமாக பார்ப்பதைவிட அவன் என்ன சாதி என்று பார்க்கின்ற அந்த புத்தி இன்னமும் இந்தியாவில் இருக்கிறது. சாதிப் பெரும்பான்மை இருந்தால்தான் அரசியலில் மேலே வர முடியும். பண பலம் இருந்தால்தான் மேலே வர முடியும். சாதி பலமும், பண பலமும் இல்லாமல் சுதந்திரப் போராட்டத்தில்கூட பெரிய தலைவர்கள் வந்ததில்லை. காந்தி இவ்வளவு பெரிய தலைவராக வந்ததற்கு காரணம் காந்தி மட்டுமல்ல, அவரின் அகிம்சை சித்தாந்தம் மட்டுமல்ல. காந்திக்கு பின்னால் செலவு செய்வதற்கு, பிர்லாக்கள் இருந்தார்கள், டாட்டாக்கள் இருந்தார்கள். பிர்லா மாளிகையில்தான் அவர் தங்கியிருந்தார். நான் குறை சொல்லவில்லை. கட்டி இருந்தது கோவணம், ஆனால் தங்கி இருந்தது பிர்லா மாளிகை. சுதந்திர போராட்டத்திற்கு பொருளுதவி உட்பட அவருக்கு உதவிகளை தந்தது பிர்லா. எனவே பண பலமும், ஜாதி பலமும் இந்தியாவில் ஒரு அரசியல் தலைவருக்கு தேவையாக இருந்தது. இன்னமும் அதை முற்றாக மறுதலிக்க இயலாது. அப்படி இருந்தால்தான் ஒரு இடத்தை எட்ட முடியும் என்கின்ற அந்த எதார்த்தம் இன்றைக்கும் இல்லை என்று சொல்ல முடியாது. இன்றைக்கும் இருக்கிறது.

### உலக நாடுகளில் மிளிர்கின்ற தலைவர்!

ஆனால் கலைஞருக்கு சாதி பலமில்லை. அவர் சார்ந்த சாதி என்று சொல்லப்படும் சமூகம் ஊருக்கு இரண்டு பேர் கூட இருக்க மாட்டார்கள். அந்த சொற்ப எண்ணிக்கையில் உள்ள சாதியில் பிறந்த தலைவர் அவர். சரி, தகவல் தொழில்நுட்பம் நிறைந்த, போக்குவரத்து நிறைந்த சென்னையில் பிறந்தாரா? மதுரையில் பிறந்தாரா? புதுவையில் பிறந்தாரா? தபால் ஆபீஸ் கூட இருந்திருக்க வாய்ப்பில்லாத திருக்குவளை என்ற குக்கிராமத்தில் பிறந்த மனிதர். பணபலம் இருந்ததா? இல்லை. எனவே சாதி பலம் இல்லாமல், பண பலம் இல்லாமல் தந்தை பெரியாரின் கொள்கையை கொண்டாடிய ஒரு இளைஞர்; நான் மீண்டும் சொல்கிறேன், திருக்குவளையில் பிறந்து தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, இன்னும் ஒரு படி மேலே சென்று சொன்னால் உலக அளவில் மிளிர்கின்ற ஒரு தலைவராக நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் இருந்தார். அதனால்தான் அவருக்கு சிலை!.

ஆட்சி பொறுப்பில் இருக்கிறபோது, அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர். வந்திருக்கிற தம்பிமார்களுக்கெல்லாம் தெரியாது, அவர் என்னென்ன செய்திருக்கிறார் என்று. இன்றைக்கு பல்வேறு அடையாளமாக இருக்கின்ற திட்டங்களைஅவருக்கு பெருமையாக சொல்லலாம். இதை பார் கலைஞர் கொடுத்தார், அதை பார் கலைஞர் கொடுத்தார் என்று:

### கலைஞர் என்ற மாபெரும் அரசியல் தலைவர்!

தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு முதன் முதலாக இலவச மின்சாரமா கலைஞர் கொடுத்தார் என்று சொல்லலாம். தமிழ்நாட்டில் 1989-ல் அவர் அறிமுகப்படுத்திய இலவச மின்சாரம், படிப்படியாக இன்று பல்வேறு மாநிலங்களும் அதனை நடைமுறைப்படுத்தியுள்ளன. உங்கள் கண்ணுக்கு தெரியாத புரட்சி - இந்த தலைமுறைக்கு தெரியாத புரட்சி எல்லாம் நடந்திருப்பது கலைஞர் என்ற மாபெரும் அரசியல் தலைவரால்! .

பழைய சினிமாவை பாருங்கள். மனிதனை மனிதனே வைத்து இழுப்பான் கை ரிக்ஷhவில். மேலே உட்கார்ந்திருப்பவன் பெரிய ஜாதி என்று பெருமை கொள்ளும் ஒருவர். பண பலம் உள்ளவர். தொந்தி, தொப்பை உள்ளவர். 110 கிலோ எடை இருப்பார். அவர் ஏறி உட்கார்ந்து கொண்டு அன்றைக்கு ஒரு ரூபாயையோ, 50 பைசாவையோ, 25 பைசாவையோ தூக்கி எறிந்துவிட்டு வேகமாக போ என்று சொல்லும்போது, இழுப்பவர் ஒரு தாழ்த்தப்பட்டவராகவோ, பிற்படுத்தப் பட்டவராகவோ, சாப்பாட்டிற்கு வழி இல்லாமல் மெலிந்த தேகத்தோடு, இவரை இழுத்தால்தான் அடுத்த நேரத்திற்கு பெண்டு பிள்ளைகள் சாப்பிட முடியும் என்ற கவலையோடு, ஏழ்மையால் அந்த பருத்த தேகத்தை இழுத்துச் செல்ல வேண்டும். இந்தக் கொடுமை இந்தியாவில் எல்லா மாநிலத்திலும் இருந்தது. இன்னமும் மேற்கு வங்காளத்தில் இருக்கிறது. கலைஞர் முதலமைச்சர், அவரிடம் யாரும் சென்று மனு போடவில்லை. கைரிக்ஷh சங்கம் என்று யாரும் வைத்திருந்ததாகக்கூட தெரியவில்லை. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்ற ஒரு பொதுவுடமைக் கவிஞர் இருந்தார். அவர் எழுதினார்,

**“நாடி தளந்தவங்க ஆடி நடப்பவங்க**
**நல்லவங்க கெட்டவங்க நம்பமுடியாதவங்க**
**பாடி கனத்தவங்க தாடி வளர்த்தவங்க**
**பலபல வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டவங்க**
**படிப்பவங்க வீடு புடிப்பவங்க**
**பொடிப்பசங்க பெரும் போக்கிரிங்க**
**இன்னும் பொம்பளைங்க ஆம்பளைங்க**
**அத்தனை பேரையும் வச்சு மாடா இழுக்கிறோம் வேகமா**
**நம்ம வாழ்க்கை கெடக்குது ரோட்டோரமா” என்று எழுதினார்.**

அந்தக் கவிதையை படித்துவிட்டு இனிமேல் தமிழ்நாட்டில் மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கை ரிக்சா இருக்கக் கூடாது என்பதற்காக அவர்கள் கையில் சைக்கிள் ரிக்சாவை கொடுத்து அவர்களை மனிதனாக்கிய மகத்தான தலைவன் அந்த தலைவர். இன்றைக்கு கை ரிக்சா இல்லை என்பதால் அவர் செய்த சாதனை இந்த தலைமுறைக்கு தெரியவில்லை; ஆனால் வரலாற்றை மாற்றவும் முடியாது மறைக்கவும் முடியாது.

### பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்!

**டெல்லிக்கு என்னோடு நாளைக்கு வாருங்கள். விமானத்தில் இருந்து இறங்கினால் ஏறத்தாழ 100 ரவுண்டானாக்கள் இருக்கிறது. 10 ரவுண்டானாவில் போக்குவரத்து சிக்னல் இருக்கும். நான் என் காரில் 20 ரூபாய் நோட்டுகள், 50 ரூபாய் நோட்டுகளை எப்போதும் வைத்திருப்பேன். ஏனென்றால் சின்ன சின்ன பையன் டான்ஸ் ஆடுவான், மேளம் அடிப்பான். அவர்கள் அம்மா பக்கத்து மரத்தடியில் உட்கார்ந்திருப்பார். அப்படியே குட்டிக்கரணம் போடுவான். பிச்சை எடுப்பான். படிக்க வேண்டிய வயது. இவனை பிச்சை எடுக்க வைத்திருக்கும் அவனை அவன் அம்மாவை பார்த்தால் இன்னமும் பரிதாபமாக இருக்கும். குளித்து இரண்டு நாட்கள் இருக்கும். நாடாளுமன்றம் செல்லும்போது ரவுண்டானாக்களில் இந்த காட்சிகளை தினந்தோறும் பார்ப்போம். அந்த பிச்சைக்கார சிறுவர்கள் இன்னமும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் 1971இலேயே பிச்சைக்காரர்கள் இல்லாத ஒரு மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று ‘பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டத்தை’ கொண்டு வந்தவர் அவர்தான். ஆட்சி நிர்வாகத்தில் ஆற்றியிருக்கும் பணி ஒன்றல்ல, இரண்டல்ல சொல்லிக் கொண்டே போகலாம்.**

இங்கு வந்திருக்கிறீர்களே பெண்கள். இன்றைக்கு சனாதனத்தை பற்றி பேசுகிறார்கள். நான் அதற்கு பின்பு வருகிறேன். அந்த சனாதனம்தான் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை இல்லை என்று சொன்னது, உரிமையில்லை என்று சொன்னது, இன்னும் சொல்லப்போனால், பெண்களுக்கு சொத்தில் சமபங்கு வேண்டும் என்று 1929இல் தந்தை பெரியார் தீர்மானம் போட்டார். 23 ஆண்டு காலம் கழித்து 1952இல் இந்தியாவின் அரசியல் சட்டத்தை உருவாக்கிய டாக்டர் அம்பேத்கர் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தார். பெண்களுக்கு சொத்தில் சமபங்கு வேண்டும், மனமுறிவு (டைவர்ஸ்) வேண்டும், குழந்தை இல்லாத பெண்கள் குழந்தைகளை தத்தெடுக்கும் உரிமை வேண்டும், இத்தனையும் இந்து சமுதாயத்தில் இருக்கும் பெண்களுக்கு வேண்டும் என்று இந்து சட்ட மசோதவை (Hindu Code Bill) கொண்டு வந்தவர் யார்?

### பகுத்தறிவுவாதி நேரு!

இந்தியாவிற்கே அரசியல் சட்டத்தை கொடுத்த அரசியல் சட்டமேதை அம்பேத்கர் கொண்டு வந்தார். அதை ஒப்புக்கொண்டார்களா பிராமணர்கள், உயர்ந்த ஜாதிகாரர்கள். குடியரசுத் தலைவராக இருந்த இராஜேந்திர பிரசாத் ஒப்புக்கொண்டாரா? அமைச்சரவையிலே இருந்த இந்து மகா சபை அவைத்தலைவர் சியாமா பிரசாத் முகர்ஜி ஒப்புக்கொண்டாரா? அரசியல் சட்ட நிர்ணய சபையில் இருந்த பட்டாபி சீத்தாராமையா ஒப்புக்கொண்டாரா? காங்கிரஸ் கட்சியில் இருக்கும் அமைச்சர்கள் ஒப்புக்கொண்டார்களா? ஆனால் நேரு ஒப்புக் கொண்டார். ஏனென்றால் அவர் ஒரு பகுத்தறிவாதி. பிரதமர் ஒப்புக்கொண்டதற்கு பிறகு, நாடாளுமன்றத்தில் அந்த மசோதா நிறைவேறவில்லை. தாக்கல் செய்யப்பட்ட மசோதா நீண்ட விவாதத்திற்குப்பின் கிடப்பில் போடப்பட்டது; அம்பேத்கருக்கு சுயமரியாதை சுட்டது.

### பெண்களுக்கு சொத்தில் சம உரிமை!

இந்த நாட்டுக்கு அரசியல் சட்டத்தை எழுதியவனே நான். சட்ட அமைச்சராக இருக்கிறேன். ஒரு சட்ட அமைச்சர் கொண்டு வந்த ஒரு சட்ட மசோதாவை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை; இந்து மதத்தின் பெயரால் பிராமணர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை உயர்ந்த ஜாதி இந்துக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் ஏன் இருக்க வேண்டும் என்று துhக்கி எறிந்தார் சட்ட அமைச்சர் பதவியை!. வெளியே வந்த அம்பேத்கரை பத்திரிகையாளர் கேட்டார்கள், நீங்கள்தானே சட்ட அமைச்சர், ஏன் அவசரப்பட்டு இராஜினாமா செய்தீர்கள் ? என்று . “இல்லை நான் தோற்கடிக்கப்பட்டுள்ளேன். இதற்கு பிறகும் அமைச்சராக நீடிக்க விரும்பவில்லை. ஒரு வேளை நான் உயிரோடு இல்லாமல் போகலாம். ஆனால் ஒரு நாள் வரும்; எதிர்கால இந்தியாவில் எங்கோ இருந்து ஒரு தலைவன் வருவான், இந்த சட்டத்தை நிறைவேற்றி தருவான் என்று நம்புகிறேன்” என்று அம்பேத்கர் சொன்னார். 1952இல் சொன்னவர், 1956இல் இறந்துவிட்டார். பாவம் கண் குளிர பார்க்கவில்லை. ஆனால் 1989இல் கலைஞர் என்ற ஒரு மகத்தான மனிதர், சட்டமன்றத்திற்கு முதலமைச்சராக வந்து பெண்களுக்கு சொத்தில் சமபங்கு கொடுத்தார். பெரியாரும் அம்பேத்கரும் காணவிரும்பிய புரட்சியை - பெண்களுக்கு சொத்திலே சம உரிமையை சட்டமாக்கினார்.

நான் இன்னும் பெருமையோடு சொல்கிறேன், இந்த ‘திராவிட மாடல்‘ என்ன என்று சிலருக்கு நையாண்டி. நான்தான் ஒரு கூட்டத்தில் சொன்னேன், திராவிட மாடல் தெரியவில்லை என்றால் ‘ஆ.ராசா’வே திராவிட மாடலின் சிறுவடிவம்தான் என்றேன். நான் ஏதோ என்னை பெருமை சொல்வதற்காக அல்ல. அழுத்தப்பட்ட ஆதிதிராவிட சமுதாயத்தில் ஒரு குக்கிராமத்தில் பிறந்தவன். என்னுடைய தாத்தா 1929, 1930இல் தீண்டாமைக்கு பயந்து, பஞ்சம் பிழைப்பதற்காக இலங்கைக்கு போனார். தீண்டாமைக்காகவும், சாதி, பஞ்சம் பிழைப்பதற்கும், வறுமைக்கும் இலங்கைக்கு ஓடி அங்கே ஒரு வெள்ளைக்கார துரையிடம் வேலை பார்த்தார். எங்கள் அப்பாவை அங்கு படிக்க வைத்தார். அங்கு சம்பாதித்தார். இங்கு வந்து நிலம் வாங்கினார். 15 ஏக்கர் நிலம் வாங்கினார். 3 கிணறு. எங்கள் அப்பாவே ஆங்கிலம் பேசினார், எழுதினார். இந்தியாவிற்கு வந்தார். நான் வீட்டில் எட்டாவது பையன். ஒரு அண்ணன் ஐ.எப்.எஸ், ஒரு அண்ணன் இன்ஜினியர், ஒரு அண்ணன் பட்டதாரி ஆசிரியர். நான்கு அக்கா, ஒரு அக்கா முதுநிலை பட்டதாரி தலைமையாசிரியர், மாமாக்களில் மாவட்ட வருவாய் அலுவலர், நகராட்சி ஆணையர், எல்லோரும் அரசு பதவியில் இருந்தார்கள்.

இதுகூட அல்ல பெருமை, தாத்தா தீண்டாமைக்காக ஓடினார். பஞ்சம்பிழைக்க ஓடினார். அப்பா 15 ஏக்கர் நிலம் வாங்கினார். அவர் படிக்க வைத்த எட்டாவது பிள்ளை திராவிடத்தின் விளைச்சலால் இந்தியாவின் அமைச்சர். ஆனால் அதுமட்டுமல்ல, என்னுடைய பிள்ளை சாதி என்றால் என்ன என்று தெரியாமல் லண்டன் நகரத்தில் உலகத்தின் பிரபலமான ஒரு பல்கலைக்கழகத்தில் சட்டம் மேற்படிப்பு படிக்கிறார். இதை செய்தது திராவிட இயக்கம். இதை செய்தது பெரியார், இதை செய்தது அண்ணா, இதை செய்தது கலைஞர். எனவே ஆட்சிப் பொறுப்பில் ஆற்றி இருக்கும் பணி, திராவிட மாடல், அதற்கு பிதாமகனாக இருந்தவர் கலைஞர்.

### லண்டனில் கல்லூரி முதல்வரின் வியப்பு!

நான் என் பிள்ளையை சட்ட மேற்படிப்பு பயில கல்லூரியில் சேர்ப்பதற்காக லண்டன் சென்றிருந்தேன். குயின் மேரி பல்கலைக்கழகத்தில் சேர்த்து விட்டேன். சேர்த்ததற்கு பிறகு என்னுடைய விவர குறிப்பை கல்லூரி முதல்வர் பார்க்கிறார். தந்தை யார்? வசதி இருக்கிறதா? கட்டணம் செலுத்த முடியுமா ? என்றெல்லாம் பார்த்துதான் அந்த கல்லூரியில் இடம் கொடுப்பார்கள். அதன் பிறகு பிள்ளை ஆங்கிலம் சரளமாக பேசுமா ? தேர்ச்சி ஆகிவிடுமா? என்று பார்ப்பார்கள். நான் நாடாளுமன்ற உறுப்பினர் என்று தெரியும். சேர்க்கை விண்ணப்பத்திலேயே உள்ளது. நான் ஏற்கனவே அமைச்சராக இருந்தது, 2ஜி வழக்கில் கைது செய்யப்பட்டது; விடுதலை அடைந்தது எல்லாமே தெரிகிறது பல்கலைக்கழக முதல்வருக்கு. அவர் என்னுடைய மகளை சேர்த்து விட்டு, நீ வகுப்புக்கு செல் என்று சொல்லிவிட்டார். நான் எம்.பி. என்கிற காரணத்தினால் என்னை அவரின் தனி அறைக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்து எனக்கு தேனீர் கொடுத்தார். அப்போது ஒன்று கேட்டார்கள். இந்தியாவின் எந்த பகுதியில் நீங்கள் இருக்கிறீர்கள்? நான் 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கு டூர் வந்திருந்தேன் என்றார். நான் ‘தமிழ்நாடு’ என்று சொன்னேன். அந்த அம்மா சொன்னார்கள், “I Know Tamil is declared one of the world classical language; I came to know that efforts was taken by the then Chief Minister Karunanidhi”.

**உலகத்தில் எத்தனை செம்மொழி இருக்கிறது. கிரேக்கம் செம்மொழி, லத்தீன் செம்மொழி, சீனம் செம்மொழி, காரல் மார்க்சின் தாய்மொழியான ஹீப்ரூ செம்மொழி. எல்லாமே இன்றைக்கு உயிரோடு இல்லை. சமஸ்கிருதம் செம்மொழி, செத்துப்போய் விட்டது. ஆனால் இன்றைக்கும் உலகத்தில் இருக்கும் ஆறு செம்மொழிகளில் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மொழி, தமிழ் மொழி. அந்த மொழிக்கு செம்மொழி அந்தஸ்து இல்லை. உலகத்தில் சமத்துவம் பேசிய மொழி. ‘பிறப்பொக்கும்’ என்று பிரகடனப்படுத்திய மொழி; ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று சர்வதேச சகோதரத்துவத்தை சொன்ன மொழி. அந்த மொழிக்கு செம்மொழி பட்டயத்தை பெற்றவர் கலைஞர்.**

தொல்காப்பியம் என்பது இலக்கண நுhல். மாணவர்களுக்கு வாயில் நுழையாது அந்த இலக்கணம். கலைஞர் ‘தொல்காப்பிய பூங்கா’ படைத்தார். இந்த உலகத்தை படைத்தது யார் என்றால் பிரம்மா என்று சொல்வார்கள். மதம் கொடுத்த மவுடிக்கதை. இந்த உலகத்தை படைத்தது எது என்பதற்கு தொல்காப்பியத்தில் அறிவியல் இருக்கிறது. இந்த பிரபஞ்சம் எப்படி இயங்குகிறது? 3000 ஆண்டுகளுக்கு முன்பு என் பாட்டன் தொல்காப்பியன் எழுதி வைத்திருக்கிறான். நிலம், தீ, நீர், வளி, விசும்போடு கலந்த “மயக்கம்” இவ்வுலகம் (metapolical change) என்றான். இந்த உலகம் எதனால் ஆனது; எங்கிருந்து ஒரு சொட்டு விந்தனு வந்தது? அது எங்கே சென்று கருமுட்டையோடு சேர்ந்தது? எப்படி உயிர் வந்தது? எப்படி உயிரிலிருந்து உடல் வளர்ந்தது. வாழ்வை முடித்து உடல் எப்படி மண்ணுக்குச் சென்றது? பிறகு ஏன் உலகத்தின் எடை மாறவில்லை.

### தமிழின் பெருமை!

புதுச்சேரியில் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கட்டிடங்கள் இப்போது இல்லை அல்லவா? அதைவிட பெரிய கட்டிடங்கள் புதுச்சேரியில் வந்துவிட்டன. புதுச்சேரி எடை கூடிவிட்டதா? இந்தியாவில் இவ்வளவு கட்டிடங்கள் வந்துவிட்டது அல்லவா, இந்த கட்டிடங்களால் உலகம் கீழே சென்று விட்டதா? ஏன் ? இந்த தத்துவம் பிரபஞ்ச தத்துவம். இந்த உலகத்தில் எடை எப்போதும் மாறாது. ஏனென்றால் எனக்கு முன்னால் இருக்கும் இந்த ஒளிவாங்கி (MIC) எங்காவது இரும்பு வெட்டப்பட்டிருந்ததால், அந்த இரும்புதான் இங்கு வந்திருக்கிறது. இந்த நாற்காலிக்காக, ஒரு மரத்தை வெட்டியிருந்தால், அந்த மரம்தான் இங்கு வந்திருக்கிறது. எனவே மரம் வடிவம் மாறியிருக்கிறதே தவிர, இந்த உலகத்தில் எதுவுமே புதிதாக வரவில்லை. அப்போது நிலம், தீ, நீர், வளி, விசும்பு இந்த பஞ்சபூதங்களால் ஆன இந்த உலகம், இதை கடவுள் சிருஷ்டிக்கவில்லை. இது சுற்றி சுற்றிதான் வரவேண்டும். இதை 3000 ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன ஒரே மொழி தமிழ்மொழிதான். 200 ஆண்டுகளுக்கு முன்னால் இதை அறிவியல் கண்டுபிடிப்பாக நியூட்டன் சொன்னான் “The weight of the Universe is constant”. இதை கண்டுபிடித்து என்னுடைய பாட்டன் சொல்லி இருக்கிறான் என்று தொல்காப்பிய பூங்காவில் இனிமையான எளிமையான தமிழில் கலைஞர் சொன்னதற்கு பிறகுதான் எங்களுக்கே தெரியும், இவ்வளவு பெரிய பெருமை தமிழுக்கு இருக்கிறது என்று.

### இலவச மின்சாரம் கொண்டு வந்த கலைஞர்!

எனவே ஆட்சி அதிகாரத்தில் இருந்தார். எல்லா திட்டங்களையும் செய்தார். இலவச மின்சாரம் பற்றி சொன்னேன். இங்கேயும் இருக்கிறது இலவச மின்சாரம். ஒரு காலத்தில் நாராயணசாமி நாயுடு விவசாய சங்கத் தலைவராக இருந்தார். 1980களில் எம்.ஜி.ஆர். முதலமைச்சர். நான் எல்லாம் கல்லூரியில் மாணவன். ஆயிரக்கணக்கான மக்களை பச்சைத்துண்டு போட்டு போராட்டத்திற்கு அழைத்துச் சென்றார் நாராயணசாமி நாயுடு. அவர் கொடுத்து கொடுத்து சிவந்த கரம் என்று பாராட்டப்பட்ட எம்.ஜி.ஆரிடம் என்ன கேட்டார் என்றால், “உழுதவன் கணக்கு பார்த்தால், உழக்கு கூட மிஞ்சவில்லை; மாதா மாதம் மின் கட்டணம் கட்ட வேண்டும். கட்டவில்லை என்றால் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. நஞ்சை காய்கிறது. நாங்கள் ஏழைகள் பாத்திரத்தை அடகு வைக்கிறோம், தாலியை அடகு வைக்கிறோம், அப்போதும் முடியவில்லை. எனவே ஒரு ‘யூனிட்’ மின்சாரத்திற்கு ஒரு பைசா குறைத்து தாருங்கள்” என்று பத்தாயிரம் பேரை அழைத்து சென்று மனு கொடுத்தார். எம்.ஜி.ஆர். அரசாங்கம் துப்பாக்கி சூடு நடத்தியது.

அதற்குப் பிறகு, கலைஞர் 1989இல் முதலமைச்சராக வந்தார். அதே சங்கத்தை அழைத்து பேசினார். “என்ன கேட்டீர்கள்? ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஒரு பைசா குறைக்கச் சொல்லி கேட்டீர்கள். நானும் ஒரு விவசாயியின் மகன். திருவாரூரில், திருக்குவளையில் வரப்பில் நடந்திருக்கிறேன். வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சியிருக்கிறேன். இசையும், வேளாண்மையும் எங்கள் குடும்பத்திற்கு இரண்டு கண்கள், எனக்கு அந்த வலி தெரியும். இப்போது நான் அறிவிக்கிறேன், தமிழ்நாட்டில் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஒரு பைசாகூட இனி மேல் செலுத்த தேவையில்லை” என்று உத்தரவு போட்டவர் கலைஞர். அவர் கொண்டு வந்ததைத்தான் பல மாநிலங்கள் பின்பற்றுகின்றன. விவசாயம் நிறைந்த பஞ்சாப் மாநிலம் 5 வருடத்திற்கு பிறகுதான் இலவச மின்சார திட்டத்தை கொண்டு வந்தது.

பெண்ணிற்கு சொத்தில் சம உரிமை என்று 1989இல் கொண்டு வந்தோம். 2009இல்தான் ஒன்றிய பாராளுமன்றம் கொண்டு வருகிறது. எனவே 1989இல் ஒரு மனிதன் சிந்திக்கிறார், அந்த திட்டத்தை அறிவிக்கிறார் என்றால் இந்தியா அரசு அதை எடுத்துக் கொள்வதற்கு 20 ஆண்டுகள் ஆகிறது அல்லது கால் நூற்றாண்டு காலம் ஆகிறது. இந்தியாவின் வளர்ச்சிக்கு முன்னால் ஒரு கால் நூற்றாண்டு காலத்திற்கு முன்பாகவே ஒரு முன் பாய்ச்சலை தமிழ்நாட்டில் செய்த பெருமை இந்த தலைவனுக்குத் தான் உண்டு. எனவே ஆட்சி பொறுப்பில், இலக்கியத்தில் இவைகளையெல்லாம் அவர் தமிழ்நாட்டில் செய்தது.

### தனித் தமிழ்நாடு கேட்ட பெரியார்!

பெரியார் தமிழ்நாட்டில் மண்ணிலே தான் வாழ்ந்தார். தமிழ்நாட்டிலேதான் பேசினார். ரஷ்யா வரைக்கும் சென்று வந்திருக்கிறார். ஆனால் அவருடைய உழைப்பு, அவருடைய விசாலமான பார்வை, பகுத்தறிவுச் சிந்தனை, அவரது பகுத்தறிவு வெள்ளம் ஓடி பறந்த இடம் தமிழ்நாட்டில் மட்டும் தான். ஆந்திரா கூட இல்லை. “நல்லவேளை தெலுங்கன் போய் விட்டான்” என்று ஆந்திரா பிரிந்தபோது சொன்னார். இப்போது அவரை தெலுங்கன் என்கிறார்கள். “நல்ல வேளை தெலுங்கன் சென்று விட்டான், கர்நாடகாக்காரன் சென்று விட்டான், கேரளாக்காரன் (மலையாளி) சென்று விட்டான். இனிமேலாவது தமிழ்நாடு உருப்படும். தனித் தமிழ்நாடு வேண்டும்” என்று கேட்டவர் பெரியார். எனவே தன்னுடைய அயராத உழைப்பை இந்த தமிழ்நாட்டோடு குறுக்கிக் கொண்டார் என்று சொல்ல முடியாது. அது போதும் என்று எண்ணினார். ஆனால் அவருடைய சிந்தனை இன்றைக்கு உலகத்திற்கு தேவைப்படுகிறது.

### ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டிய அண்ணா!

அண்ணா அவருடைய வாழ்நாள் காரணமாக, அவருடைய பணி காரணமாக தமிழ்நாட்டோடு முடிந்துவிட்டது. நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தார். நான் திராவிட மரபினத்தைச் சார்ந்தவன். “நான் திராவிடன் என்று சொல்லிக் கொள்வதால் நான் குஜராத்திக்கோ, வங்காளிக்கோ, எதிரானவன் அல்ல. நான் திராவிடன் என்று சொல்லிக் கொள்வதால் உலகத்திற்கு முன்பு எங்களுக்கு ஒரு வேறுபட்ட அடையாளம், தனித்த பண்பு, தனித்த சிறப்பு இருக்கிறது என்று முழங்கினார். அந்த அண்ணா ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார். நாம் வாழுகின்ற இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார். சுயமரியாதை திருமண சட்டத்தை கொண்டு வந்தார். ஆனால், இயற்கையின் சதியால் அதோடு அவரது வாழ்க்கையும் , அரசியலும், நிர்வாகத்திறனும் முற்று பெற்றுவிட்டது.

ஆனால் ஒரு கிராமத்தில் பிறந்த கலைஞர் மாமனிதர்; பட்டம் கூட பெறாத ஒரு எளிய மனிதர்; தன்னுடைய அறிவால், தன்னுடைய ஆற்றலால், தன்னுடைய உழைப்பால், தன்னுடைய அர்ப்பணிப்பால் தன்னுடைய எழுத்தால், பேச்சால் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆகி, இந்திய அரசியலில் ஆற்றுயிருக்கிற பணி ஒன்றா, இரண்டா? அவர் எத்தனை பிரதமர்களை உருவாக்கினார்? எத்தனை ஜனாதிபதிகளை உருவாக்கினார்?

இதையெல்லாம் தாண்டி சொல்லட்டுமா, ‘அகில இந்திய அரசியலில் கலைஞர்’ என்று

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# திராவிடத் தத்துவத்தின் அடையாளமாக - இன்னும் 500 ஆண்டுகளுக்குத் தேவைப்படும் ஒரு தலைவனின் சிலை!

## ஆ.ராசா எம்.பி. பேச்சு!

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

இரண்டு மணி நேரம் பேசலாம். அகில இந்திய அரசியலில் எப்போதெல்லாம் நெருக்கடி வருகிறதோ அப்போதெல்லாம் கலைஞரின் பங்கு ஒரு கட்சியின் தலைவராக எதிர்கால இந்தியாவின் வடிவமைக்கும் ஒரு விசாலமான பார்வை கொண்ட அரசியல்வாதியாக அவர் ஆற்றியிருக்கும் பணி ஒன்றல்ல, இரண்டல்ல.

**வங்கிகளை தேசியமயமாக்கிய இந்திராகாந்தி அம்மையார்!**

ஒன்று சொல்லட்டுமா, இந்த நாட்டில் இருக்கும் எல்லா வங்கிகளுக்கும் இப்போது நீங்கள் செல்கிறீர்கள். செக் புக் வைத்திருக்கிறீர்கள். என் மகள் வங்கிக்கே செல்லாமல் எல்லாமே ஃபோனிலேயே முடித்து விடுகிறார். நான் 1989இல் வக்கீல். முதன் முதலில் நான் சம்பாதித்து 10,000 ரூபாய் வங்கியில் இருந்தது. அதற்கு கனரா வங்கியில் செக்புக் கொடுத்தான். அந்த செக் புக்கை 100 முறை திருப்பி திருப்பி பார்த்தேன். இதை சொல்வதற்கு காரணம், ஒரு காலத்தில் வங்கிகள் நமக்காகவா இருந்தது. பஸ் முதலாளிகளுக்கு கடன் கொடுத்தார்கள், மூப்பனாருக்கு, வாண்டையாருக்கு, தொழிலதிபர்களுக்கு கடன் கொடுத்தார்கள். டாட்டாவிற்கு, பிர்லாவிற்கு கடன் கொடுத்தார்கள். ஏழை விவசாயிகள் அங்கே சென்று நிற்க முடியுமா? இன்றைக்கு கிரெடிட் கார்டு, நெட் பேங்க் எல்லாம் வைத்திருக்கிறோமே.

அன்றைக்கு இல்லை. பிரதமர் இந்திரா காந்தி என்ன சொன்னார் என்றால், வங்கிகளை தேசியமயமாக்கினால்தான் அது விவசாயிக்கு, தாழ்த்தப்பட்டவருக்கு, பிற்படுத்தப்பட்டவருக்கு சென்று பயனளிக்கும். வங்கிகள் தனியார்மயத்தில் இருக்கிறது. அவைகள் முதலாளிகளோடு கூட்டணி வைத்துக் கொள்கிறது. இந்த நாட்டில் ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வங்கி சேவை சென்று சேரவில்லை என்று அந்த வங்கிகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். அந்த கேபினட் முடிவை சட்டமாக ஆக்க வேண்டியது யாருடைய பொறுப்பு? நிதி அமைச்சரின் பொறுப்பு. அப்போது நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய். அவர் என்ன சொன்னார் என்றால், இது சாத்தியமில்லை. இது நடக்காது. எல்லா வங்கியும் நட்டப்படும். ஏழைக்கு கடன் கொடுப்பீர்கள், கறவை மாட்டிற்கு கடன் கொடுப்பீர்கள், செருப்பு தைப்பவனுக்கு கடன் கொடுப்பீர்கள். இறுதியில் பேங்க் திவால் ஆகிவிடும். இதை நான் ஒப்புக் கொள்ள முடியாது என்றார்.

காங்கிரஸ் கட்சியில் பிரிவு வருமோ என்ற பயம் இருந்தது. நமக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே இருந்தார்கள். அப்போது இந்திரா காந்தி களைத்துப் போய், "ஐயோ என்னுடைய சிந்தனைக்கு வடிவம் கொடுக்க முடியவில்லையே" என்று கலங்கிய நேரத்தில், ஒரே ஒரு கடிதம் கலைஞரால் எழுதப்பட்டது, "நான் இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் உங்களை ஆதரிக்கும். அந்த சட்டத்தை கொண்டு வாருங்கள்" என்று சொல்லி, அந்த சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வைத்து இன்றைக்கு கனரா பேங்கோ, ஸ்டேட் பேங்கோ உங்கள் காலடியில் இருக்கிறது என்றால் அதற்கு கலைஞர் என்ற ஒரு மகத்தான மனிதர்தான் காரணம்.

எத்தனையோ சொல்லிக்கொண்டே போகலாம். ஒன்றல்ல, இரண்டல்ல. எனவே ஆட்சி பொறுப்பில் அவர் ஆற்றி இருக்கும் பணி. அகில இந்திய அளவில் ஆற்றி இருக்கும் பணி.

**அண்ணாவின் அரசியல் தந்திரம்!**

இன்னும் கூட சில பேர் சொல்வார்கள். நான் வாஜ்பாய் அமைச்சரவையில் கலைஞரால் அமைச்சராக ஆக்கப்பட்டேன். அப்போது இஸ்லாமியர்கள் நம்மீது சுமத்திய மிகப்பெரிய குற்றச்சாட்டு, "திராவிட முன்னேற்றக் கழகம் வாஜ்பாயோடு சேர்ந்துவிட்டது. பி.ஜே.பி.யோடு சேர்ந்துவிட்டது. பெரியார் அல்ல, அண்ணா அல்ல எல்லோரும் காணாமல் போய்விட்டார்கள்" என்று!. கலைஞர் சொன்னார், " 1967 ல் அண்ணா ராஜாஜியோடு கூட்டணி வைத்தார். ராஜாஜி என்ன சொன்னார் என்றால், "பிராமணர்களே ஒரு கையில் பூணூல் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையில் உதயசூரியனுக்கு ஓட்டு போடுங்கள்" என்று சொன்னார். அப்போது பெரியார் சொன்னார், "போச்சு, போச்சு, போச்சு அந்த அண்ணாதுரை எல்லோரையும் கெடுத்து விட்டார்" என்று சொன்னார். எல்லோரையும் திட்டினார். கலைஞரையும் திட்டினார். சொல்லக் கூடாத வார்த்தைகளில் எல்லாம் திட்டினார் பெரியார். ஆனால் அண்ணாவின் அரசியல் தந்திரம், அரசியல் ஆளுமை. காங்கிரசை எதிர்ப்பதற்காக ராஜாஜியோடு கூட்டணி வைத்தார். ஆட்சிக்கு வந்து விட்டோம்.

**ஆட்சிக்கு வந்தவுடன் கலைஞரையும், நாவலரையும் கூப்பிட்டு காரை ரெடி செய்து பெட்ரோல் போடுங்கள் என்றார். பெரியாரை பார்க்க வேண்டும் என்று சொன்னார். பெரியாரை சென்று பார்த்தார். இந்த அமைச்சரவை உங்களுக்கு காணிக்கை என்று பெரியாரை வணங்கினார். பெரியார் அழுதார். எதற்கும் கூச்சப்படாத பெரியார் அன்றைக்கு கூச்சப்பட்டார். எதற்கும் நாணாத பெரியார், நாணினார். கண்ணீர், அண்ணாவின் கன்னத்தை நனைத்தது. அப்போது பத்திரிக்கையாளர்கள் ராஜாஜியிடம் கேட்டார்கள். அவர் சொன்னார், "நாங்கள் திருமணம் செய்து கொண்டது உண்மைதான். ஆனால் தேனிலவு முடிந்து விட்டது" என்று சொன்னார். அதையே அண்ணாவிடம் சொல்லி விளக்கம் கேட்டார்கள், "தேனிலவு முடிந்துவிட்டது; உண்மைதான். இனிமேல் குடும்ப வாழ்க்கை தொடங்கப் போகிறது" என்று சொன்னார் அண்ணா. அவர் கொள்கையை சமரசம் செய்து கொள்ளவில்லை. அரசியலில் வெற்றி பெற வேண்டும், ஆட்சி பொறுப்பிற்கு வர வேண்டும், இந்த மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட வேண்டும், இந்த நாட்டிற்கு சுயமரியாதை சட்டத்தை கொண்டு வர வேண்டும், எனக்கு இலக்கு இருக்கிறது. அந்த இலக்கை நோக்கி நகர்வதற்கு பயணத்தில் சில நேரங்களில் பாதையை மாற்றிக் கொள்வேன் தவறில்லை. அந்த வழியை தேர்ந்தெடுத்து அன்று ஆட்சி பொறுப்பிற்கு வந்தார்.**

**வாஜ்பாய் ஆட்சியில் குறைந்தபட்ச செயல் திட்டம்!**

அதேபோல கலைஞர் அண்ணாவின் தம்பியாக பி.ஜே.பி.யோடு கூட்டணி வைத்தபோது இந்த நாட்டில் இஸ்லாமியர்கள் யாரும் நம்பவில்லை. கலைஞர் கொள்கையை விட்டுவிட்டார். பெரியாரை அடமானம் வைத்துவிட்டார். அண்ணாவை விட்டு விட்டார் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு கலைஞர் என்ன செய்தார். வேறு வழி இல்லை. காங்கிரஸ் நம்மோடு இல்லை. இந்தியாவிற்கு ஒரு அரசாங்கம் வரப்போகிறது. அந்த அரசாங்கம் இஸ்லாமியர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டும். நாமும் விட்டு விட்டால் அந்த கட்சி மதவேட்டையில் இறங்கிவிடும் என்று சிந்தித்து பி.ஜே.பி.யோடு கூட்டணி பேச்சு வார்த்தை நடக்கிறது. அண்ணன் முரசொலி மாறன்தான் இருக்கிறார். அத்வானிக்கு மிகவும் சந்தோஷம். கலைஞரையே கவிழ்த்துவிட்டோம். பெரியாரைக் கவிழ்த்த மாதிரி, அண்ணாவை கவிழ்த்த மாதிரி இவரையும் கவிழ்த்து விட்டோம் என்று நினைத்தார்கள். நான் உங்களோடு வருகிறேன். எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் 3 நிபந்தனைகள். அது என்ன? உங்களுடைய மூலாதார கொள்கை என்ன?

1. அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து விட்டு ராமர் கோயில் கட்ட வேண்டும்.

2. காஷ்மீருக்கு 370வது சட்டப்பிரிவை ரத்து செய்ய வேண்டும்.

3. பொது சிவில் சட்டம் கொண்டு வர வேண்டும். அதன் பிறகு

4ஆவதாக ஒன்று இருக்கிறது. இதை இந்து நாடாக அறிவிக்க வேண்டும்.

அதை வெளியில் சொல்ல மாட்டார்கள். ஒரு அரசியல் இக்கட்டுக்காக அப்போது கலைஞர் கூட்டணி வைத்தார். என்ன சொன்னார் என்றால், "உங்களோடு கூட்டணி வைக்கிறோம். தமிழ்நாட்டில் வெற்றி பெறலாம். ஆனால் ஒன்று செய்ய வேண்டும்" என்ன செய்ய வேண்டும் என்று வாஜ்பாய் கேட்டார், அத்வானி கேட்டார். இதில் கையெழுத்து போடுங்கள் என்று நிபந்தனைகளை காண்பித்தார், நாங்கள் ஆட்சியில் இருக்கும் வரை பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமர் கோயில் கட்ட மாட்டோம் நாங்கள் இருக்கும் வரை காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து 370 ஐ எடுக்க மாட்டோம் நாங்கள் இருக்கும் வரை சிவில் சட்டத்தில் கை வைக்க மாட்டோம் என்ற நிபந்தனைகளுக்கு கையெழுத்து போடுங்கள். அதற்கு குறைந்தபட்ச செயல் திட்டம் என்று பெயர் வைத்து கையெழுத்து வாங்கிய பிறகுதான் கூட்டணி என அறிவித்தார் கலைஞர்.

இப்போது நினைத்துப் பாருங்கள். திருக்குவளையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து பத்தாம் வகுப்பு தாண்டாத ஒரு மாணவன், அண்ணாவால் பெரியாரால் கொள்கை உரம் பெற்று பொது வாழ்க்கைக்கு வந்து சட்டமன்ற உறுப்பினராகி தமிழ்நாட்டின் முதலமைச்சராக இந்தியாவிற்கே வழிகாட்டும் ஒரு மாபெரும் தலைவனாக உயர்ந்து நின்ற வரலாறு இந்த தலைவனைத் தவிர, இந்திய அரசியலில் வேறு எந்த மாநிலக் கட்சி தலைவருக்காவது உண்டா? இன்று வரையில் கிடையாது. இன்னும் 100 வருடத்திற்கு கிடையாது. எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அவரால் மட்டும்தான் முடிந்தது. அது அவர் எட்டி இருக்கும் உயரம்!.

திராவிட நாடு கேட்டோம். தனித் தமிழ் நாடு கேட்டார் பெரியார், அண்ணா. அந்தத் தனி தமிழ்நாடு கேட்ட அண்ணாதான், திராவிட நாடு கேட்ட அண்ணாதான், சீனா படையெடுத்து வந்தபோது சொன்னார்; "வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும்". அப்போது கூட பெரியார் என்ன செய்தார், எவனோ படையெடுத்து வருகிறான். எனக்கு சூத்திரம் பட்டம் ஒழிய வேண்டும். இந்த ஊரில் இருக்கும் வன்னியருக்கு, செட்டியாருக்கு, நாடாருக்கு, முதலியாருக்கு, கவுண்டருக்கு, உடையாருக்கு இவர்கள் எல்லாம் சூத்திரனாக இருக்கிறார்கள். இவர்களுடைய சூத்திர பட்டம் போக வேண்டும். நான் அதற்கு போராட வேண்டும் என்று கோயில் கருவறைக்குள் செல்ல போராட்டம் அறிவித்தார். பத்திரிகைக்காரர்கள் கேட்டார்கள், "ஐயா நாடே பறிபோகிற நிலைமையில் இருக்கிறது. சீனாக்காரன் வந்துவிட்டான். நீங்கள் இப்போது சென்று கருவறை போராட்டம் செய்கிறீர்களே" என்று கேட்டார்கள். அவர் சொன்னார், "சீனாக்காரன் படையெடுத்து, இந்த நாட்டை பிடித்து என் மக்களுக்கு சூத்திரப்பட்டம் போகுமானால் அவனை வரவேற்பதற்கும் நான் தயார்" என்று. என்ன காரணம் என்றால், "எனக்கு தேசாபிமானம் கிடையாது. எனக்கு பாஷாபிமானம் கிடையாது. எனக்கு இருப்பதெல்லாம் மனிதாபிமானம்தான்" என்றார். அது தான் பெரியார்.

எனக்கு நாட்டுப் பற்று கிடையாது. எனக்கு மொழிபற்று கிடையாது. ஏதோ ஒரு மொழி பேசுகிறோம். ஏதோ ஒரு நாட்டில் வாழ்கிறோம். என்னை மனிதனாக வாழ வை. என்னை மனிதனாக வாழ வைக்காத நாடு எனக்கு வேண்டாம் என்று சொன்னார் பெரியார். அப்போது அண்ணா சொன்னார், வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும். எனக்கு பிரச்சினை இருக்கிறது. என்னை சூத்திரன் என்று சொன்னது உண்மை தான். ஆனால் வீடு என்று ஒன்று இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும். வீட்டையே விட்டுவிட்டு எப்படி ஓடு மாற்ற முடியும். எனவே ஓடு நான் மாற்றிக் கொள்கிறேன். வீடு வேண்டும். எனவே இந்த நாடு வேண்டும். எனவே தனி தமிழ்நாட்டை கைவிடுகிறேன் என்று சொன்னவர் அண்ணா.

**தேசத்தைக் காப்பாற்ற உடனிருந்த கலைஞர்!**

எனவே ஒரு காலத்தில் தனி தமிழ்நாடு கேட்ட ஒரு கட்சியின் தலைவர் கலைஞர். திராவிட நாடு கேட்ட கட்சியின் தலைவர் கலைஞர். ஆனால் இந்தியாவின் இறையாண்மைக்கு 1971இல் பாகிஸ்தான் படையெடுத்து வந்த நேரத்தில் முதலமைச்சராக இருந்த கலைஞர் எந்த முதலமைச்சரும் இந்தியாவில் தராத 6 கோடி ரூபாயை பிரதமரிடத்தில் வழங்கி, இந்த தேசத்தை காப்பாற்றுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் உங்களோடு இருக்கும் என்றும் சொன்ன மகத்தான மாநில கட்சியின் தலைவர் கலைஞர்.

பிறகு வாஜ்பாய் வந்தார். அவரிடம் நான் அமைச்சராக இருந்தேன். தேச எல்லையில் கார்கில் போர். எந்த மாநிலமும் கொடுக்கவில்லை. 100 கோடி ரூபாய் கொடுத்தார் கலைஞர். எங்களை எங்கள் மொழியை, எங்கள் சுயமரியாதையை சரியாக வைத்துக் கொண்டால் இந்தியாவின் தேசீயத்தை காப்பாற்றுகின்ற முதல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். எங்களை சரியாக வைத்துக் கொள்ளவில்லை என்றால், எங்களை விட்டுவிடு என்று சொல்லும் முதல் கட்சி நாங்கள்தான். இது தவறா? இதை எங்களுக்கு கற்றுக் கொடுத்த தலைவன் இந்த தலைவன். இந்த தத்துவம், அதற்காகத்தான் அவருக்கு சிலை.

**எனவே கலைஞர் திருக்குவளையில் பிறந்து தமிழ்நாட்டில் ஆட்சித் தலைவர் தமிழ் மொழியை காப்பாற்றினார், இந்தியாவின் இறையாண்மையை காப்பாற்றினார், இந்தியாவின் சமதர்மத்தை வங்கிகளுக்கு கொண்டு வந்தார். இந்தியாவிற்கு எப்போதெல்லாம் நெருக்கடி வருகிறதோ அப்போதெல்லாம் காப்பாற்றும் ஒரு மகத்தான தலைவர் எங்கே இருந்தார் என்றால் தமிழ் நாட்டின் ஒரு கிராமத்தில், குக்கிராமத்தில் இருந்து புள்ளியாக தோன்றி, கோலமாக உயர்ந்து இந்தியா முழுவதும் கோலோச்சியவர்.**

**முரசொலி மாறன் என்ற மாமனிதர்!**

இன்னும் ஒன்று சொல்லட்டுமா, கலைஞரைப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். திருக்குவளை தமிழ்நாடு இந்தியா என்று உச்சத்தை தொட்டார். இப்போது பாருங்கள், முரசொலி மாறன் என்று ஒரு மாமனிதன். இந்தியாவின் வர்த்தகத் துறை அமைச்சர். தோகா மாநாடு வர்த்தக மாநாடு நடைபெறுகிறது. ஏறத்தாழ 190 நாடுகள் உலகத்தில் இருக்கிறது. இந்த 190 நாடுகளில் இந்தியா உட்பட 170 நாடுகள் வளரும் ஏழை நாடுகள். வளர்ந்த நாடுகள் 40 தான் இருக்கும். இப்போது வர்த்தகம் இருக்கிறது அல்லவா, அது பழைய மாதிரி இல்லை. அப்போது தஞ்சாவூரில் 100 வருடத்திற்கு முன் அரிசி விளையவில்லை என்றால் பஞ்சம் வந்துவிடும் மக்கள் மாண்டு போவார்கள். ஆனால் இப்போது இங்கே பஞ்சம் என்றால் தாய்லாந்தில் இருந்து அரிசி வரும். எந்த பொருளும், எங்கு இருந்து வேண்டுமானாலும் வரும். முன்பு கொய்யாப்பழம் குறிப்பிட்ட சீசனில்தான் விளையும். இப்போது எந்த சீசனிலும் கொய்யாப்பழம் கிடைக்கும். என்ன காரணம்? இந்தியாவில் விளையவில்லை என்றால், சீனாவில் இருந்து வரும். சீனாவில் விளையவில்லை என்றால், தான்சானியாவில் இருந்து வரும். எனவே உலகம் சுருங்கி இன்று ஒரு கிராமம் ஆகிவிட்டது.

இப்போது குளோபல் வில்லேஜ் என்கிறார்கள்; காரணம் அதுதான் WTO - WORLD TRADE ORGANISATION. இந்த உலகத்தில் இருக்கும் விளைபொருள் எங்கு வேண்டுமானாலும், எந்த மூலைக்கு வேண்டுமானாலும் கொண்டு போகலாம் அல்லது கொண்டு வரலாம். அதுதான் Liberalization - Globalization - தாராளமயமாக்குதல். நம்முடைய பொருள் தஞ்சாவூர் பொருள் அங்கு செல்லும். அதற்கு ஒரு குறியீடு இருக்கிறது. அதற்கு ஒரு காப்பு குறியீடு இருக்கிறது. திருநெல்வேலி அல்வா என்றால் அதற்கு ஒரு குறியீடு இருக்கிறது. அதை கொடுப்பதுதான் உலக வர்த்தக மையம். அதில் அங்கத்தினராக இருக்கும் எல்லா நாடுகளுக்கும் ஒரு வர்த்தக மாநாடு நடைபெற்றது. எந்தெந்த நாட்டிற்கு, என்னென்ன தேவை, தேவைக்கேற்ப வர்த்தக உறவு நீடிக்கிறது. அந்த நாட்டை சுரண்டாமல் இருக்க வேண்டும் அல்லவா, எல்லா அரிசியையும் அவன் எடுத்துவிட்டால், நாம் பட்டினியாக இருக்க வேண்டும் அல்லவா, எனவே இதற்கு ஒரு ஒப்பந்தம் தேவை. அந்த ஒப்பந்தத்தை போடுவதற்கு உலக நாடுகளின் வர்த்தகத் துறை அமைச்சர்கள் ஒன்று சேர்ந்தார்கள். இந்த ஒப்பந்தத்தை பற்றி வளரும் நாடுகளுக்கு போதுமான புரிதல் இல்லை. இவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை அவன் வளர்ந்த நாடு அமெரிக்காவின் தலைமையில் கொண்டுவந்து இதில் கையெழுத்து போடு என்று நீட்டுகிறான், போடுவதா? வேண்டாமா? என்று 150 நாடுகள் முழித்துக் கொண்டிருந்தார்கள்.

முரசொலி மாறன் என்ற மனிதன்தான் அதை படித்துவிட்டு, ஒவ்வொரு வரியாக படித்துவிட்டு அந்த சபையில் ஏற்றி, இதை ஏற்கலாமா? வேண்டாமா? என்று சொன்ன போது, அதில் ஒரு வார்த்தையை சேர்த்தார். நீ என்ன வேண்டுமானாலும் வைத்துக் கொள். என்னுடைய மஞ்சள் வேண்டுமா? எடுத்துக் கொள். என் அரிசி உனக்கு வேண்டுமா? எடுத்துக் கொள். என் பிரண்டை உனக்கு வேண்டுமா? எடுத்துக் கொள்.

ஆனால் வெளிப்படையாக ஒப்புதல் அளித்து அதை ஏற்று நான் தருகிறேன் என்று சொன்னால் மட்டும்தான் இந்த ஒப்பந்தம் செல்லும் என்று - "explicit consensus" இரண்டு வார்த்தையை உலக வர்த்தக ஒப்பந்தத்தில் சேர்த்தது முரசொலி மாறன் என்ற மகத்தான மனிதர். அப்படிப் பார்த்தால் கலைஞர் தமிழ்நாட்டை மட்டும் காப்பாற்றவில்லை இந்தியாவை மட்டும் காப்பாற்றவில்லை இந்த மனித சமுதாயம் வாழ்ந்து கொண்டிருக்கும் 150 நாடுகளின் தலைவிதியை மாற்றியமைத்த பெருமை கலைஞரால் அனுப்பப்பட்ட அந்த முரசொலி மாறன் என்ற மாமேதைக்கு சொந்தம். அதை இயக்கியவர் கலைஞர். அங்கிருந்து ஒரு கடிதம் எழுதுகிறார், முரசொலி மாறன் தன் சொந்த மாமாவிற்கு தலைவருக்கு எழுதுகிறார், என்ன எழுதினார் தெரியுமா? "உங்களால் தயாரிக்கப்பட்ட நான், ஒரு கிராமத்தில் இருந்து உங்களால் அழைத்துவரப்பட்ட நான், 150 நாடுகளின் தலைவிதியை மாற்றி இருக்கிறேன். எனக்கு பெருமை உலகத் தலைவர்கள் சேர்த்திருக்கிறார்கள்; அதை உங்கள் காலடியில் வைத்து வணங்குகிறேன்". இப்போது சொல்லுங்கள், தமிழ்நாட்டின் தலைவரா கலைஞர்? இந்தியாவின் தலைவரா கலைஞர்? உலகத் தலைவர்களில் ஒருவர் கலைஞர் என்பதை இந்த சிலை இன்றைக்கு உறுதி செய்து கொண்டிருக்கிறது.

இவ்வளவு பெருமையும் நாங்கள் வைத்துக் கொண்டு, ஒன்றுமே இல்லாமல், எங்களை இரண்டு பேர் மோடியும் அமித்ஷாவும் விமர்சிக்கிறார்கள் தம்பி உதயநிதி என்ன பேசினார்? சனாதனம் ஒழிய வேண்டும் என்றார். நான் கேட்கிறேன், இதுவரைக்கும் சனாதனம் என்றால் என்ன என்று உங்களில் யாராவது படித்திருக்கிறீர்களா? மணிப்பூரில் 220 பழங்குடி மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நான் இந்த புதுச்சேரியில் சொல்கிறேன், இந்த புதுச்சேரி பெரிய மகத்துவம் மிகுந்தது. தன்னுடைய 23வது வயதில் டாக்டர் அம்பேத்கார் ஒரு புத்தகம் எழுதினார். சாதிய பற்றி ஒரு ஆய்வு செய்தார். ஆங்கிலத்தில் படித்து பார்த்துவிட்டு சொல்லுங்கள். எந்த ஜாதியில் இருந்தாலும் விட்டுவிடுங்கள்; நீங்கள் ஆதிதிராவிடரா, வன்னியரா, செட்டியாரா ஆங்கிலம் தெரிந்தால் தயவு செய்து படித்தீர்கள் என்றால், உங்களை அறியாமல் எழுந்து நின்று ஒருமுறை அம்பேத்கருக்கு வணக்கம் வைப்பீர்கள். ஜாதி இந்தியாவில் எப்படி தோன்றியது? எப்படி வளர்ந்தது? எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறது? என்று 23 வயதில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஒரு ஆய்வு செய்திருக்கிறார். அந்த ஒரு ஆய்வுக்காக அதை படித்துவிட்டு அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தார்கள்.

அந்த புத்தகத்தை பிரிட்டிஷ் இந்தியாவில் பிராமணர்கள் அன்றைக்கு லண்டனில் இருந்த உச்சநீதிமன்றம் (Privicy Council) சென்று, "அந்த புத்தகம் வெளியே வந்தால் எங்கள் மதம் அழிந்துவிடும். இந்து மதத்தை இழிவுபடுத்துகிறார். ஜாதி எங்களுக்கு வேண்டும். அது மக்கள் மதப்பிரச்சனை. எங்களின் மதவிவகாரங்களில் அந்தப் புத்தகம் தலையிடுகிறது" என்று வாதிட்டு தடை வாங்கினார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் தடை செய்யப்பட்ட அந்த முதல் புத்தகம் அம்பேத்கரின் புத்தகம்; The Caste in India: Genesis. Mechanism & Development (இந்தியாவில் சாதி: அதன் தோற்றமும் வளர்ச்சியும் இயங்குகின்ற முறையும்).

அந்த புத்தகத்தை தடை செய்து விட்டார்கள். அதைப் படிக்கும் வாய்ப்பு பலருக்கும் கிடைக்கவில்லை. பாரதிதாசன் இந்த புதுச்சேரி மண்ணில்தான் இருந்தார். இங்கு பிரெஞ்சு மொழி இருந்தது. வெள்ளைக்கார அய்ரோப்பிய ஆளுகைக்கு கீழ் உள்ள நாடுகளில் அது தடை. அந்த புத்தகம் எப்படியோ பிரெஞ்சு மொழியில் வந்துவிட்டது. புதுச்சேரி பிரெஞ்சு ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்த காலம். இதனால், புதுச்சேரியில் புத்தகம் புழக்கத்தில் வந்தது. பாரதிதாசன் படித்துவிட்டார். அந்த புத்தகம் என்ன சொல்கிறது?

**அமெரிக்காவில் சாதிகள் உண்டா?**

இந்த தீண்டத்தகாதவர்கள் - சேரிகள் என்று வந்தது எப்படி என்று கேட்டால், தமிழ்நாட்டில் புதுவையில் வர்ணாசிரமம் தெரியாது, சனாதனம் தெரியாது. இந்த சனாதனம் என்பது ஆரிய மதம். பிராமணர்கள், ஆரியர்கள் 'கைபர் போலன்' வழியாக வந்தபோது இந்த மதமும் அவர்களோடு வந்தது. இந்த சனாதன தர்மத்திற்கு 1919 இல் பனாரஸ் பல்கலைக்கழகம் புத்தகமே போட்டிருக்கிறது. அந்த புத்தகத்தில் அவர்கள் என்ன சொல்கிறார்கள்? சனாதனம் தர்மம் எப்படி வந்தது என்றால், "ஆரியர்களாகிய நாங்கள் மேன்மை தாங்கியவர்கள். மற்ற பிறவி மனிதர்களைவிட உயர்ந்தவர்கள். நாங்கள்தான் முதன் முதலில் இந்தியாவில் கைபர் போலன் கணவாய் வழியாக குடியேறி னோம். இந்த ஆரிய மதம் எங்களுக்கு சொந்தம். இந்த மதத்திற்கு அடிநாதம் சனாதனம். அதிலே இன்னும் சொல்கிறார்கள். விந்திய மலைக்கு அப்பால், இமய மலை வரை ஆரிய மதம், எங்கள் மதம். அந்த ஆரிய மதத்திற்கு தர்மம் இந்த சனாதன தர்மம் என்று அந்த புத்தகத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

அந்த தர்மம் என்ன சொல்கிறது, பிறப்பிலேயே மனிதர்களை நான்காக பிரி. நான்காக பிரித்து சமுதாயத்திற்கு தேவையானதை அந்த நான்கு பிரிவும் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலை வெளிநாட்டிலும் இருக்கிறது. ஆனால் ஜாதியாக இல்லை. நகை செய்கிறான். பிணத்தை தூக்குகிறான். இந்தியாவை தவிர, இந்த மதத்தை தவிர, எல்லா இடத்திலும் இதை செய்கிறார்கள். இங்கிலாந்தில் இல்லையா? அமெரிக்காவில் செருப்பு தைக்கிறான், அருந்ததியர் உண்டா? நகை செய்கிறான், ஆசாரி உண்டா? இல்லை. சவரத் தொழிலாளி செய்கிறவன் உண்டு. ஆனால் மருத்துவன் இல்லை. அங்கு தொழிலை பிரித்தார்கள். இங்கே தொழிலாளர்களை பிரித்து குலத்தொழிலாக மாற்றினார்கள்.

**பாரதிதாசன் முழங்கிய சமத்துவ மண்!**

இதை அம்பேத்கர் தனது புத்தகத்தில் என்ன சொன்னார் என்றால், இதை ஆரியர்கள் வந்து சாதியை பிரித்து சட்டமாக்கிய போது, எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். ஒப்புக் கொண்டவர்களை சத்திரியர்களாக, வைசியர்களாக, சூத்திரர்களாக ஆரியம் பிரித்தது. உன் தத்துவம் பொய். எங்களுடைய தத்துவம் புத்தர் தத்துவம். இந்த புத்த தத்துவம் என்பது எல்லோரும் சமம். நாங்கள் எல்லாம் புத்த மதம் என்று சொன்னபோது, ஆர்ய வைதீக மதத்திற்கும் இன்றைக்கு இந்து மதம் என்று சொல்லுகிற அன்றைய சனாதன மதத்திற்கும் புத்த மதத்திற்கும் ஒரு பெரிய மோதல் ஏற்பட்டு, இந்த சனாதன இந்து மதம் வெற்றி பெற்ற காரணத்தினால் தோற்றுப் போன பவுத்தர்கள் எல்லோரையும் ஊருக்கு வெளியில் கொண்டுவந்து வைத்து விட்டார்கள். அதுதான் பின்னாளில் சேரி ஆகிவிட்டது என்று ஒரு ஆய்வு செய்து கட்டுரை வழங்கினார் அம்பேத்கர்.

பிராமணர்கள் சொல்லி அந்த புத்தகத்தை வெள்ளைக்கார அரசு தடை செய்து விட்டது. இது பிரெஞ்சு வழியாக புதுவை வந்துவிட்டது. பாரதிதாசன் படித்துவிட்டார். அவர் எழுதினார், "ஆரியர் தமையொப்பா ஆதிதிராவிடரை, சேரியில் வைத்தாரடி சகியே! சேரியில் வைத்தாரடி சகியே!! அவர் நம் உற்ற தோழரடி சகியே! உற்ற தோழரடி!!" . அம்பேத்கரின் தடை செய்யப்பட்ட புத்தகத்தை கொண்டு வந்து பாரதிதாசன் முழங்கிய சமத்துவ மண், இந்த புதுவை மண். அந்த மண்ணில்தான் கலைஞருக்கு சிலையை திறந்திருக்கிறோம். எனவே இவ்வளவு சமத்துவம் பேசிய இந்த கட்சிக்கு தலைவராக இருக்கும் எங்களை பார்த்து சனாதனம் பேசாதீர்கள், சனாதனம் என்றால் என்ன என்று தெரியுமா? என்று கேட்கின்றார்கள்.

சனாதனம் என்றால் இது தான். ஏற்றத்தாழ்வை சொல்வது சனாதனம். பெண்ணுக்கு உரிமை இல்லை என்று சொல்வது சனாதனம். பெண்ணிற்கு பத்து வயதிற்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது சனாதனம். சொத்து இல்லை என்று சொல்வது சனாதனம். கணவன் இறந்து விட்டால் நீயும் அந்த தீயிலே இறந்துபோ என்று சொல்வது சனாதனம். இதெல்லாம் எங்களுக்கு தேவையா? என்னவென்று தெரியாமல் சொன்னால் தமிழிசை ஏன் வசைபாட வேண்டும். தமிழிசை தாத்தா என்ன செய்தார் என்று தெரியுமா? இன்றைக்கு இருக்கிறார்கள் முக்குலத்தோரில் ஐ.ஏ.எஸ். ஆபீஸர். ஆனால் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வந்து போராடாத வரைக்கும் அவர்கள் நிலைமை என்ன? தோள் சீலை போராட்டம் யாருக்கு நடந்தது? வைக்கத்தில் போராட்டம் யாருக்கு நடந்தது? எந்த ஜாதிக்கு இங்கு இழிவு இல்லாமல் இருந்தது? தீண்டத்தகாதவர்கள் மட்டும்தானா? இந்து மதத்தால், பிராமணியத்தால் எல்லா சாதிக்கும் இழிவு இருந்தது? எல்லாவற்றையும் எதிர்த்து தாண்டித்தான் வந்திருக்கிறோம்.

இந்த சனாதனத்தை ஏற்றுக் கொண்டால், நான் பெரியாருக்கு விரோதி, இந்த சனாதனத்தை நான் ஏற்றுக்கொண்டால் அண்ணாவிற்கு விரோதி, இந்த சனாதனத்தை நான் ஏற்றுக்கொண்டால் கலைஞருக்கு விரோதி, இந்த சனாதனத்தை நான் ஏற்றுக்கொண்டால் அம்பேத்கருக்கு விரோதி, இந்த சனாதனத்தை நான் ஏற்றுக்கொண்டால் சக மனிதனுக்கு நான் விரோதி.

இதில் எங்களுக்கு என்ன பயம்? நீ படித்துவிட்டு வா. நான் அமித்ஷாவிற்கு புதுவையில் இருந்து சொல்கிறேன், பாரதீய ஜனதா கட்சியில் எவ்வளவு பெரிய கொம்பன் இருந்தாலும் வா, நீங்களே வாருங்கள். திறந்த வெளியில் டெல்லியில் கருத்துப் போரை வைத்துக் கொள்ளலாம். ஒரு லட்சம் பேர் கூடட்டும். நீங்கள் சனாதனம் பேசுங்கள். நானும் பேசுகிறேன். நீங்கள் சரியா? நான் சரியா? என்பதை இந்த தேசத்தில் இருக்கும் மக்கள் தீர்மானிக்கட்டும். நான் தயார். திராவிட முன்னேற்றக் கழகம் தயார். நீங்கள் தயாரா?

**அமைச்சர் உதயநிதி என்ன பேசினார் என்று தெரியாமல் பேசக்கூடாது!**

என்ன பேசினார் உதயநிதி என்று தெரியாமலே பேசக்கூடாது. நான் சொல்கிறேன், சனாதனத்தை நாங்கள் அழித்த காரணத்தால்தான்மோடி இன்றைக்கு பிரதமர்; அமித்ஷா உள்துறை அமைச்சர். இல்லை என்றால் நீங்கள் வேறு வேலை பார்த்திருப்பீர்கள். நாங்கள் சனாதனம் வேண்டாம் என்று போராடியதால்தான் தமிழிசை இன்றைக்கு கவர்னர். இல்லையென்றால் வேறு ஆளாக இருந்திருப்பீர்கள். An educated man without humility and character is more dangerous than a beast if his education is detrimental society. "ஒரு படித்தவனின் அறிவு சமுதாயத்திற்கு எதிராக போகுமானால் அவன் விலங்கைவிட கொடியவன்" என்று சொன்னார் அம்பேத்கர். உங்களை யெல்லாம் நான் என்ன என்று அழைப்பது?.

1919 ம் ஆண்டு ஜாலியன் வாலாபாக்கில் ஒரு பெரிய படுகொலை. சுதந்திர போராட்டத்திற்காக போராடியவர்களை ஒரு சிறிய மைதானத்திற்குள் வைத்து, ஜெனரல் டயர் என்பவன் முன்னறிவிப்பு இல்லாமல் சுட்டுக்கொன்றான். ஆயிரக்கணக்கான பேர் செத்துப் போனார்கள். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பாமரர்கள் ஆயிரக்கணக்கான பேர் கை கால்களை இழந்தார்கள். இந்தியாவில் நடந்த மிகப்பெரிய படுகொலை அது தான். ஜெனரல் டயர் என்ற ஒரு காட்டுமிராண்டிதான் சுட்டான். அவனை அதற்குப் பிறகு 20 ஆண்டுகள் காத்திருந்து காத்திருந்து உத்தம்சிங் என்கிற ஒரு இளைஞன், அந்த படுகொலையை பார்த்த ஒரு சிறுவன், 20 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்துக்கு படிக்க சென்று, அங்கு துப்பாக்கி வாங்கி இந்த ஜெனரல் டயர் மார்க்கெட்டில் பொருள் வாங்கிக் கொண்டிருக்கும்போது அவனை கண்டுபிடித்து, சுட்டேன் சுட்டேன் என்று அந்த ஜெனரல் டயரை சுட்டான் அந்த உத்தம்சிங்.

2013-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் பிரதமர் டேவிட் ட்ரூமன் இங்கே வந்தார். அவர் ஜாலியன் வாலாபாக் படுகொலை நினைவு சின்னத்தை பார்க்க வேண்டும் என்று சொன்னார். அந்த நினைவுச் சின்னத்தில் மலர் வைத்து, எங்களுடைய அன்றைய அரசாங்கம் உங்களுக்கு தவறிழைத்து விட்டது. மண்டியிடுகிறேன், மன்னிப்பு கேட்கிறேன் என்று மண்டியிட்டு அந்த ஜாலியன் வாலாபாக் நினைவிடத்தில் தன்னுடைய வணக்கத்தை செலுத்தினான். நூறு வருடம் ஆகிவிட்டது. நூறு வருடத்திற்கு பிறகு என் இனம் செய்தது தவறு. என் அரசாங்கம் செய்தது தவறு. என்னுடைய தளபதி ஜெனரல் டயர் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டது தவறு என்று ஒப்புக்கொள்கின்ற நாணயம் வெள்ளைக்காரனுக்கு இருந்தது.

நான் இன்னும் ஒரு படி மேலே சொல்கிறேன். இந்த உலகத்தில் பூமியைத்தான் சூரியன் சுற்றி வருகிறது என்று நம்பினார்கள். பைபிளில் இருக்கும் படி இறைவன் சிருஷ்டித்தான் என்று சொன்னார்கள். 600 ஆண்டுகளுக்கு முன்பு புருனோ என்ற விஞ்ஞானி, "இல்லை, பழைய ஏற்பாட்டில் இருப்பது தவறு. மதத்தில் சொல்லப்பட்டது தவறு. சூரியன்தான் நடுவில் இருக்கிறது. இந்த பூமிதான் சுற்றி வருகிறது. அதனால் தான் இரவுபகல் மாறுகிறது" என்று சொன்ன புருனோவை, கிறிஸ்தவ மதம் நடுரோட்டில் கம்பத்தில் கட்டி வைத்து உயிரோடு எரித்தது.

400 ஆண்டுகளுக்குப் பிறகு போப் பாண்டவர் அந்த புருனோவை எங்கே எரித்தார்களோ அந்த இடத்தில் சென்று சிலுவையை கையில் வைத்துக்கொண்டு சிலுவையின் பெயரால் மண்டியிட்டு வருத்தம் தெரிவித்தார். புருனோவை கிருஸ்தவ மதம் நடத்தியது தவறுதான் என்று போப் பாண்டவர் மனம் திறந்து வருத்தம் தெரிவித்தார். இங்கிலாந்தின் பிரதமர் வந்து இங்கே மன்னிப்பு கேட்கிறார். புருனோவிற்கு போப்பாண்டவர் மன்னிப்பு கேட்கிறார்.

**மணிப்பூரில் மிருகத்தனமான பா.ஜ.க. ஆட்சி!**

200 பேரை கொன்றுவிட்டு, ஒரு பழங்குடி கிருஸ்தவ இளம்பெண்ணை நிர்வாணமாக்கி, 200 பேர் காட்டுமிராண்டித்தனமாக இழுத்துச் சென்று வன்புணர்ச்சி செய்கிறார்கள், அதை நியாயப்படுத்துகிற முதலமைச்சர் மணிப்பூரில் இருக்கிறார். ஒரு மிருகத்தனமான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் ஒரு முதலமைச்சரை, அமித்ஷா நாடாளுமன்றத்தில் பாராட்டுகிறார், மோடி பாராட்டுகிறார் என்றால், நான் கேட்கிறேன், மனிதனுக்கு தவறிழைத்து விட்டு மன்னிப்பு கேட்ட அந்த மாமனிதன் வெள்ளைக்காரனாக இருக்கலாம், போப் பாண்டவர்களாக இருக்கலாம் அவர்களுக்கு முன்னால் நீங்கள் எல்லாம் மனித மாண்பை கொலை செய்த எத்தர்கள் என்று சொல்வதிலே எனக்கு என்ன தயக்கம்?.

இப்படி ஒரு நாடு தேவையா? மனிதனை மனிதனாக நேசி. அப்படி மனிதனை நேசிக்காத ஒரு ஆட்சி இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஊழலும், மதவாதமும் வந்து கொண்டிருக்கும் இந்த ஆட்சியை தூக்கி எறிவதற்கு நாம் எல்லோரும் இந்த மகத்தான மனிதருக்கு முன்னால், அவரின் சிலைக்கு முன்னால் உறுதி எடுத்துக் கொள்வோம். அதுதான் கலைஞருக்கு செலுத்தும் அஞ்சலி என்று சொல்லி விடை பெறுகிறேன்.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மடுவை அ.துரை

### செப்டம்பர் 30 (2020)



தனது இளமைப் பருவம் தொட்டே கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

தென்சென்னை மாவட்டம், சைதை பகுதிக் கழகச் செயலாளராகவும், பகுதி அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.








# தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

## புதிய மாவட்ட, மாநகர நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### அணியின் செயலாளர் டி.செங்குட்டுவன் Ex.M.LA., அறிவிப்பு

தி.மு.க அமைப்புசாரா ஓட்டுநர் அணியின் புதிய மாவட்ட, மாநகர நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்
அணியின் மாநில தலைவர் திரு. D.M.கதிர்ஆனந்த் M.P., அவர்கள் தலைமையிலும்,
மாநில துணை செயலாளர்கள் முன்னிலையிலும்
30.09.2023 இன்று காலை 10.00 மணியளவில்
திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம்
மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் Ex.MLA., அவர்கள் வரவேற்புரை ஆற்றுவார்.

மேற்படி கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக

மாண்புமிகு **துரைமுருகன்** M.A.,B.L.,
கழக பொதுச்செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர்

மாண்புமிகு
**கே.என்.நேரு**
கழக முதன்மைச் செயலாளர்-
நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்

மாண்புமிகு
**அன்பில்மகேஷ் பொய்யாமொழி**
மாவட்ட கழக செயலாளர்-பள்ளிகல்வித்துறை அமைச்சர்

மாண்புமிகு
**சி.வி.கணேசன்**
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

உயர்திரு.
**கா.வைரமணி** B.A.,B.L.,
மாவட்ட கழக செயலாளர்

மாண்புமிகு
**ஆ.இராசா** M.P.,
கழக துணைப்பொதுச்செயலாளர்

மாண்புமிகு
**எஸ்.எஸ்.சிவசங்கர்**
போக்குவரத்துத்துறை அமைச்சர்

உயர்திரு.
காடுவெட்டி **தியாகராசன்** MLA.,
மாவட்ட கழக செயலாளர்

வணக்கத்திற்குரிய **மு.அன்பழகன்**
திருச்சி மாநகர மேயர்

ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரையும், சிறப்புரையும் வழங்க உள்ளார்கள். அதுசமயம் அனைத்து மாவட்ட, மாநகர அமைப்புசாரா ஓட்டுநர் அணியின் தலைவர்கள், துணைத்தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கட்டாயம் காக்கிபேண்ட், வெள்ளை சர்ட் சீருடையுடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


அன்புடன்.. **D.M.கதிர்ஆனந்த்** MBA.,(USA) M.P.,
கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் - வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்

**கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி**

# உடன்பிறப்பே... 25

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# கழகக் கருவூலம்: நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி


ஓவியம் : ரவி பேலட்

**“நண்பர் கே.ஆர்.ராமசாமி கலையுலகில் ஒரு கருவூலம். காசுக்காக மட்டுமே நடிக்காத கடமை வீரர். நிலம் பிளந்து வீழ நேர்ந்தாலும், நெஞ்சங் குலையாத ஒரு கொள்கைத் தங்கம்”** கலையுலகில் ‘நடிப்பிசைப் புலவர்’ எனக் கொண்டாடப்படும் கே.ஆர்.ராமசாமி குறித்து பேரறிஞர் அண்ணா தெரிவித்த இந்தக் கருத்துகள், அவர் காலத்தால் மறக்க முடியாத **‘கழக உடன்பிறப்பு’** என்பதற்கான சான்று.

“என்னைப் பார்க்காமல் அவரோ, அவரைப் பார்க்காமல் நானோ இருந்ததில்லை” என்று அண்ணா குறிப்பிடும் அளவுக்கு நெருக்கம் கொண்டவர் ராமசாமி. எல்லோரும் அறிய **‘அண்ணாவின் செல்லப்பிள்ளை’** எனப் பெயர் எடுத்தவர்.

## கலை வடிவங்களில் மறுமலர்ச்சி

திராவிட லட்சியங்களை தமிழ்நாட்டு மண்ணில் விதைப்பதற்குக் கலைவடிவங்களை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்தினார்கள் நமது தலைவர்கள். அதன் விளைவாகப் புராண, இதிகாச நாடகங்கள் நிகழ்ந்த மேடைகளில் சமூக நாடகங்கள், பகுத்தறிவு நாடகங்கள் நடந்தன. ‘கசப்புச் சூரணத்தை இனிப்புத் தேனிலே கலந்து தரும் வகையில் அந்த நாடகங்கள் அமையப்பெற்றன’ என இதைக் குறிப்பிடுவார் அண்ணா.

கே.ஆர்.ஆர். தூண்டுதலின்பேரில்தான் **‘ஓர் இரவு’** நாடகத்தை ஒரே நாளில் எழுதியதாக 1945-ஆம் ஆண்டு தஞ்சையில் இந்த நாடக நிகழ்ச்சியின் போது குறிப்பிட்டுள்ளார் அண்ணா. இவருக்காகவே அண்ணா எழுதிய நாடகம் **‘வேலைக்காரி’**. அந்த நாடகம் படமாகவும் வெளி வந்து மறுமலர்ச்சி காலத்துக்குக் கட்டியம் கூறியது.

## நாடக வாழ்க்கையும் திரையும்

இவரது சொந்த ஊர் கும்பகோணம் அருகே உள்ள அம்மாசத்திரம். பெற்றோர் நெசவுத் தொழிலாளர்கள். தந்தை பெயர் இராமபத்திரன், தாயார் பெயர் குப்பம்மாள். 1914-ஆம் ஆண்டு பிறந்த ராமசாமி, குடும்பச் சூழல் காரணமாக இளவயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார்.

கும்பகோணத்தில் இருந்த வாணி விலாச சபையில், ‘பால பார்ட்’டாக நடித்தவர், பின்னர் சக்தி நாடக சபை, மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி நாடகங்களில் நடிக்கச் சென்றார். தனது பதிமூன்றாவது வயதில் அவ்வை டி.கே.எஸ் சகோதரர்களின் நாடகக் குழுவில் சேர்ந்தார். அங்குதான் அவரது அரசியல் பார்வையும் நாடக வாழ்க்கையும் மாற்றம் கண்டன.

அந்த நாடகக் குழுவில் சுயமரியாதை இயக்கத்தினருடன் தொடர்பில் இருந்த நடிகர் டி.வி.நாராயணசாமி இருந்தார். அவர் ‘குடி அரசு’ இதழின் தீவிர வாசகர். அந்த இதழை, தான் வாசிப்பது மட்டுமில்லாமல், இதர நடிகர்களையும் வாசிக்கத் தூண்டுவார். டி.கே.எஸ். நாடகக் குழு, ஈரோட்டில் நடத்திய **‘குமாஸ்தாவின் பெண்’** நாடகம் குறித்துக் ‘குடி அரசு’ ஏட்டில் நீண்ட விமர்சனம் எழுதினார் அண்ணா. அந்தக் கட்டுரை நாடக நடிகர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது.

இந்த நிலையில், தந்தை பெரியார் அந்த நாடகக் குழுவினரை அழைத்து விருந்து வைத்தார். இப்படியாக கே.ஆர்.ஆர். தொடர்பு அண்ணாவுக்குக் கிடைக்க இருவரும் நெருக்கமாகினர். சொந்தக் குரலில் பாடி, நடிக்கும் அவரது ஆற்றலும், அழகான தோற்றமும் அவரைத் திரைத் துறை பக்கம் கொண்டு வந்தது. முதன்முதலில் நடித்த **‘பூம்பாவை’** படம் மிகப் பெரிய வெற்றி அடைய, அதைத் தொடர்ந்து திரையிலும் உயரத் தொடங்கினார்.

## அண்ணாவிடம் பற்று

அண்ணா எழுதிய நாடகங்களை மேடை ஏற்றியதன் மூலம் கே.ஆர்.ஆர், தன்னைச் சீர்திருத்த நாடகவாதியாக அடையாளம் காட்டிக் கொள்ளத் தொடங்கினார். அதற்கடுத்து ‘ஓர் இரவு’, ‘சொர்க்க வாசல்’ என அடுத்தடுத்து அண்ணாவின் படைப்புகள் திரையாக்கம் கண்டதன் மூலம் திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்பத் தொடங்கினார்.

திரைத்துறையில் இதன்மூலம் திராவிட இயக்கம் தீவிரமாக இயங்க வழி ஏற்பட்டது. ‘செல்லப் பிள்ளை’, ‘சுகம் எங்கே’, ‘நீதிபதி’, ‘சதாரம்’, ‘துளி விஷம்’, ‘செந்தாமரை’, ‘கன்னியின் சபதம்’, ‘எதையும் தாங்கும் இதயம்’, ‘தலையெடுத்தான் தம்பி’ என அவர் நடித்த படங்கள் எல்லாம் கொள்கை பேசின. அதே கால கட்டத்தில், கலைவாணர் மீது கொண்ட பற்றுக் காரணமாக ‘கிருஷ்ணன் நாடக சபா’ என்கிற நாடகக் குழுவையும் தொடங்கினார்.

சமூக நாடகங்கள், படங்களில் நடிக்கத் தொடங்கிய பின்னர், புராணப் படங்களில் நடிக்க வந்த வாய்ப்புகளை எல்லாம் தவிர்த்ததுடன், படங்களில் நடிப்பதற்கு அண்ணாவின் ஆலோசனையைக் கேட்கத் தொடங்கினார். அவருக்கு முன்பும் நாடக நடிகர்கள் பகுத்தறிவு பேசினர். ஆனால், கே.ஆர்.ஆர். அண்ணாவிடம் கொண்டிருந்த நட்பு, கழகம் தொடங்கியபோதும் தொடர்ந்தது.

## கழகத்தின் கலைக் குரல்

திரைத் துறையில் தவிர்க்க முடியாத நடிகராக இருந்த நேரத்தில், கழகத்தின் உறுப்பினராக இணைத்துக் கொண்டு மேடைகளிலும் அவர் இடம்பெறத் தொடங்கினார். கழகத்தின் மேடைகளில் பாடல், நாடகம், உரை என அவரது குரல் தொண்டர்களுக்கு உணர்வூட்டும்.

திரைப்படத்தில் பணம் புகழ் கிடைத்தாலும், கட்சியைவிட, தான் பெரிய ஆள் என்கிற எண்ணம் அவருக்கு இருந்ததில்லை. தவிர, எந்த இடத்திலும் இயக்கத்தையே முதன்மைப்படுத்தினார். அவரது தன்னலமற்ற பணிகளைப் பெருமைப்படுத்தும் வகையில், கழகத்தின் சார்பில், முதன்முதலாக கே.ஆர்.ஆர் அவர்களை சட்டமேலவைக்கு நிற்க வைத்து வெற்றி பெற வைத்தார் அண்ணா.

“பொதுவாக கலைத்துறையில் உள்ளவர்களை ஆளுநர் மூலமாகத்தான் மேலவைக்கு நியமனம் செய்வார்கள். ஆனால், முதன்முறையாக இந்தியாவிலேயே தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நடிகர் நடிப்பிசைப் புலவர்தான்” எனத் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார்.

**அண்ணாவின் பெயருக்கு முன் ‘அறிஞர் அண்ணா’ என அடைமொழியுடன் விளம்பரம் வெளியிட்டவர் இவர்தான்.**

## அண்ணாவுக்கு அடைமொழி தந்தவர்

கழகத்தின் தொடக்கக் கால நிதித் தேவைகளுக்கு கே.ஆர்.ஆரின் பங்கு அதிகம். **‘மன்றம்’, ‘திராவிடம்’** ஆகிய பத்திரிகைகளுக்கு நிதி உதவி, கழக வளர்ச்சி நிதி திரட்ட நாடகம் நடத்துவது, சென்னை மாவட்டக் கழகத்துக்கு ஒலிப்பெருக்கி உபகரணங்கள் எனத் தனிப்பட்ட உதவிகளும் செய்து கழகத்தைக் கண்ணெனக் காப்பாற்றியவர்.

கடைசி வரை, கழகத்தில் உறுப்பினராக இருந்து தனது கொள்கையை உலகுக்குப் பறைசாற்றியவர் கே.ஆர்.ஆர். கழகப் போராட்டங்களில் கலைஞர்களுக்கு விலக்கு அளித்திருந்தார் அண்ணா. அது வெளிப்படையாகவே தெரிந்த, அறிவிக்கப்படாத கழக மரபு. ஆனால், கழகத்தின் போராட்டங்களின்போதும் படப்பிடிப்பில் இருந்தாலும் கைது செய்யப்பட்டுள்ளார் கே.ஆர்.ஆர்.

கே.ஆர்.ராமசாமிக்கு ‘நடிப்பிசைப் புலவர்’ என பட்டம் வழங்கப்பட்டது கழக மேடையில்தான். அதேபோல, அண்ணாவின் பெயருக்கு முன் **‘அறிஞர் அண்ணா’** என அடைமொழியுடன் விளம்பரம் வெளியிட்டவர் இவர்தான். **‘ஓர் இரவு’** நாடகத்தை தஞ்சையில் அரங்கேற்றியபோது கதை உரையாடல் **‘அறிஞர் அண்ணா’** என ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அண்ணாவுக்குப் புது அடையாளம் தந்தன.

## வைரத் தூண்

அண்ணாவின் பேரன்புக்குப் பாத்திரமான நடிப்பிசைப் புலவர் 1971-ஆம் ஆண்டு புற்று நோய்க்கு ஆளாகி, மறைவை எய்தினார். அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர், ‘முரசொலி’யில் இரங்கல் எழுதுகையில், “கழகப் பொன் மாளிகையின் வைரத் தூண் சாய்ந்தது, நாடகத் திரை வானின் ஒளித்தாரகை வீழ்ந்தது” என எழுதினார். ‘அறிவியக்கத்தின் புகழ்மிக்கக் கலைமணி, தி.மு.கழகத்தின் படைக்கலனாகத் திகழ்ந்தவர், அன்பு மிக்க நண்பர்” என உருகினார் கலைஞர்.

எளிமையும் அழுத்தமான கொள்கைப் பற்றும் கொண்ட நடிப்பிசைப் புலவர் கழகத்தின் வேராக நின்றார். அந்த வேர் கருப்பு, சிவப்புக் கொடியேந்தி நிற்கும் கழக உடன்பிறப்புகளின் கரங்களில் உறுதியாக பற்றி நிற்கும்.

...துடிக்கும்

## அறிவியல் மனப்பான்மைக்குத் தடை!

கேரளத்தில் பிரபல குடலியல் நிபுணராக இருப்பவர் சிரியாக் அபி பிலிப்ஸ். போலி மருத்துவர்கள், மருந்து நிறுவனங்கள் ஆகியவற்றை எதிர்த்து தனது ‘X’ (எக்ஸ்) தளத்தில் @theliverdr (தி லிவர் டாக்டர்) எனும் பெயரில், பதிவு செய்துவந்தார். இதனால் பல விமர்சனங்களையும், கொலை மிரட்டல்களையும் சந்தித்து வந்தார். இந்நிலையில், பெங்களூரு நீதிமன்றத்தில் ஒரு மருந்து நிறுவனம் தொடர்ந்த வழக்கில், அவருடைய ‘X’ கணக்கு உலகம் முழுவதிலும் முடக்கப்பட்டிருக்கிறது.

அவர் தன்னிடத்தில் வரும் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்த அனுபவங்களையும், அதிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களையும் பதிவிட்டு வந்தார். அவை சர்வதேச அளவில் சக மருத்துவர்களுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் பெரிய அளவில் உதவியாக இருந்து வந்தன. தற்போது அந்தப் பதிவுகள் எதையுமே படிக்க முடியாதபடிக்கு அவரது கணக்கு முடக்கப்பட்டுள்ளது. உறுதி செய்யப்பட்ட கணக்கில், தகுதியான மருத்துவர் ஒருவர், அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் விதமாகச் செயல்பட்டு வந்தவருக்கே இந்த நிலைமையா என்று அவரது ஆதரவாளர்கள் பலர் குரல் கொடுத்து வருகின்றனர்.

## :ப்ளாஷ்பேக்



### மேடையில் சான்றிதழ்!

1998-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29, 30 தேதிகளில் திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில், இரண்டு நாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. அய்யா வெற்றிகொண்டான், கோவை மு.இராமநாதன் ஆகியோர் அதில் பங்கேற்று இளைஞர் அணித் தோழர்களுக்குப் பயிற்சியளித்தனர். கூட்டம் நடைபெற்ற ஆவடி பகுதியிலேயே தங்கும் இடமும், மூன்று வேளை உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாசறைக் கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்களுக்கு தலைவர் கலைஞர், பேராசிரியர், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதியார் ஆகியோர் கையெழுத்துடன் சான்றிதழும் வழங்கப்பட்டது. மேடையில் தளபதி அவர்கள் சான்றிதழ் வழங்கியபோது இப்படம் எடுக்கப்பட்டது. முன்னாள் பால்வளத்துறை அமைச்சர் க.சுந்தரமும் உடனிருந்தார்.


பாஸ்கரன்

**-டி.பாஸ்கரன், பகுதி முன்னாள் பிரதிநிதி, திருவொற்றியூர், சென்னை வட கிழக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### உணவுப் பஞ்சமும் துப்பாக்கிச் சூடும்

**1964-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் கடும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம், ‘உணவுப் பற்றாக்குறையே இல்லை. உணவுப் பொருள் ஏராளமாக இருக்கிறது. இங்கே பதுக்கலும் இல்லை, பதுக்கல் இல்லாமலும் இல்லை’ என விளக்கம் அளித்தார். அரிசி கேட்டுப் போராடிய மக்கள் மீது அரக்கோணம், கோவை ஆகிய ஊர்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. நீதி விசாரணை வேண்டும் என சட்டமன்றத்தில் கலைஞர் வைத்த கோரிக்கை ஏற்கப்படவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 256




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131